விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: இருபது

Valampurii

சங்கு 12 வள்ளுவர் ஆண்டு 2042 கார்த்திகை 20 செவ்வாய்க்கிழமை (06.12.2011) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 352

ரா ம் கோ

MADRAS CEMENTS LTD

RAMCO CEMENT

R A M C O

SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

# முறிந்த பேச்சுவார்த்தை இன்று மீண்டும் ஆரம்பம்

## அரசின் முடிபே அடுத்த கட்டத்தை தீர்மானிக்குமாம்

(கொழும்பு) அரசாங்கத்திற்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கும் இடையிலான அடுத்த கட்டப் பேச்சு இன்று நடைபெறவுள்ளது. பேச்சுக்கான அழைப்பை அரசு விடுத்ததாகவும் அதனை கூட்டமைப்பு ஏற்றுக்கொண்டுள்ளதாகவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.

அரசிற்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கும் இடையிலான 15வது சுற்றுப் பேச்சுவார்த்தையில் ஏற்பட்ட முரண்பாட்டையடுத்து பேச்சுவார்த்தையை அரசு முறித்துக் கொண்டதாக கூட்டமைப்பு தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (20ஆம் பக்கம் பார்க்க)

## ஐ.தே.க தலைமைப் பிரச்சினை ரணிலுக்கு எதிராக கரு!



(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைப் பதவிக்கு போட்டியிடுமாறு சஜித் பிரேமதாஸ குழுவினரால் விடுக்கப்பட்ட அழைப்பை அக்கட்சியின் உப தலைவர் கரு ஜெயசூரிய ஏற்றுக் கொண்டுள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைப் பதவிக்கு போட்டியிடுமாறு சஜித் பிரேமதாஸ குழுவினரால் விடுக்கப்பட்ட அழைப்பை தான் ஏற்றுக் கொண்டுள்ளதாக அக்கட்சியின் உப தலைவர் கருஜெயசூரிய நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் (20ஆம் பக்கம் பார்க்க)

## இணையத்தளத் தடைக்கு எதிராக நீதிமன்றில் மனு

இணையத்தளங்கள் தடைசெய்யப்பட்டமைக்கு எதிராக மேல் நீதிமன்றில் மனு ஒன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

சுதந்திர ஊடக அமைப்பின் அழைப்பாளர் சுனில் ஜயசேகரவினால் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

அரசாங்க செய்திப் பணிப்பாளர், வெகுசன ஊடக அமைச்சர், அமைச்சின் செயலாளர் மற்றும் சட்டமா அதிபர் ஆகியோருக்கு எதிராக இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இணையத்தளங்கள் தடைசெய்யப்படுவதன் மூலம் மக்களின் தகவல்களை அறிந்து கொள்ளும் உரிமை முடக்கப்பட்டுள்ளதாக மனுவில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

தடை செய்யப் (20ஆம் பக்கம் பார்க்க)

# கல்வித்துறைசார் நிகழ்வுகளுக்கு கூட்டமைப்பை அழைக்கக்கூடாது

## அரசின் உத்தரவு என்கிறார் சிறிதரன் எம்.பி

(கொழும்பு)

கல்வித்துறைசார் வைபவங்களுக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்.பிக்களை அழைக்கக் கூடாது என அதிபர்களுக்கு அரசு உத்தரவிட்டுள்ளதாக சிறிதரன் எம்.பி குற்றம் சாட்டியுள்ளார்.

வடக்கின் கல்வித்துறை அபிவிருத்திக்கு வட மாகாண ஆளுநர் தடங்கலாக உள்ளதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எஸ். சிறிதரன் நேற்று நாடாளுமன்றத்தில் கூறினார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்.பிக்களை கல்வித்துறை வைபவங்கள் எதற்கும் அழைக்க வேண்டாம் என பாடசாலை அதிகாரிகளை அரசாங்கம் கூறியுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

கிளிநொச்சியில் உள்ள பாடசாலைகள் மக்களின் விருப்பத்திற்கு மாறாக பெயர் மாற்றம் செய்யப்படுவதாவும் சிறிதரன் எம்.பி குற்றம் சுமத்தினார்.

இராணுவத்தின் அறிவுறுத்தலுக்கு இணங்க இந்நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது. வடக்கு கிழக்கில் ஆசிரியர்களுக்கு பெரும் தட்டுப்பாடு நிலவுகிறது என்றார்.

அவ்வேளை, நாடாளுமன்றத்திற்கு வந்து பதிலளிக்க முடியாத ஆளுநரை விமர்சிக்க வேண்டாம் என சிறிதரன் எம்.பியை கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தன கோரினார். தெற்கிலுள்ள பிள்ளைகளுக்கு வழங்கப்படும் வசதிகள் வடக்கிலுள்ள பிள்ளைகளுக்கும் வழங்கப்படுகிறது என அமைச்சர் கூறினார். (ஏ)



மாதகலில் அமைக்கப்படும் கடற்படை முகாமுக்கு எதிராக ஆர்ப்பாட்டத்தின் முடிபில் மகஜர் கையளிக்கபட்டபோது...

## குற்றச் செயல்களை கண்டுபிடிக்க

# தலா 8 இலட்சம் ரூபாய் செலவில் நூறு மோப்ப நாய்கள் இறக்குமதி

பொலிஸ் திணைக்களத்தின் மோப்பநாய் பிரிவுக்கு நூறு நாய்கள் இறக்குமதி செய்யப்பட்டுள்ளன.

இந்நாய்கள் ஒவ்வொன்றினதும் பெறுமதி, சுமார்5 இலட்சம் ரூபாய் ஆகும். போக்குவரத்து மற்றும் ஏனைய செலவுகள் உட்பட ஒவ்வொன்றுக்குமான செலவு சுமார் 7 இலட்சத்து 75 ஆயிரம் ரூபாய் என பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

பெல்ஜியம், நெதர்லாந்து, பிரிட்டன், ஜேர்மனி ஆகிய நாடுகளில் இருந்து இந்நாய்கள் இறக்குமதி செய்யப்பட்டுள்ளன.

போதைப்பொருட்களை கண்டறிதல், குற்றவியல் சம்பவங்கள் தொடர்பான மோப்பம் பிடித்தல் ஆகியவற்றுக்கு இந்த நாய்கள் பயன்படுத்தப்படவுள்ளன.

மோப்ப நடவடிக்கைகளுக்கு பயன்படுத்துவதற்கு இலங்கையினால் வாங்கப்படக்கூடிய மிகச்சிறந்த நாய்கள் இவையாகும் என டாக்டர் தங்கொல்ல கூறினார்.

மேற்படி நாடுகளில் இருந்து கிடைத்த 240 விண்ணப்பங்களில் இருந்து இந் நாய்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

பேராதனைப் பல்கலைககழகத்தின் மிருக வைத்தியபீடத்தை சேர்ந்த டாக்டர் அசோக் தங்கொல்ல மற்றும் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் சிசிர வீரகோன் ஆகியோரினால் இத் தெரிவுகள் மேற்கொள்ளப்பட்டன.(எ-11)

# மாதகலில் கடற்படை முகாம் அமைக்க பொது மக்களின் காணிகள் அபகரிப்பு

## கண்டித்து நேற்று ஆர்ப்பாட்டம்

(யாழ்ப்பாணம்)

மாதகலில் கடற்படை முகாம் அமைப்பதற்காக பொதுமக்களின் காணிகளை அபகரிக்கத் திட்டமிட்டுள்ளதாகக் கூறி அப்பகுதி மக்கள் வலி. தென் மேற்கு பிரதேச சபையிடம் மகஜர் ஒன்றினை கையளித்து உள்ளனர்.

வலி.தென்மேற்கு பிரதேச சபைக்கு முன்பாக நேற்றுக் காலை 9.30 மணியளவில் ஒன்றுகூடிய ஜே-152 கிராம சேவையாளர் பிரிவைச் சேந்த மக்கள் அரசாங்கத்திற்கு எதிராக ஆர்பாட்டத்தில் ஈடுபட்டதோடு பிரதேச சபைத் தலைவர் அ.ஜெபநேசனிடம் மகஜரையும் கையளித்தனர்.

அந்த மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, 1992 ஆம் ஆண்டு யுத்தம் காரணமாக எமது உயிரைக் காப்பாற்றும் நோக்குடன் சொந்த இடத்தை விட்டு, வாழ்ந்த வீடுகளை விட்டும், எமது உடைமைகளை விட்டும் அகதிகளாக வெளியேறினோம். பல்வேறு இடங்களில் குடியேறி வாழ்ந்து வந்த நாம் அண்மையில்தான் சொந்த இடங்களில் மீள்குடியேற அனுமதிக்கப்பட்டோம்.

இதேவேளை பலருக்கு சொந்த வீடு வாசல்களை சென்று பார்க்கக்கூட அனுமதி வழங்கப்படவில்லை. தற்போது யுத்தம் முடிவுக்கு கொண்டு வரப்பட்ட நிலையிலும் சொந்த மாவட்டத்திற்குள்ளேயே அகதிகளாக வாழ்ந்து வருகின்றோம். இந்நிலையில் மாதகல் மேற்குப் பகுதியில் பாரிய கடற்படைமுகாம் அமைப்பதற்காக (20ஆம் பக்கம் பார்க்க)

அன்பு வாசகர்களே!
புகழ்பெற்ற சோதிட மேதை
சிவல்புரி சிங்காரம்
எழுதும்
சனிமாற்றம்
நாளை முதல்
உங்கள் வலம்புரியில்
வாசிக்கத்
தவறாதீர்கள்

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்




வடமராட்சி கல்வி வலய பாடசாலையின் விளையாட்டு விழாவின் பரிசளிப்பு நிகழ்வு நேற்று பிற்பகல் 2.30 மணியளவில் நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் ஆராதன மண்டபத்தில் வலயக் கல்விப்பணிப்பாளர் கே.நந்தகுமார் தலைமையில் இடம்பெற்றது. அதில் விருந்தினர்கள் அழைத்துவரப்படுவதனையும் கிரிக்கெட்டில் வெற்றி பெற்ற வடமராட்சி வட இந்து மகளிர் கல்லூரி அணியினரையும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களையும் படத்தில் காணலாம். (படங்கள்: கரவெட்டி செய்தியாளர்)

# மீளக் குடியேறிவரும் மக்களின் நஷ்டஈட்டை அதிகரிக்க வேண்டும்

## சமாதான நல்லிணக்க குழு வலியுறுத்தல்

(யாழ்ப்பாணம்)

போரினால் பாதிக்கப்பட்டு மீள்குடியேறி வரும் மக்களுக்கு வழங்கப்படும் நஷ்டஈட்டுத் தொகையை அதிகரிக்க வேண்டுமென சமாதானத்திற்கும் நல்லெண்ணத்துக்குமான மக்கள் குழுவினர் தெரிவித்துள்ளனர்.

யாழ்ப்பாணம் ஆயர் இல்லத்தில் நேற்று இடம்பெற்ற பத்திரிகையாளர் சந்திப்பின் போது இந்தக்குழுவினர் மேற்கண்டவாறு தெரிவித்தனர்.

இந்த சந்திப்பின் போது யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணை வேந்தரும் வாழ்நாள் பேராசிரியரும் சமாதானத்திற்கும் நல்லெண்ணத்திற்குமான மக்கள் குழுவின் தலைவருமான பொ.பாலசுந்தரம் பிள்ளை, குழுவின் செயலாளர் எஸ். பரமநாதன் மற்றும் குழுவின் பிரதிநிதி ஆகியோரும் கலந்து கொண்டிருந்தனர்.

அங்கு அவர்கள் மேலும் தெரிவிக்கையில், கடந்த இரண்டாம் திகதி வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறியை அவரது அலுவலகத்தில் வைத்து பிற்பகல் 2 மணியளவில் சமாதானத்திற்கும் நல்லெண்ணத்திற்குமான மக்கள் குழு சந்தித்து கலந்துரையாடியது.

அதில் சுகாதாரம், மீள்குடியேற்றம், மின்சாரம், வீதி, பாடசாலைகள் மற்றும் பயிற்சிக் கல்லூரிகள், பழைய பூங்கா, வடமாகாண புகையிரத சேவை, மீன்பிடி, வைத்தியசாலைகள், சட்டம், வழுக்கையாற்றுத்திட்டம், கடவுச்சீட்டு காரியாலயம், கைத்தொழில்கள் போன்ற பல்வேறு விடயங்கள் தொடர்பாக கலந்துரையாடப்பட்டது.

குறிப்பாக மீள்குடியேற்றப்படும் மக்களுக்கு அரசாங்கத்தினால் வழங்கப்படும் நஷ்டஈட்டுத் தொகைகள் போதுமானதாக இல்லை.

1997 ஆம் ஆண்டு சுற்றுநிருபத்திற்கு அமைவாகவே நஷ்ட ஈடுகள் இன்றும் வழங்கப்பட்டு வருகின்றன. இதில் மாற்றம் கொண்டு வரப்பட வேண்டும்.

பாதிக்கப்பட்ட மக்கள் அரசாங்கத்தினால் வழங்கப்படும் நஷ்டஈட்டுத் தொகை மூலம் தாம் இழந்தவற்றில் சிலவற்றையாவது மீட்பதற்கு வழிவகைகள் செய்து கொடுக்கப்படவேண்டும்.

மேலும் மீள்குடியேற்றப்பகுதிகளில் மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த உதவிகள் வழங்கப்படவேண்டும். அத்தோடு உள்கட்டுமான வசதிகள் பூர்த்தியாக்கப்படவேண்டும்.

வடமாகாணத்தில் புகையிரத சேவை விரைவாக செயற்பட ஆரம்பிக்க வேண்டும்.

பழைய பூங்கா தொடர்பாக ஏற்பட்டுள்ள சர்ச்சைகளை உடனடியாக நீக்குவதோடு பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவேண்டும்.

வடமாகாணத்தில் குறிப்பாக வவுனியா அல்லது யாழ்ப்பாணத்தில் கடவுச்சீட்டு காரியாலயம் ஒன்றை விரைவாக அமைக்க வேண்டும்.

புதிய தொழிற்சாலைகளை அமைப்பதோடு செயலிழந்துள்ள அச்சுவேலி கைத்தொழில் பேட்டை போன்றவற்றை மீளவும் இயங்கவைப்பதன் மூலம் பலருக்கு தொழில் வாய்ப்பினை பெற்றுக்கொடுக்கமுடியும்.

வடமாகாணத்திலுள்ள வெற்றிடங்களை நிரப்புவதற்கான நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ள வேண்டும். குறிப்பாக 150 கிராமசேவையாளர்களுக்கான வெற்றிடங்கள் உள்ளன எனப் பல்வேறு விடயங்கள் வலியுறுத்தப்பட்டதாக அந்தக் குழுவினர் தெரிவித்தனர். (எ-6)

# இலவச பாடநூல் வழங்கும் நிகழ்வு இன்று கிளிநொச்சியில்

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண பாடசாலைகளுக்கு 2012 ஆம் ஆண்டுக்கான இலவச பாடநூல் வழங்கும் நிகழ்வு இன்று காலை 9 மணிக்கு கிளிநொச்சி மத்திய கல்லூரியில் வடமாகாண கல்விப்பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் அதிதிகளாக வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி மற்றும் கல்வி அமைச்சின் செயலாளரும் ஆளுநரின் செயலாளருமான எல்.இளங்கோவன் ஆகியோர் கலந்து கொள்கின்றனர்.

இந்த நிகழ்வில் அதிபர்களையும் அழைக்கப்பட்ட மாணவர்களையும் உரிய நேரத்தில் சமுகமளிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. இதே வேளை சகல பாடசாலைகளிலும் இன்று பாடநூல்கள் வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ-5)

## வடக்கில் வைத்தியசாலைகளை அமெரிக்கா திருத்துவதா?

# பொங்கினார் வீரவன்ஸ சமாளித்தார் ஜனாதிபதி மகிந்த

(கொழும்பு)

இலங்கையில் இடம்பெற்ற போரினால் வடபகுதியில் சேதமடைந்த மருத்துவமனைகளை திருத்துவதற்கு அமெரிக்கா முன்வந்துள்ளமை குறித்து கடந்த 30ஆம் திகதி இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் காரசாரமான விவாதம் இடம்பெற்றுள்ளதாக தெரியவருகின்றது.

வடபகுதியில் சேதமடைந்த மருத்துவமனைகளை திருத்தி அமைக்கவும், புதிய மருத்துவமனைகளை நிர்மாணிக்கவும் அமெரிக்காவின் புசுபிக் கட்டளைப்பீடம் உதவிகளை வழங்குவதற்கு முன்வந்துள்ளது.

அமெரிக்க பசுபிக் கட்டளைப்பீடத்தினால் வழங்கப்படவுள்ள இந்நிதியுதவி சர்வதேச அபிவிருத்திக்கான அமெரிக்க நிலையத்தின் (யுஎஸ்எய்ட்) கொழும்பு அலுவலகம் ஊடாக வழங்கப்படவுள்ளது.

இந்நிலையில், இத்திட்டத்துக்கு அனுமதி வழங்கும் பிரேரணை ஒன்றை சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன கடந்த புதன்கிழமை இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் சமர்ப்பித்த போது, இந்தப் பிரேரணைக்கு அமைச்சர் விமல் வீரவன்ச கடும் எதிர்ப்புத் தெரிவித்தார்.

அமெரிக்க படைத்தரப்பின் தலையீடு இலங்கையில் ஏற்படுவதற்கு இது வழிவகுக்கும் என்பதால், இதற்கு அனுமதி வழங்கக் கூடாது என விமல் வீரவன்ச கூறியுள்ளார்.

அமெரிக்கப் படையினர் ஏனைய நாடுகளில் மேற்கொண்ட தந்திரோபாயம் போல், இலங்கையில் மருத்துவமனைகளை திருத்துவது என் பெயரில் அமெரிக்கப் படையினரைக் கொண்டு வருவதற்கான தந்திரமாக இது இருக்கலாம் என அவர் அச்சம் வெளியிட்ட போது, ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலையிட்டு அவரை சமாதானப்படுத்தியதாக தெரிவிக்கப்படுகின்றது.



அத்துடன் விடுதலைப் புலிகளுக்கு எதிரான போரின்போது படையினரின் நடவடிக்கைகளுக்கு அமெரிக்கப் பாதுகாப்புத் திணைக்களம் ஆதரவு வழங்கியதாகவும் மகிந்த ராஜபக்ஷ இதன்போது கூறியுள்ளார்.

அதேவேளை, அமெரிக்க இராஜாங்கத் திணைக்களமே இலங்கைக்கு எதிராக பல்வேறு பிரச்சினைகளை கிளப்பியதாகவும் விமல் வீரவன்ஸ விடம் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கூறியதாகவும் தெரியவந்துள்ளது. (ஏ)

# தமிழ் பேச முடியாமைக்கு வெட்கப்படுகிறேன்!

## அமைச்சர் ஹெகலிய தெரிவிப்பு

(கொழும்பு)

தமிழ்மொழியை பேசமுடியாமைக்கு வெட்கப்படுகின்றேன் என ஊடகத்துறை அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

கண்டி, ஹந்தானை சிவானந்தா தமிழ் வித்தியாலய வருடாந்த பரிசளிப்புவிழா நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

இந் நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்து உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்கு தொடர்ந்து உரையாற்றிய அவர், தமிழ் மற்றும் சிங்களம் ஆகிய இரண்டு மொழிகளையும் பேசமுடியுமாயின் எமது பிரச்சினைகளில் அதிகம் தீர்ந்துவிடும்.

எனக்கு தமிழ் மொழியில் 5 சொற்கள் பேசமுடியுமாயின் இந் நாட்டு குடி மக்களது பெருமை மிகு தந்தைகளில் ஒருவனாக நான் திகழ்வேன்.

கடந்த 30 வருடமாக நாம் இருள் சூழ்ந்த ஒரு காலகட்டத்தில் இருந்தோம். தற்போது ஒளிமயமான ஒரு காலகட்டத்தின் ஆரம்பத்தில் இருக்கின்றோம்.

எனவே நாடு சுபீட்சமடைய வேண்டுமாயின் சகல தரப்பினரும் சமாந்தரமாக முன்னேற வேண்டும் ஒரு தரப்பு பின்நிற்க முடியாது. அப்படியாயின் பெருந்தோட்டப்பகுதி கல்வி அபிவிருத்திக்கு நாம் அனைவரும் ஒன்றிணைந்து உதவவேண்டும்.

அவ்வாறாயின் மட்டுமேஜனாதிபதியின் இலக்கான ஆசியாவின் சுபீட்சமிக்க நாடாக எமது நாட்டை மாற்ற முடியும் என்றார். (ஏ)





**மகிஷி சங்காரம்**

உரும்பிராய் சந்தி சிவதர்ம சாஸ்த்தா ஆலயம் (ஐயப்பன் கோயில்) இன்று மாலை 3 மணி தொடக்கம் 5.30 மணிவரை வெகு விமரிசையாக நடைபெறவுள்ளது. சுவாமிமார்கள், அடியார்கள் வருகை தந்து ஐயனைத் தரிசிக்கவும்.

குறிப்பு: (வடமராட்சி) அடியார்கள் மகிஷிசூரன் போரை (சுப்பர் மடம்) சிறப்பாக நிகழ்த்துவார்கள்.

தர்மகர்த்தா
ஆலய குருசுவாமி
தா. வாசுதேவசிவாச்சாரியார்

இங்ஙனம்
ஸ்ரீ போட்டோ கோண்டாவில்
உபயம்

சுவாமி சரணம்

(6907)


# வானில் வந்தோரால் வர்த்தகர் கடத்தப்பட்டார்

(கொழும்பு)

கொழும்பு ஜெம்பகா வீதியில் நேற்று கடத்தல் சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது. பிற்பகல் 2.15 மணியளவில் வாகனம் ஒன்றில் வந்த இனந்தெரியாத சிலர், வர்த்தகர் ஒரு வரை கடத்திச் சென்றதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோகன தெரிவித்துள்ளார்.

இந்த சம்பவத்தில் கிறிஸ்தோபர் பெர்னாண்டோ (வய்து 50) என்ற வர்த்தகரே கடத்தப்பட்டவராவார். கடத்தல் தொடர்பாக அவரது உறவினர்கள் கொட்டாஞ்சேனை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளனர்.

குறித்த நபர் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் போட்டியிட்டவரின் தந்தை என்பது குறிப்பிடத்தக்கது. (எ-11)

# இன்று ஒரு தகவல்

## நேர்காணல்

எனக்குத் தெரிந்த ஒருவர்; அவர் ஒரு பத்திரிகை நிறுவனத்தில் நிருபராக இருந்தார். அடிக்கடி பலரைச் சந்தித்து பத்திரிகைகளுக்காக "பேட்டி" எடுப்பார். இந்தப் "பேட்டி" என்பது தமிழிலே "நேர்காணல்" என்று பொருள்படும். இது ஒரு தனிக்கலையாகும்.

"கேள்வி கேட்கும் வேலை தானே. அது ஒரு பெரிய காரியமா?" என்று பலர் தப்பாக நினைப்பதுண்டு.

ஒரு சர்வாதிகார நாட்டிலே கேள்விகளைக் கேட்பது கஷ்டம். ஜனநாயக நாட்டிலே பதில் சொல்வது மிகவும் கஷ்டம் என்று சொல்வது வழமையான ஒன்றாகும்.

எந்த நாடாக இருந்தாலும்; ஒரு பத்திரிகை பேட்டிக்காக கேள்வி கேட்பது என்பது மிகவும் சாமர்த்தியம் வேண்டும்.

ஒரு பத்திரிகைக்காக ஒருவரை பேட்டி காணப்போகும் போது என்னென்ன விடயத்தை ஞாபகத்திலே வைத்துக் கொள்ள வேண்டும் என்பதைப்பற்றி ஒரு பத்திரிகையிலே சில குறிப்புகளைப் பார்த்தேன். அதைத்தான் இப்போது இங்கே சொல்லப்போகிறேன்.

சுதந்திரப் போராட்டத்திலே ஈடுபட்ட ஒரு பெரியவரை பேட்டி காண்கிறீர்கள். உங்களின் பழைய அனுபவத்தை கூறுங்கள் என்று கேட்கிறீர்கள்.

"நாற்பது வருடத்துக்கு முன்னால் நான் கொல்கத்தாவிலே இருக்கும்போது" என்று ஆரம்பித்தார்.

உடனே நீங்கள் குறுக்காகப் பாய்ந்து "என்ன திகதி? என்ன கிழமை? என்ன நேரம்?" என்று கேட்கலாம். அடுத்தடுத்து கேள்விக் கணைகளைத் தொடுக்கக் கூடாது.

கடைசியிலே வேண்டுமென்றால், அவரிடமோ அல்லது மற்றவர்களிடமோ திகதியைக் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம்.

ஒரு பெரிய பிரமுகரை பேட்டி காணப்போகிறீர்கள். அவர் இடுப்பிலே ஒரு துண்டை கட்டிக் கொண்டு தோட்டத்துச் செடிக்கு தண்ணீர் பாய்ச்சிக் கொண்டிருந்தார்.

அதைப் பார்த்து நீங்கள் ஆச்சரியப்படுகிற மாதிரி காட்டிக் கொள்ளக்கூடாது. இயல்பாகவே நடந்து கொள்ள வேண்டும்.

ஒரு விடயத்தை உங்களுக்குச் சொன்னபின்பும் இதை பத்திரிகையிலே போட வேண்டாமென்று சொன்னால்... அதைப் போட வேண்டாம்.

அவர் கூறும் விடயம் அல்லது பதில் உங்களுக்குப் புரியவில்லையென்றால், அதை மறுபடியும் கேட்டு விளங்கிக் கொள்வதில் ஒன்றும் பிழையில்லை.

நீங்கள் அவரை நோக்கி கேட்டுக் கொண்டிருக்கும் போது அதற்கு அவர் பதில் சொல்லாமல் அவர் திரும்பவும் உங்களிடம் கேள்விகளைக் கேட்க ஆரம்பித்து விடுகிறார் என்று வைத்துக் கொள்வோம்.

நீங்கள் உடனேயே எச்சரிக்கையாகி விடவேண்டும். ஏனென்றால், அவர் உங்களை திசை திருப்பி எங்கேயாவது அழைத்துக் கொண்டுபோய் விடுவார்.

உங்களுக்கு நன்றாகத் தெரிந்த ஒரு விடயத்தையே ஒருவர் உங்களிடம் விளக்கமாகச் சொல்லிக் கொண்டிருக்கிறார்.

அதுதான் எனக்குத் தெரியுமே என்ற மாதிரி பேசாதீர்கள். உங்களுக்கு எதுவுமே தெரியாது என்ற மாதிரி இருந்து கொண்டு கேள்வி கேளுங்கள்.

"இந்த விடயத்தை இன்னும் விளக்கமாகக் கூறமுடியுமா என்றும் கேளுங்கள்?" அதனால் நீங்கள் ஒன்றுமே குறைந்து போகமாட்டீர்கள்.

ஒரு "பேட்டி" எடுக்கும் போது நீங்கள் அதிகமாகப் கதைத்துக் கொண்டிருக்கக்கூடாது.

சிறிது கடினமான கேள்வியாக இருந்தால் ஒரு தடவைக்கு இரண்டு தடவையாக கேட்கலாம். இரண்டாவது தடவை கேட்கும்போது சிறிது வித்தியாசப்படுத்திக் கேட்கலாம்.

இவையெல்லாம் பேட்டி காண்கிறவர்களுக்கு அனுபவசாலிகள் கூறுகின்ற யோசனைகள். இவையெல்லாவற்றையும் விட சொந்த அனுபவத்திலேயிருந்து கற்றுக் கொள்ள வேண்டியதுதான் அதிகம்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# பூநகரி பிரதேச செயலாளர் பிரிவில் உபபிரிவு பதிவு காரியாலயம்

## கிளி. அரச அதிபர் ரூபவதி கேதீஸ்வரன் தெரிவிப்பு

கிளிநொச்சி மாவட்டத்தில் இறப்பு, பிறப்பு காரியாலயத்தினால் ஆளணி பற்றாக்குறையுடன் இருக்கும் இக்காரியாலயம் நாளாந்தம் 250 இற்கு மேற்பட்ட இறப்பு, பிறப்பு,விவாகப்பதிவு சான்றிதழ்கள் வழங்கப்பட்டு கொண்டிருக்கின்றன.

இவ்வருட தை மாதம் முதல் மார்கழி முதலாம் திகதி வரை எவ்வித பதிவுகளும் இல்லாத பிறப்பு ,இறப்பு விவாகப்பதிவு சான்றிதழ்கள் 11 ஆயிரத்து 225 மற்றும் பதிவிலக்கமும் பதிவு திகதியும் தெரிந்த சான்றிதழ்கள் 26 ஆயிரத்து 620 உம் காணி தொடர்பான சான்றிதழ்கள் 2 ஆயிரத்து 317 உம் வழங்கப் பட்டுள்ளதாக கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.மேலும் பூநகரி பிரதேச செயலர் பிரிவில் உள்ள மக்கள் கிளிநொச்சிக்கு வந்து சான்றிதழ்களை பெறுவதில் ஏற்படுகின்ற சிரமங்களை தவிக்கும் வகையில் பூநகரி பிரதேச செயலகத்தில் உபபதிவு காரியாலயம் ஒன்றை வெகு விரைவில் நிறுத்தவுள்ளதாகவும் இதற்குரிய ஆரம்ப கட்டவேலைகள்நடைபெற்றுக்கொண்டிருப்பதாகவும் தெரிவித்தார். (அ- 3-15).

## வர்த்தகர்களுக்கான கலந்துரையாடல்

(யாழப்பாணம்)

யாழ்ப்பாண வர்த்தகர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக யாழ்.பொலிஸ் அதிகாரிகளுடனான கூட்டம் நாளை புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ்.வணிகர் கழக பணிமனையில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்திற்கு யாழ்.வர்த்தகர்கள் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு யாழ்.வணிகர் கழகம் அறிவித்துள்ளது. (அ)

## ஆயுர்வேத வைத்தியசாலை மாதக்கணக்கில் மூடல்

(யாழ்ப்பாணம்)

போக்குவரத்து வசதிகள் குறைந்த யாழ்ப்பாணம்- அனலை தீவில் இயங்கி வந்த பிரதேச சபைக்கு உட்படுகின்ற ஆயுர்வேத சிகிச்சை நிலையம் வைத்தியர் ஒருவர் இல்லாத காரணத்தினால் பல மாதங்களாக மூடப்பட்டுள்ள நிலையில் இருக்கின்றது.

இந்த கிராம மக்கள் ஆயுர்வேத சிகிச்சை பெற பயணிகள் படகுகள் மூலமாக ஊர்காவற்றுறை ஆயுர்வேத சிகிச்சை நிலையத்திற்கு வந்து சிகிச்சை பெற வேண்டிய நிலையுள்ளது. உரிய அதிகாரிகள் இம் மக்களின் சிரமத்தினை போக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். (அ)

## குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 80 | 100 | 80 |
| உருளைக்கிழங்கு | 70 | 90 | 60 |
| பச்சைமிளகாய் | 250 | 270 | 240 |
| தக்காளி | 140 | 160 | 140 |
| மரவள்ளிக்கிழங்கு | 25 | 30 | 30 |
| கோவா | 60 | 90 | 70 |
| கரட் | 80 | 140 | 80 |
| பூசணி | 60 | 60 | 60 |
| புடோல் | 40 | 60 | 40 |
| வாழைக்காய் | 35 | 40 | 35 |
| சின்ன வெங்காயம் | 50-80 | 100 | 90 |
| பெரிய வெங்காயம் | 70 | 70 | 70 |
| பாகற்காய் | 90 | 160 | 100 |
| வெண்டிக்காய் | 30 | 60 | 30 |
| கருணைக் கிழங்கு | -- | 60 | 60 |
| பயற்றங்காய் | 110 | 160 | 110 |
| லீக்ஸ் | 40 | 90 | 50 |
| பீற்றூட் | -- | 70 | -- |
| கறிமிளகாய் | 140 | 180 | 130 |
| முருங்கைக்காய் | -- | 130 | 120 |
| போஞ்சி | 140 | 140 | -- |
| கத்தரிதம்புள்ள | 40 | 70 | 50 |
| கீரை - 1 பிடி | 15 | 40 | 20 |
| தேசிக்காய் | 140 | 150 | 150 |
| தேங்காய் (ஒன்று) | 30 | 25 | 25 |

# இராசி பலன்

*6.12.2011*
*(கார்த்திகை 20, செவ்வாய்க்கிழமை)*
*சூரிய உதயம் காலை 6.09 மணிவரை*
*ஏகாதசி பிற்பகல் 1.26 மணிவரை*
*ரேவதி முற்பகல் 10.15 மணிவரை*
*இராகுகாலம் 3.17-4.47 மணிவரை*
*சுபநேரம் 10.47-12.17 மணிவரை*
*ஏகாதசி விரதம், சித்தாமிர்தம்*

**மேடம்** உடல்நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், கொடுத்த வாக்கை காப்பாற்ற நண்பர்கள் கடைசி நேரத்தில் கைகொடுத்து உதவுவர், கனவு பலிதமுண்டு, வழிபாட்டால் ஆனந்தம் காணவேண்டிய நாள்.

**இடபம்** விருப்பங்கள் நிறைவேற விநாயகரை வழிபட வேண்டிய நாள், சேமிப்பில் சிறிது கரையலாம், குடும்பத்தினருடன் குதூகலப்பயணம் ஒன்றை மேற்கொள்ளும் சூழ்நிலை அமையலாம், சயன சுகக்குறைவான நாள்.

**மிதுனம்** எண்ணிய காரியங்கள் எளிதில் நிறைவேறும், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காண்பீர்கள், தொழிலில் உயர்ந்த நிலையடைய சந்தர்ப்பமுண்டு, மகிழ்ச்சிகரமான நாள்.

**கடகம்** குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை அமையலாம், தொலைபேசி வழித் தகவல் தொழில் வளர்ச்சிக்கு உறுதுணை புரியும், ஆரோக்கியமான நாள், வாழ்க்கைத்தரம் உயர வழிவகை செய்து கொள்வீர்கள்.

**சிங்கம்** தொழிலில் ஏட்டிக்குப் போட்டியாக இருந்தவர்கள் விலகுவர், தேகாரோக்கியத்தில் தெளிவு பிறக்கும் நாள், பயனாளிகளால் பலனுண்டு, சிலருக்கு கட்டுப் பட்டு நடக்கும் சூழ்நிலை உருவாகலாம்.

**கன்னி** கவலைகள் தீர கந்தனை வழிபட வேண்டிய நாள், குடும்ப பெரியவர்கள் உங்கள் செயற்பாடுகளில் குறை கண்டு பிடிக்கலாம், மறதியால் சில தொல்லைகளுக்கு ஆட்பட நேரிடலாம், வாகன பழுதுச் செலவுகள் உருவாகும்.

**துலாம்** குலதெய்வ வழிபாடுகளில் ஆர்வம் காட்டுவீர்கள், தம்பதியினரிடையே அந்நியோன்னியம் அதிகரிக்கும், திட்டமிட்ட வெளியூர் பயணங்கள் செல்ல நேரிடலாம்.

**விருச்சிகம்** பொதுவாழ்வில் புகழ் கூடும், விரதம், வழிபாடுகளில் நம்பிக்கை கூடும், பயணங்களால் பலனுண்டு, மனக்குழப்பம் அகலும், திட்டமிட்ட காரியங்கள் திட்டமிட்டபடியே நடைபெறும்.

**தனுசு** கேளிக்கை, கொண்டாட்டங்களில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, நெடுநாளைய கனவுகள் நனவாகலாம், சொத்துக்கள் வாங்க போட்ட திட்டங்களில் வெற்றி கிடைக்கும், நல்ல செய்திகள் வந்து சேரலாம்.


**மகரம்** செவி குளிரும் செய்திகள் வந்து சேரலாம், வெளியூர்த் தொடர்புகள் அதிகரிக்கும், பிறருக்காக எடுத்த முயற்சிகள் வெற்றியளிக்கும், பெற்றோரின் தேவைகளைப் பூர்த்தி செய்வீர்கள்.

**கும்பம்** முயற்சிகளில் முத்தான வெற்றி கிடைக்கும், பொல்லாதவர்கள் உங்களை விட்டு விலகுவர், பெண் தெய்வ வழிபாடு பெருமை சேர்க்கும், தடைப்பட்ட காரியங்கள் கைகூடும்.

**மீனம்** எதிர்பாராத தனவரவுகள் வந்து சேரலாம், இறை வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், சுப காரியப் பேச்சுக்கள் முடிவாகி மன நிம்மதியைக் கொடுக்கும்.

வளவன்





அமரர் வீரசிங்கத்தின் 47 ஆவது நினைவு தினம் வீரசிங்கம் மண்டபத்தில் நேற்று காலை நடைபெற்றது. இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட இலங்கைத் தேசிய கூட்டுறவுச் சங்கங்களின் தலைவர் பந்துரனவக அமரர் வீரசிங்கத்தின் உருவப்படத்திற்கு மாலை அணிவிப்பதையும் யாழ். மாவட்ட கூட்டுறவுச் சபைத் தலைவர் இ.இராஜாராம், அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமாரிடம் கூட்டுறவு அபிவிருத்தி செய்ய வேண்டிய வேலைத்திட்டங்கள் தொடர்பாக மகஜர் ஒன்றை கையளிப்பதையும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்:-சாளீன்)

## குமாராலய தீபம்

மாவிட்டபுரம் ஸ்ரீ கந்தசாமி கோவிலில் நாளை மறுதினம் வியாழக்கிழமை திருக் கார்த்திகை திருவிழா வெகுசிறப்பாக நடைபெறவுள்ளது.

இவ்விசேட பூசை நிகழ்வின் போது பக்தர்கள் அனைவரையும் ஆசாரசீலர்களாக ஆலயத்திற்கு வருகைதந்து மாவிளக்கேற்றி விசேட அபிஷேகம், சண்முகார்ச்சனைகளில் கலந்து கொள்ளுமாறும் மாவிளக்கு மற்றும் அர்ச்சனைப் பொருட்களை ஆலயத்தில் பெற்றுக் கொள்ளலாம் எனவும் ஆதீனகர்த்தா தெரிவித்துள்ளார். (அ)

## கலந்துரையாடல்

யாழ்.மாவட்ட தொண்டராசிரியர்களுக்கான அவசர கலந்துரையாடல் இன்று செவ்வாய்க்கிழமை காலை 9.00 மணிக்கு ஆரியகுளத்தடியில் அமைந்துள்ள புதிய் உயர் கலைக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இக்கலந்துரையாடலில் அனைத்துத் தொண்டராசிரியர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு சங்கத் தலைவர் கேட்டுள்ளார். (அ)




# வேலையற்றிருக்கும் இளைஞர், யுவதிகளுக்கு வேலைவாய்ப்பு பெற்றுக்கொடுக்கப்பட வேண்டும்

## யாழ்.அரச அதிபர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்திலுள்ள 15 பிரதேச செயலகங்களில் 5 பிரதேச செயலகங்களில் மக்கள் 25 வருடகாலமாக தமது சொந்த இடங்களில் மீள்குடியமர்த்தப்படாமல் இருந்துள்ளனர்.

ஆயினும் தற்போது 4 பிரதேச செயலகங்களில் மக்கள் மீளக் குடியமர்த்தப்பட்டுள்ளனர் என யாழ். அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் தெரிவித்துள்ளார்.

கூட்டுறவாளர் அமரர் வீரசிங்கத்தின் 47 ஆவது ஆண்டு நிறைவு நாள் நேற்று யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ். மாவட்டத்தில் மட்டுமின்றி தேசிய ரீதியிலும் அறியப்பட்ட அமரர் வீரசிங்கத்தின் நினைவு நாளை யாழ். மக்கள் என்றும் மறக்க முடியாது. அவருக்கு மதிப்பளிக்க இங்கு கூடியுள்ளோம்.

நாம் அவருக்கு மரியாதை செலுத்த வேண்டுமாயின் யாழ்.மாவட்டத்தில் கூட்டுறவுத் துறையினை பெறுமதிமிக்க சேவைநலன் கொண்ட துறையாக மாற்ற வேண்டும்.

இதுவரையில் யாழ். மாவட்ட கூட்டுறவுச் சங்கத்திற்கு 6 மில்லியன் ரூபாவினை வழங்கியுள்ளோம். எனினும் கடந்த காலங்களில் தீர்க்கப்படாத பிரச்சினைகள் காரணமாக பல மில்லியன் ரூபாய்கள் நிலுவையிலுள்ளன.

நாம் அதனைப் பெற முயற்சித்து யாழ். கூட்டுறவுச் சபையினை அபிவிருத்திசெய்வோம்.

யாழ். மாவட்டத்திலுள்ள பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களினை குறிப்பாக இடம் பெயர்ந்த மக்கள் மீளக்குடியமர்ந்துள்ள பிரதேசங்களில் உள்ள கூட்டுறவுச் சங்கங்களை 70 மில்லியன் ரூபா செலவில் அபிவிருத்தி செய்ய அல்லது மீள இயக்கவுள்ளோம்.

யாழ். மாவட்டத்தில் மீளக் குடியமர்ந்த மக்களில் 60 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்களுக்கு வீடு தேவையாகவுள்ளது.

எனினும் அவர்களில் 25 ஆயிரம் மக்களுக்கே வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளன. இது இவ்வாறிருக்க சில அரச உத்தியோகத்தர்களும் தமக்கு வீடுகள் கட்டித் தரப்பட வேண்டும் என்கின்றனர். மீளக் குடியமர்ந்த வீடுகள் கொடுக்கப்படாத 35 ஆயிரம் மக்களை இவர்கள் கொஞ்சம் சிந்தித்து பார்க்க வேண்டும்.

எனினும் சில அரச உத்தியோகத்தர்கள் தமது செல்வாக்கினைப் பயன்படுத்தி கிராம சேவையாளர் பிரதேச செயலர்களிடமிருந்து சிபார்சினைப் பெற்று வீட்டுத்திட்டங்களைப் பெற்றுள்ளனர்.

ஆயினும் நாம் இவ்வாறான வீட்டுத் திட்டங்களினை ஏற்றுக் கொண்டோம்.

இவ்வாறான செயற்பாடுகளை விடுத்து அரச அதிகாரிகள் தமது சம்பளத்தில் ஒரு தொகையினை ஆவது மிச்சம் பிடிக்கலாம். இங்கு தமது வாழ்விற்காக ஏங்கிக் கொண்டிருக்கும், வாழ்வின் விளிம்பில் வாழ்ந்து கொண்டிருக்கும் எத்தனையோ வறிய மக்கள் உள்ளனர். அவர்களுக்கு உதவ முதலில் முன்வர வேண்டும்.

கடந்த ஒன்றரை வருடங்களில் 35 ஆயிரம் பேர் மீளக் குடியேற்றப்பட்டுள்ளனர். இவர்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகளான கல்வி, சுகாதாரம், வீடு போன்றவற்றை உலக உதவித்திட்டத்தின் கீழும் பல நிறுவனங்களின் உதவிகளின் மூலமும் வழங்கி வருகின்றோம்.

யாழ். மாவட்டத்தில் 10 வீதமான இளைஞர்கள் வேலையற்றுக் காணப்படுகின்றனர். இவர்களில் எத்தனையோ பேர் தங்கி வாழ்வதால் நாம் முதலில் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும்.

தினமும் அழுது கொண்டு தமது வாழ்வினைத் தொலைத்த, சமூகத்தினை எதிர்கொள்ள முடியாமல் எத்தனையோ இளம் விதவைகள் வாழ்கின்றனர். அவர்களது வாழ்க்கையினை முன்னேற்றமடையச் செய்ய அவர்களுக்கு கூட்டாக உதவி புரிந்து கூட்டுறவுத்துறையினை அர்த்தமுள்ளதாக மாற்ற வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (அ-4)

# குப்பை கொட்டுவதால் மக்கள் அசௌகரியம்

வண்ணார்பண்ணை கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு அருகில் உள்ள பாலத்துக்கு கீழ் கழிவு குப்பைகளையும் இறந்த விலங்குகளின் கழிவுகளினையும் விசமிகள் இரவு வேளைகளில் கொட்டுவதால் அவ்வீதியால் பயணிக்கும் பயணிகள் பெரும் சிரமங்களை எதிர் கொள்கின்றனர்.

இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

இரவு வேளைகளிலும் அதிகாலைகளிலும் தூர இடங்களில் இருந்து மேற்படி கழிவுப் பொருட்களை கொட்டுவதால் சுகாதார சீர்கேடுகள் உருவாகுவதுடன் டெங்கு நுளம்புகள் உற்பத்தியாவதற்குரிய சந்தர்ப்பங்களும் காணப்படுகின்றன.

யாழ். மாநகர சபையினரால் மேற்படி இடம் அடிக்கடி துப்புரவு செய்யப்படுகின்ற போதும் இனத்தெரியாத விசமிகள் மீண்டும் மீண்டும் இங்கு கழிவுப் பொருட்கள் போடுகின்றனர்.

சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இதனைக் கருத்திற் கொண்டு நடவடிக்கை எடுக்குமாறு அப்பகுதி மக்களும் பயணிகளும் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ-3-15)

# கிணற்றிலிருந்து வயோதிபப் பெண்ணின் சடலம் மீட்பு

(கரவெட்டி)

தொண்டைமானாறு கெருடாவில் தெற்கு அம்மன் கோவில் பகுதில் உள்ள வீட்டுக் கிணற்றுக்குள் இருந்து நேற்றுக்காலை வயோதிப ஆசிரியர் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது,

திருமணமாகத குறித்த வயோதிபர் வீட்டில் தனித்திருந்த வேளையே இச்சம்பவம் இடம் பெற்றுள்ளது.

குறித்த பெண்ணின் வீட்டிற்கு அவரது சகோதரி வந்தபோதே இச்சம்பவம் தெரிய வந்துள்ளது.

இச்சம்பவத்தில் விஸ்வலிங்கம் சாரதா (வயது 62) என்ற வயோதிப ஆசிரியரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். சம்பவம் தொடர்பாக வல்வெட்டித்துறை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டதையடுத்து பிரேத பரிசோதனைக்காக சடலம் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் ஒப்படைக்கப் பட்டுள்ளது. (அ-3-24)

# நவிண்டில் பொதுச்சந்தையை புனரமைக்க மக்கள் கோரிக்கை




(கரவெட்டி)

நவிண்டில் பொதுச்சந்தை நீண்ட காலமாக புனரமைக்கப்படாமையால் முற்றாக அழிந்து போகும் அபாய நிலையில் உள்ளதென அப்பகுதி மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

மேற்படி பொதுச் சந்தை 100 வருடங்களுக்கு மேல் பழைமை வாய்ந்ததெனவும் முன்னைய காலங்களில் சிறப்பாக இயங்கியுள்ளதெனவும் தற்பொழுது அங்கு அடிப்படை வசதிகள் இன்றி வியாபார நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாத அவல நிலையில் உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

அத்துடன் வடமராட்சி தெற்கு, மேற்கு பிரதேச சபைக்குட்பட்ட மேற்படி சந்தையில் ஒரு மரக்கறி விற்பனையாளர் மற்றும் 3 மீன் வியாபாரிகள் மட்டுமே தமது வியாபார நடவடிக்கைகளை மேற் கொண்டு வருகின்றனர். இதனால் மக்கள் நீண்ட தூரம் சென்று நெல்லியடி, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை சந்தைகளை நாடவேண்டிய அவல நிலையும் உள்ளது.

எனவே உரிய தரப்பினர் இச்சந்தையை புனரமைத்து தருமாறு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ-3-24)

# முல்லைப்பெரியாறு அணையை உடைக்க முற்பட்டால் கடும் விளைவுகள் ஏற்படும்

## வைகோ எச்சரிக்கை

(கொழும்பு)

முல்லைப்பெரியாறு அணையை உடைக்க முற்பட்டால் கடும் விளைவுகள் ஏற்படும் என பிரதமர் மன்மோகன் சிங்கிடம் ம.தி.மு.க.பொதுச் செயலாளர் வைகோ எச்சரிக்கை விடுத்துள்ளார்.

டில்லிக்கு விஜயம் செய்துள்ள வைகோ நேற்றுக் காலை பிரதமர் மன்மோகன் சிங்கை அவரது இல்லத்தில் சந்தித்து முல்லைப் பெரியாறு அணை விவகாரம் குறித்து பேச்சுவார்த்தை நடத்திய போதே இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளார்.

சுமார் 20 நிமிடங்கள் இடம்பெற்ற இச்சந்திப்பின் பின்னர் ஊடகவியலாளர்களுக்கு கருத்துத் தெரிவித்த வைகோ முல்லைப் பெரியாறு அணை விவகாரம் தொடர்பாக தமிழக, கேரள மாநிலங்களுக்கு இடையிலான சுமுக உறவு பாதிக்கப்பட்டுள்ளதாக சுட்டிக்காட்டியுள்ளார்.

இவ்விவகாரம் தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

கேரளா கூறுவதைப் போல முல்லைப் பெரியாறு அணை பலவீனமாக இல்லை. மிகவும் பலமாக வலுவாக உள்ளது. நிலநடுக்கத்தால் அணையில் பாதிப்பு ஏற்படும் என்ற கேரளாவின் வாதம் பொய்யானதாகும்.

அணையின் பலம் மற்றும் பாதுகாப்பு குறித்து கேரளா கூறி வரும் பொய்ப் பரப்புரைகளையும் பொய்யான குற்றச்சாட்டுக்களையும் பிரதமர் நம்பக் கூடாது என்று அவரிடம் தெரிவித்தேன்.

கேரள அரசியல் கட்சியினர் சிலர் கடந்த சில நாட்களாக அணைப் பகுதியிலேயே போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர். அணையை சேதப்படுத்த முயல்கின்றனர். கடப்பாரை, சம்மட்டியுடன் சென்று உடைக்கப் போவதாக கூறினார்கள். கேரள பொலிஸாரைத் தாக்கி விட்டு உடைக்கப் போகிறார்கள்.

எனவே, இப்படிப்பட்டவர்களிடம் எங்களது அணையை பாதுகாக்க கொடுக்க முடியாது. கேரள அமைச்சரே அணையை உடைப்போம் என்றார். கேரள அரசே அணையை உடைப்பதாக கூறிய பின்னர் கேரள பொலிஸாரை எப்படி நம்ப முடியும்.


எனவே, முல்லைப்பெரியாறு அணையின் பாதுகாப்பை உறுதிசெய்ய மத்திய பொலிஸாரை அங்கு குவியுங்கள் என்று பிரதமரிடம் கேட்டுக் கொண்டேன். இதைச் செய்யாவிட்டால் முல்லைப்பெரியாறு அணை உடையும் நிலை உருவானால் அது எங்களது தென் தமிழகத்தில் மட்டும் அல்லாமல் இந்தியா முழுமைக்கும் கடும் விளைவுகளை ஏற்படுத்தும்.

சோவியத் யூனியன் போல இந்தியா சிதறிப்போகும் நிலை ஏற்படும் என்பதை பிரதமரிடம் வலியுறுத்திக் கூறினேன். அணையின் பாதுகாப்புக் கருதி அங்கு மத்தியப் படையை நிறுத்த வேண்டும் என்று முதலமைச்சர் ஜெயலலிதா வலியுறுத்தி பிரமருக்கு கடிதம் எழுதியிருப்பதை அவரிடம் சுட்டிக்காட்டி அந்தப் பாதுகாப்பைச் செய்யுமாறு கேட்டுக் கொண்டேன்.

முல்லைப்பெரியாறு அணை தொடர்பாக கேரள அரசு கூறிவரும் அனைத்துமே பொய்யானவை. எனவே, கேரள அரசின் பேச்சுக்களை யும் பரப்புரைகளையும் நம்ப வேண்டாம் என கேரள மக்களிடம் கேட்டுக் கொள்கிறேன் என வைகோ ஊடகவியலாளர்களிடம் தெரிவித்துள்ளார். (அ-2)

# வடக்கில் வேலையற்ற பட்டதாரிகள் அரசியல் நோக்கத்திற்கு பயன்படுகின்றன

## சபையில் விஜயகலா எம்.பி. தெரிவிப்பு



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் உட்பட வடபகுதியில் பட்டதாரிகள் அரசியல் தேவைகளுக்காகப் பயன்படுத்தப்பட்டு ஏமாற்றப்படுகின்றனர். வடக்கு - கிழக்கில் தொண்டர் ஆசிரியர்களின் விவகாரமும் பெரும் பிரச்சினையாக மாறியுள்ளது. எனவே, பட்டதாரிகளுக்கும் தொண்டர் ஆசிரியர்களுக்கும் நியமனங்கள் வழங்கப்பட வேண்டும் என்று ஐ.தே.க.வின் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் திருமதி விஜயகலா மகேஸ்வரன் சபையில் வலியுறுத்தியுள்ளார்.

வட மாகாணத்திலுள்ள பாடசாலைகளில் பௌதிகவளப் பற்றாக்குறையும் மனித வளப் பற்றாக்குறையும் நிலவுகின்றன. யுத்தத்தால் பாதிக்கப்பட்ட வடபகுதி மாணவர்களின் கல்வியை கட்டியெழுப்ப அரசாங்கம் விஷேட திட்டங்களை நடைமுறைப்படுத்த வேண்டும் என்றும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

வரவு செலவுத் திட்டத்தின் குழு நிலை விவாதத்தில் நேற்று உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

இங்கு அவர் மேலும் கூறியதாவது,

யுத்தத்தால் மிக மோசமான அழிவுகளை சந்தித்த வட மாகாணத்தில் கல்வி வளர்ச்சியானது இன்னமும் குன்றிய நிலையிலேயே காணப்படுகின்றது. இந்த நிலையில் அவர்களின் கல்வி வளர்ச்சிக்கு அரசாங்கம் ஏனைய இடங்களைவிடவும் அதிகளவு உதவிகளை, ஒத்துழைப்புக்களை வழங்க வேண்டும்.

யுத்தத்தால் பாதிக்கப்பட்ட வடபகுதி மாணவர்கள் மீண்டும் கல்வியில் சிறந்து விளங்குவதற்கு நாம் அனைவரும் ஒன்றிணைந்து விசேட திட்டங்களை செயற்படுத்த வேண்டும். இதற்கான நடவடிக்கைகளை கல்வியமைச்சு எடுக்க வேண்டியது இன்றியமையாதது.

யாழ். குடாநாட்டில் மாத்திரம் 2005 ஆம் ஆண்டு முதல் 2011 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் பட்டதாரிகளாக வெளியேறிய 2000 இற்கும் மேற்பட்டோர் வேலை வாய்ப்பின்றி தமது வாழ்வாதாரத்தை கொண்டு செல்ல முடியாது அவலங்களை சந்தித்து வருகின்றனர்.

வேலைவாய்ப்பின்றி அல்லல்படும் நாம் உளவியல் ரீதியான தாக்கத்தினால் பாதிக்கப்பட்டுள்ளோம். தனியார் நிறுவனங்களில் வேலைக்குச் செல்வதானால் அதற்கு வயதெல்லையொன்று உள்ளது. இத்தகைய வயதெல்லையை நாம் தாண்டியுள்ளமையால் தனியார் துறையில் கூட வேலை எடுக்க முடியாத நிலை காணப்படுகின்றது.

வடக்கு கிழக்கு மாகாணங்களில் தொண்டர் ஆசிரியர் விவகாரமும் பெரும் பிரச்சினையாக மாறியுள்ளது. வடக்கில் யாழ். குடாநாட்டிலும் வன்னியிலும் தொண்டர் ஆசிரியர்களாக கடமையாற்றும் பல நூற்றுக்கணக்கானவர்களில் தமக்கு ஆசிரியர் உதவியாளர் நியமனம் வழங்கப்பட வேண்டுமென்று கோரிக்கை விடுத்து வருகின்றனர்.

12, 13 வருடங்களாக தொண்டர் ஆசிரியர்களாக கடமையாற்றும் இவர்கள் தற்போது வேறு தொழில்களுக்கும் செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. ஏனெனில் இவர்களது வயது அதிகரிப்பே இதற்கு காரணமாகும்.

வடக்கில் யுத்தத்தினால் பல நூற்றுக்கணக்கான பாடசாலைகள் பெரும் சேதமடைந்துள்ளது. பாடசாலைகளை மீளவும் நிர்மாணிக்கும் பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன. ஆனாலும் இந்த நிர்மாண பணிகளில் அரசு சார்பற்ற தொண்டர் நிறுவனங்களே கூடிய அக்கறை செலுத்தி வருகின்றன. பாடசாலைகளில் பௌதீக வளபற்றாக்குறை மற்றும் மனித வள பற்றாக்குறை என்பவை காணப்படுகின்றன.

யாழ். பல்கலைக்கழகத்தைப் பொறுத்தவரையில் அங்கு பொறியியல் பீடம் அமைக்கப்படும் என அரசாங்கம் உறுதியளித்திருந்தது. ஆனால் அதற்கான நடவடிக்கைகள் இன்னமும் எடுக்கப்பட்டதாக தெரியவில்லை. யாழ். பல்கலைக்கழகத்திற்கு சகல வசதிகளும் வழங்கப்பட்ட நாட்டிலுள்ள தலைசிறந்த பல்கலைக்கழகமாக அதனை மாற்றுவதற்கு நடவடிக்கை எடுப்பது அவசியம். (அ-2)

## இலவச கணனி பயிற்சி நெறி

(யாழ்ப்பாணம்)

சமூக அபிவிருத்தி செயற்திட்டத்தின் கீழ் மிருசுவில் பிரதேச மாணவர்களுக் கான இலவச கணனிக் கல்வி திட்டம் ஆரம்பிக்கப்படவுள்ளது.

இக்கணனிக்கல்வி திட்டத்திற்கு புனித நீக்கொலர் சமூக கனடா கிளை நிதியுதவியுடன் புனித நீக்கொலர் கழகம் இணைந்து நடத்தவுள்ளது.

இக்கணனி கல்விக்கு இப்பிரதேசத்தை சேர்ந்த 14 வயதிற்கு மேற்பட்ட இருபாலாரும் விண்ணப்பிக்க முடியும் எனவும் விண்ணப்பதாரிடையே கணனி அறிவு பரிசோதிக்கப்பட்டு பாடத்திட்டம் தயாரிக்கப்படவுள்ளது.

இந் கற்கை நெறிக்கு விண்ணப் பிக்க விரும்பும்விண்ணப்பதாரிகள் விண்ணப்பப் படிவங்களை மிருசுவில் நீக்கொலார் கழகத்தினரிடம் அல்லது மிருசுவில் பங்குத் தந்தையிடம்பெற்றுஇம்மாதம்20ஆம்திகதிக்குமுன்னர் விண் ணப் பிக்க வேண்டும் என புனித நீக்கொலார் கழகம் அறிவித்துள்ளது. (அ)

# மாணவர்கள் மூவர் தாக்குதலுக்கு இலக்காகி படுகாயமடைந்தனர்.

திஸ்ஸமஹாராம தெபரவெவ பிரதேசத்தில் பாடசாலை மாணவர்கள் மூலம் தாக்குதலுக்கு இலக்காகி காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

பகுதி நேர வகுப்புக்குச் சென்று கொண்டிருக்கும் போது அவர்களை வழி மறித்த ஐவர் இந்தத் தாக்குதலை நடத்தியதாக பொலிஸார் கூறினார்.

இதன்போது காயமடைந்த மாணவர்கள் தெபரவெவ வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைகளுக்காக அம்பாந்தோட்டை வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

தனிப்பட்ட தகராறே இந்தத் தாக்குதலுக்கு காரணம் என்பது தெரியவந்துள்ளது.

சம்பவம் தொடர்பில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதோடு ஏனையவர்களை கைது செய்வதற்கான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (அ-2)

## முல்லை பெரியாறு விவகாரம்

# கேரள அரசிற்கு பதிலளிக்க தமிழக அரசுக்கு நிபுணர் குழு அனுமதி வழங்கியது

முல்லை பெரியார் பகுதிகளில் நிலநடுக்கம் குறித்த கேரள அரசின் மனுவிற்கு பதிலளிக்க தமிழக அரசுக்கு நிபுணர் குழு அனுமதி வழங்கியுள்ளது.

10 நாளில் தனது பதிலை தாக்கல் செய்ய வேண்டும் என்று தமிழக அரசுக்கு முல்லை பெரியார் நிபுணர் குழு தெரிவித்துள்ளது.

புதுடில்லியில் நீதிபதி ஏ.எஸ். ஆனந்த் தலைமையில் நடந்த குழு கூட்டத்தில் இவ்வாறு முடிவெடுக்கப்பட்டுள்ளது. முல்லை பெரியார் பகுதியில் நிலநடுக்க ஆபத்து இருப்பதாக கேரள அரசு மனுவில் தெரிவித்திருந்தது. ஆனால், தமிழக அரசு ,இப்பகுதிக்கு நிலநடுக்க ஆபத்து இல்லை என தெரிவித்திருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

**ஜனவரி 2, 3 ஆம் திகதிகளில் இருதரப்பு விவாதம்**

ஜனவரி 2,3 ஆம் திகதிகளில் இருதரப்பு விவாதத்துக்கு நிபுணர்குழு அனுமதியளித்துள்ளது. முல்லை பெரியார் அணை விவகாரத்தில் தமிழக, கேரள வழக்கறிஞர்கள் தங்களது வாதத்தை எடுத்துரைப்பதற்கு அனுமதி கேட்டிருந்தனர். இரு மாநில கோரிக்கைகளை ஏற்று நிபுணர்குழு அனுமதியளித்துள்ளது.

இது தொடர்பாக டில்லியில் சுமார் 4 மணி நேரம் கூட்டம் நடைபெற்றது. அணை தொடர்பாக பல்வேறு குழுக்கள் சமர்ப்பித்துள்ள அறிக்கைகள் குறித்தும் பரிசீலிக்கப்பட்டது.

இவ் விவகாரத்தில் பல்வேறு குழுக்கள் சமர்ப்பித்துள்ள அறிக்கைகளை தரமுடியாது என்று நிபுணர் குழு தெரிவித்து கேரள அரசின் கோரிக்கையை நிராகரித் துள்ளது. ஐவர் குழுவின் இறுதி அறிக்கை அடுத்த ஆண்டு உச்ச நீதிமன்றில் தாக்கல் செய்யப்படும் என்றும் அப்போது பல்வேறு குழுக்கள் சமர்ப்பித்துள்ள அறிக்கைகள் தாக்கல் செய்யப்படும் என்றும் நீதிபதி ஏ. எஸ். ஆனந்த் தலைமையில் நடந்த குழு கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-2)

# மன்னாரின் எரிபொருள் ஆய்வுக்கு மற்றுமொரு இந்திய நிறுவனம்

(கொழும்பு)

மன்னார் கடற்பரப்பில் இந்தியாவின் மற்றுமொரு எரிபொருள் நிறுவனம் எரிவாயு ஆய்வில் ஈடுபடவுள்ளதாகவும் இதற்காக இந்திய இயற்கை வாயு நிறுவனமான (ONGC) இன் அதிகாரிகள் எதிர்வரும் நாட்களில் இலங்கைக்கு வரவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அதிகாரிகளுடன் நடத்தப்படும் பேச்சுக்கள் வெற்றியளிக்குமாயின் அந்த நிறுவனமும் மன்னாரில் எரிபொருள் ஆய்வில் ஈடுபடும் என்று எரிபொருள்துறை அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

ஏற்கனவே மன்னார் கடற்பரப்பில் இந்திய நிறுவனமான கொன்ஸ் லங்கா நிறுவனம் எரிபொருள் ஆய்வுப் பணிகளில் ஈடுபட்டு வருகின்றது.

இதற்கிடையில் மன்னார் எரிபொருள் ஆய்வுக்காக ரஷ்ய காஸ்புரோம் நிறுவனத்துடன் நடத்தப்பட்ட பேச்சுக்கள் வெற்றியளித்துள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இதன்படி அந்த நிறுவனத்தின் நிதியாள்கை அதிகாரி ஒருவர் இலங்கை வரவுள்ளதாக அவர் குறிப்பிட்டார். (அ-2)

# தயாசிறி எழுதிய கடிதம் குறித்து எனக்கு எதுவும் தெரியாது

## ரணில் தெரிவிப்பு

தானும் கருஜயசூரியவும் சிறிகொத்தாவுக்கு கூட்டம் ஒன்றுக்காகப் போயிருந்த போதிலும் தலைமைப்பகுதிக்கு போட்டியிடுவது குறித்து பேசுவதை இருவரும் தவிர்த்துக் கொண்டதாக கோபத்துடன் காணப்பட்ட ரணில் விக்கிரமசிங்க பத்திரிகையாளருடனான சந் திப்பின் போது நேற்று தெரிவித்துள்ளார்.

நான் காலையில் அவரைத் சந்தித்தேன். நாம் இந்த பிரச்சினைபற்றி எதுவும் பேசவில்லை.இதற்கு மேல் எனக்கு கூறுவதற்கு எதுவுமில்லை என ரணில் விக்கிரமசிங்க கூறினார்.

முன்னாள் இராணுவத்தளபதி சரத் பொன்சேகாவுக்கு ஐக்கிய தேசியக் கட்சி ஒரு முக்கிய பதவி வழங்க வழிவகுக்கும் வகையில் கட்சியின் யாப்பில் திருத்தம் கொண்டு வரும்படி கேட்டு ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர ரணில் விக்கிரமசிங்கவுக்கு எழுதிய கடிதம் பற்றி வினவப்பட்ட போது தனக்கு அப்படியொரு கடிதமும் கிடைக்கவில்லையென ரணில் விக்கிரமசிங்க கூறினார். கட்சியின் யாப்பில் மாற்றம் எதுவும் செய்யும் எண்ணமில்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-2)

# மனித உரிமை மீறலுக்கு எதிராக ஐ.நா.வில் முறைப்பாடு

## ஐக்கிய தேசிய கட்சி அறிவிப்பு

(கொழும்பு)

நாட்டில் மேலோங்கியுள்ள மனித உரிமை மீறல்கள் மற்றும் சர்வாதிகார ஆட்சி என்பவற்றுக்கு எதிராக ஐக்கிய நாடுகள் சபையில் மகஜர் கையளிக்கப்போவதாக ஐக்கிய தேசியக் கட்சி அறிவித்துள்ளது.எதிர்வரும் 10 ஆம் திகதி சனிக்கிழமை சர்வதேச மனிதவுரிமைகள் தினத்துடன் பொது மக்களிடமிருந்து மகஜருக்கு கையொப்பம் பெறும் தேசிய நடவடிக்கை ஆரம்பிக்கப்படும் என்றும் அக்கட்சி குறிப்பிட்டுள்ளது.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றிய ஐ.தே.க.வின் பாராளுமன்ற உறுப்பினர் ஜயலத் ஜயவர்த்தன இக்கருத்தினை வெளியிட்டார்.(அ-6)

# போராட்டங்கள் தொடர்ந்து முன்னெடுக்கப்பட வேண்டும்

## ரணில் அழைப்பு

(கொழும்பு)

அரசாங்கத்திற்கு பொதுமக்கள் பதிலடி கொடுத்துள்ளனர். இனி எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அரசாங்கத்தினால் ஜனநாயக விரோதமாக செயற்பட முடியாதளவிற்கு மக்கள் எதிர்ப்புக்கள் மேலாங்கியுள்ளன.

எனவே தற்போது முன்னெடுக்கப்படுகின்ற போராட்டங்கள் அனைத்தும் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படவேண்டும் என ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (அ-2)

# விமான நிலையத்தில் பங்களாதேஷ் பிரஜை கைது

பெருந்தொகையான அமெரிக்கா டொலர்களுடன் பங்களாதேஷ் செல்ல முற்பட்ட சந்தேகநபரொருவர் சுங்கத் திணைக்கள அதிகாரிகளால் நேற்றுக் காலை கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

கொழும்பிலிருந்து பங்களாதேஷ் செல்வதற்கு முற்பட்ட மேற்படி நபர் மீது சந்தேகம் கொண்ட சுங்கத்திணைக்கள அதிகாரிகள் குறித்த நபரின் கைப்பையை சோதனையிட்ட போது அதில் இலங்கை ரூபாய்படி ஐம்பது இலட்சத்துக்கும் மேற்பட்ட தொகையை வைத்திருந்துள்ளதாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

45 வயது மதிக்கத்தக்க பங்களாதேஷ் நபரொருவரே கைது செய்யப்பட்டுள்ளதுடன் இது தொடர்பான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (அ-2)

# மீனவர்களின் தொடர் வேலைநிறுத்த போராட்டம்

(இராமேஸ்வரம்)

இலங்கைக் கடற்படையால் கைது செய்யப்பட்டுள்ளவர்களை மீட்டுத்தர வலியுறுத்தி மீனவர்கள் மேற்கொண்டுள்ள வேலை நிறுத்தப்போராட்டம் ஆறாவது நாளை எட்டியுள்ளது.

இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ள இந்திய மீனவர்கள் ஐந்து பேரும் நீதிமன்றத்தில் நிறுத்தப்படவுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படும் மீனவர்கள் விடுதலை செய்யப்படுவார்கள் என இலங்கையில் உள்ள இந்திய தூதரக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதற்கிடையில் இலங்கைக் கடற்படையினர் தொடர் தாக்குதலால் படகுகளை இயக்க முடியாத சூழலில் இருந்து வரும் மீனவர்கள் தங்கள் மீது இலங்கை கடற்படையினர் பொய்யான வழக்குகளை பதிவு செய்து சிறையில் அடைப்பதாக கூறுகின்றனர்.

நான்கு ஆயிரத்துக்கும் மேற்பட்ட மீனவத் தொழிலாளர்களும் மீன்பிடி சார்புத் தொழிலாளர்கள் சுமார் பத்தாயிரத்திற்கும் மேற்பட்டோர் தொழிலுக்குச் செல்லவில்லை.

மீன்பிடித் தொழில் முடங்கியுள்ளதால் பல கோடி ரூபாய் மதிப்புள்ள வர்த்தகம் பாதிக்கப்பட்டுள்ளது. இதனால் பல மீனவர்கள் வேலை தேடி வெளிமாநிலங்களுக்குச் செல்லத் தொடங்கியுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. (அ-2)

# ஒளி விழா

கிளிநொச்சி செல்லியதீவு*அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையின் ஒளிவிழா இன்று செவ்வாய்க்கிழமை காலை 10.30 மணிக்கு பாடசாலை அதிபர் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வின் போது பிரதம விருந்தினராக பூநகரி பங்குத் தந்தை அருட்தந்தை வணபிதா பாலதாஸ் விரஜன், சிறப்பு விருந்தினர்களாக பூநகரி பிரதேச கல்வி அலு வலர் எஸ்.தர்மரட்ணம்,மேஜர் றொகான் ராமநாயக்க.மேஜர் விக்ரமசிங்கவும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (அ)

# காலி தொடக்கம் மாத்தறை வரையான வீதி நிர்மாணப்பணிகள் 2013 இல் பூர்த்தியாகும்

(கொழும்பு)

தெற்கு அதிவேக வீதியில் காலியில் இருந்து மாத்தறை வரையான பகுதியின் நிர்மாணப் பணிகள் சுமார் 20 வீதம் நிறைவு பெற்றுள்ளதாக வீதி அபிவிருத்தி அதிகார சபை அறிவித்துள்ளது.

தெற்கு அதிவேக வீதியில் காலியில் இருந்து மாத்தறை வரையான பகுதியின் நிர்மாணப் பணிகள் 2013 ஆம் ஆண்டளவில் பூர்த்தியாகும் என அதிகார சபையின் தலைவர் ஆர்.டபிள்யூ. ஆர். பிறேமசிறி நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

காலியின் பின்னதுவ எனும் இடத்திலிருந்து மாத்தறையின் கொடகம வரையிலான நிர்மாணப் பணிகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு வருவதாக வீதி அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

குறிப்பிட்ட காலத்தில் நிர்மாணப் பணிகளை பூர்த்தி செய்து மக்களின் பாவனைக்காக வீதியை திறந்து விட உத்தேசித்துள்ளதாக அதிகார சபையின் தலைவர் மேலும் கூறியுள்ளார். (அ-2)



பூநகரி வேரவில் வெள்ளிப் பள்ளத்துவீரகத்திவிநாயகர் ஆலய தர்மகர்த்தா கதிர்வேலு குமாரசுவாமிகளின் சதாபிஷேக விழா அண்மையில் நடைபெற்ற போது பிரதமகுரு தம்பதியினருக்கு அபிஷேகம் செய்வதனை படத்தில் காணலாம்.

# சிறுவர் இல்ல அருட்சகோதரி கைதானமை தொடர்பில் ஜனாதிபதிக்கு முறையிடப்படும்

## கிறிஸ்தவ விவகார அமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)

சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் நடவடிக்கைகள் தொடர்பில் கிறிஸ்தவ அமை சு அதிருப்தி வெளியிட்டுள்ளது. குறிப்பாக மொரட்டுவ பிரேமநிவாச என்னும் சிறுவர் இல்லத்தின் பொறுப்பாளராக செயற்பட்ட அருட்சகோதரி கைது செய்யப்பட்டமைக்கு கிறிஸ்தவ விவகார அமைச்சர் மில்ரோய் பெர்னாண்டோ கடும் அதிருப்தி வெளியிட்டுள்ளார்.

கத்தோலிக்க தேவாலயங்களின் நன்மதிப்புக்கு களங்கம் ஏற்படும் வகையில் சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை செயற்பட்டுள்ளது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த விடயம் குறித்து ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் முறைப்பாடு செய்ய உள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

குறித்த சிறுவர் இல்லம் பல ஆண்டுகளாக சேவை வழங்கி வருவதாகவும் சிறுவர்கள் விற்பனை செய்யப்பட்டதாக இதற்கு முன்னர் முறைப்பாடு செய்யப்படவில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இன்னும் ஒரு சில தினங்கள் சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் சில அதிகாரிகள் இடமாற்றத்திற்கு உட்படலாம் என அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-2)

# அருட்சகோதரியை கைது செய்தமையால் நாட்டுக்கு அபகீர்த்தி ஏற்பட்டுள்ளது

## பிரதி வெளிவிவகார அமைச்சர்

(கொழும்பு)

ராவத்தாவத்தையில் அமைந்துள்ள சிறுவர் இல்லத்துக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கை தொடர்பில் கத்தோலிக்கத் திருச்சபையின் கர்தினாலும் கொழும்புப் பேராயருமான மல்கம் ரஞ்சித் எடுத்துள்ள முடிவு சரியானது என்றே நான் கருதுகின்றேன்.

இந்த விடயத்தில் அரசாங்கத்தை அசௌகரியப்படுத்தும் வகையில் சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை நடந்து கொண்டுள்ளது என்று பிரதி வெளிவிவகார அமைச்சர் நியோமல் பெரேரா தெரிவித்தார்.

இந்தச் சம்பவத்தை எதிர்த்து எந்தவொரு அரச நிகழ்வுகளிலும் கலந்து கொள்ளப் போவதில்லை என்று கத்தோலிக்கத் திருச்சபையின் கொழும்பு பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் தெரிவித்துள்ளமை தொடர்பில் விபரிக்கையிலேயே பிரதியமைச்சர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இந்நிலையில் பிரதியமைச்சர் நியோமல் பெரேரா இது குறித்து மேலும் குறிப்பிடுகையில்,

குறித்த சிறுவர் பராமரிப்பு இல்லத்தை சோதனையிடும் விடயத்தில் சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை அதிகாரிகள் விரும்பத்தகாத வகையில் நடந்து கொண்டுள்ளனர்.

கமராக்களை எடுத்துச் சென்று சோதனையிட்டுள்ளதுடன் அங்கிருந்தவர்களையும் பொறுப்பற்ற முறையில் சோதனையிட்டுள்ளனர்.

அதாவது அன்னை தெரேசாவின் வழியில் இந்த தொண்டர் அமைப்பு உலகளாவிய ரீதியில் செயற்பட்டு வருகின்றது. ஆதரவற்ற குழந்தைகளை பராமரித்து வருகின்றது. இவ்வாறான சமூக நல அமைப்புக்கள் கத்தோலிக்க மதத்தில் மட்டுமல்ல அனைத்து மதங்களின் வழி காட்டலிலும் நடத்தப்படுகின்றன.

இந்நிலையில் இவை தொடர்பில் முறைப்பாடுகள் கிடைக்குமிடத்து அது தொடர்பில் ஆராய்ந்து பார்க்க வேண்டும். பின்னர் தெளிவுபடுத்தல்கள், அறிவுறுத்தல்கள் என்பவற்றை முன்னெடுக்க வேண்டும். அதையடுத்து எச்சரிக்கை எடுக்கலாம்.

அதனை விடுத்து முறைப்பாடு ஒன்று கிடைத்தது என்பதற்காக இவ்வாறு சோதனை நடவடிக்கையை முன்னெடுப்பதும் அருட் சகோதரி ஒருவரை கைது செய்வதும் கவலைக்குரிய விடயமாகும்.

அன்னை தெரேசாவின் வழியில் செயற்பட்டுவரும் இந்தத் தொண்டர் அமைப்பின் அருட் சகோதரி ஒருவரை முதற்தடவையாக கைது செய்ததன் மூலம் நாட்டுக்கு அபகீர்த்தி ஏற்பட்டுள்ளது.

அருட் சகோதரிகள், பாதிரியார்கள், தேரர்கள் மற்றும் மத குருமார்கள் என்பவர்கள் திருமணம்கூட செய்யாமல் சமூக நலனுக்காகவும் மக்களின் நலனுக்காகவும் தமது வாழ்நாளை அர்ப்பணிப்பவர்கள். இவர்களின் விடயத்தில் செயற்படும்போது ஆராய்ந்து செயற்படுவது அவசியமாகும் என்றார்.

எனவே, இந்த விடயத்தில் கத்தோலிக்க திருச்சபையின் கர்தினாலும் கொழும்பு பேராயருமான மல்கம் ரஞ்சித் எடுத்துள்ள முடிவு சரியானதென்றே நான் கருதுகின்றேன் என்றார். (அ-2)

# கலந்துரையாடல்

(மல்லாவி)

துணுக்காய் பிரதேச செயலக முன்னேற்ற மீளாய்வும் வெள்ளப் பாதிப்பு சம்பந்தமான கலந்துரையாடலும் இன்று செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு துணுக்காய் பிரதேச செயலக மண்டபத்தில் துணுக்காய் பிரதேச செயலர் எஸ்.குணபாலன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், திணைக்கள தலைவர்கள், இராணுவ, பொலிஸ் அதிகாரிகள் கலந்து கொள்ளவுள்ளனர். (அ-3-15)

# மூன்று தொழிற்சங்கங்கள் கல்வி அமைச்சுக்கு முன் போராட்டம்

தமது பிரச்சினைகளுக்கான தீர்வினை பெற்றுக்கொடுக்குமாறு வலியுறுத்தி மூன்று தொழிற்சங்கங்கள் கல்வி அமைச்சுக்கு முன்பாக உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளன.

கல்வி நிர்வாக சேவையில் கடமை நிறைவேற்றுப்பணிப்பாளர்கள் சங்கம், அகில இலங்கை பட்டதாரி ஆசிரியர் சங்கம் மற்றும் இலங்கை பதில் அதிபர்கள் சங்கம் ஆகிய தொழிற்சங்கங்களே இந்த உண்ணாவிரதப் போராட்டத்தை மேற்கொண்டுள்ளன.

தமது பதவிக்கான நிரந்தர நியமனங்களை வழங்குமாறு கோரி கல்வி நிர்வாக சேவையின் கடமை நிறைவேற்றுப்பணிப்பாளர்கள் சங்கம் உண்ணாவிரதத்தில் ஈடுபடுகின்றது.

தமது போராட்டம் ஆரம்பிக்கப்பட்டு 15 நாட்கள் கடந்துள்ள போதிலும் இதுவரை பிரச்சினைக்கான தீர்வினை வழங்க அதிகாரிகள் முன்வரவில்லை என அந்த சங்கத்தின் செயலாளர் டபிள்யூ ஜி.ஏ. வனிகரத்ன குற்றம் சுமத்தியுள்ளார்.

இதனிடையே அகில இலங்கை பட்டதாரி ஆசிரியர் சங்கம்ஆரம்பித்துள்ள சாகும் வரை உண்ணாவிரதப் போராட்டம் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

பட்டதாரி ஆசிரியர்களின் சம்பள முரண்பாடுகளை தீர்த்து வைக்குமாறு வலியுறுத்தி மேற்கொள்ளப்படும் இந்தப் போராட்டம் மூன்று நாட்களை கடந்துள்ளதாக அகில இலங்கை பட்டதாரி ஆசிரியர் சங்கத்தின் ஏற்பாட்டாளர் ஈ.எம்.ஜே.எஸ்.டி.சேரம் தெரிவித்துள்ளார்.

நிரந்தர நியமனம் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து இலங்கை பதில் அதிபர்கள் சங்கம் ஆரம்பித்த உண்ணாவிரதப் போராட்டம் 68 நாடகளாக முன்னெடுக்கப்பட்டுள்ளது.

தமது கோரிக்கைகளுக்கான தீர்வினை பெற்றுக் கொடுக்க அதிகாரிகள் எவ்வித நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவில்லை என சங்கத்தின் தலைவர் எஸ்.சிவஞானசுந்தரம் கூறியுள்ளார்.

கல்வி அமைச்சுக்கு முன்பாக மேற்கொள்ளப்பட்டுள்ள இந்த உண்ணாவிரதப் போராட்டங்கள் தொடர்பாக பிரதிக் கல்வி அமைச்சர் விஜித் விஜயமுனி சொய்சாவிடம் வினவிய போது அவர்களின் கோரிக்கைகள் தொடர்பாக கல்வி அமைச்சருடன் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளதாக குறிப்பிட்டார். (அ-2)

# அனைத்துலக ஆய்வுக்குழுவுடன் பிரித்தானிய தமிழ் எம்.பிக்கள் சந்திப்பு

(கொழும்பு)

அனைத்துலக நெருக்கடிகளுக்கான ஆய்வுக்குழுவுக்கும் பிரித்தானிய அனைத்துக் கட்சிகளின் தமிழர்களுக்கான நாடாளுமன்றக் குழுவிற்கு இடையிலான தகவல் பரிமாற்றமும் கலந்துரையாடலும் இடம் பெற்றுள்ளது.

அனைத்துலக நெருக்கடிகளுக்கான ஆய்வுக்குழுவின் இலங்கை விவகாரம் தொடர்பான முக்கிய பிரதிநிதிகள், தமிழர்களுக்கான அனைத்துக் கட்சி நாடாளுமன்றக் குழுவின் தலைவரும் பிரித்தானிய ஆளும் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினருமான லீ ஸ்கொட், தொழிற்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் சிபோன் மக்டொனா உட்பட பல நாடாளுமன்ற உறுப்பினர்களும் பிரித்தானிய தமிழர் பேரவையின் அங்கத்தவர்களும் இந்தச் சந்திப்பில் கலந்து கொண்டிருந்தனர்.

பிரித்தானிய தமிழர் பேரவை ஏற்பாடு செய்திருந்த இக்கலந்துரையாடலின்போது சமகால அரசியலில் இலங்கை அரசின் செயற்பாடுகள் வடக்கு, கிழக்கு உட்பட இலங்கைத்தீவில் தமிழர்கள் தொடர்சியாக எதிர்நோக்குகின்ற இன்னல்கள் தொடர்பாக ஆராயப்பட்டன.

பிரித்தானிய தமிழர் பேரவையின் முன்னெடுப்பில் உலகத்தமிழ் அமைப்புக்களின் ஆதரவுடன் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் முன்னெடுக்கப்பட்டு வரும் செயற்பாடுகள் பற்றியும் தமிழர் பேரவையின் உறுப்பினர்கள் இந்தச் சந்திப்பில் தெளிவுபடுத்தினர். (அ-2)

# நாட்டில் ஊழல் மோசடிகளை தடுக்க தெரிவுக்குழுவின் நடவடிக்கை அவசியம்

## விஜேதாச எம்.பி. தெரிவிப்பு

ஊழல் மோசடிகளைத் தடுப்பதற்கு பொது முயற்சியாண்மை தொடர்பான பாராளுமன்றத் தெரிவுக்குழு நடவடிக்கை எடுக்க வேண்டுமென ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் விஜேதாச ராஜபக்ஷ கோரிக்கை விடுத்துள்ளார்.

ஊழல் மோசடிகள், வீண் விரயம் மற்றும் முறைகேடுகள் தொடர்பில் கோப் காத்திரமான நடவடிக்கை எடுக்க வேண்டுமென வலியுறுத்தியுள்ளார்.

மோசடிகளில் ஈடுபட்டவர்களை அடையாளப்படுத்த வேண்டியது அவசியமானது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். பொதுவாக அமைச்சின் செயலாளர்கள் வினைத்திறனாக செயற்படவில்லை என குற்றம் சுமத்துவதில் பயனில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

முறைகேடான கொடுக்கல்- வாங்கல்களில் ஈடுபட்ட அரசாங்க உத்தியோகத்தர்கள் நீதியின் முன் நிறுத்தப்பட வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார்.

பொது முயற்சியாண்மை தொடர்பான பாராளுமன்றத் தெரிவுக் குழுவின் தலைவராக விஜேதாச ராஜபக்ஷ கடமையாற்றியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-2)

# தேயிலையின் உயர்விளைச்சலை அதிகரிக்க திட்டமிட்ட நடவடிக்கை

## ரவி கருணாநாயக்க தெரிவிப்பு



2010ஆம் ஆண்டு உலகளாவிய ரீதியில் 4ஆயிரத்து160 மில்லியன் கிலோகிராம் தேயிலை உற்பத்தி செய்யப்பட்டுள்ளது.

இலங்கையில்331 மில்லியன் கிலோ கிராம் தேயிலையே உற்பத்தி செய்யப்பட்டுள்ளது என்று பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சு சபைக்கு சமர்ப்பித்துள்ள பதிலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாராளுமன்றத்தில் கடந்த சனிக்கிழமை வாய்மூல விடைக்கான வினாக்கள் நேரத்தின் போது ஐ.தே.க.எம்.பியான ரவி கருணாநாயக்க எழுப்பியிருந்த கேள்விக்கு சபையில் சமர்ப்பித்துள்ள பதிலிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த பதிலில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது. தேயிலை இந்தியா, சீனா, கென்யா, வியட்நாம் உள்ளிட்ட 35 நாடுகள் உற்பத்தி செய்கின்றன.

சீனா வருடாந்தம் 1.363.8 மில்லியன் கிலோகிராமை உற்பத்தி செய்கிறது. ஆகக்குறைவாக முருசி என்ற தீவே 1.5 மில்லியன் கிலோ கிராமை உற்பத்தி செய்துள்ளது.

உயர் விளைச்சலை இலக்காக கொண்டு உள்ளூர் தேயிலை பயிர்ச்செய்கை மீள்திட்ட மிட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதன் பிரகாரம் 2017 ஆம் ஆண்டு 335 மில்லியன் கிலோ கிராம் தேயிலையும் 2030 ஆம் ஆண்டு 350 மில்லியன் கிலோ தேயிலையும் உற்பத்தி செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது. (அ-2)

# ஜே.வி.பி.கட்சியின் ஒன்பது தொழிற்சங்க தலைவர்கள் பணி நீக்கம் செய்யப்பட்டனர்

(கொழும்பு)

ஜே.வி.பி.கிளர்ச்சிக் குழுவுடன் தொடர்புகளைப் பேணும் தொழிற்சங்கவாதிகள் நீக்கப்படுவர் என கட்சியின் சிரேஷ்ட உறுப்பினரும் முன்னணி தொழிற்சங்கவாதியுமான கே.டி.லால்காந்த் தெரிவித்துள்ளார்.

ஒழுக்க விதிகளை மீறிச் செயற்பட்ட சில தொழிற்சங்கத் தலைவர்களை ஏற்கனவே நீக்கியுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார். எனினும் இந்த நடவடிக்கை ஜே.வி.பி. உட்கட்சி முரண்பாடுகளை மேலும் உக்கிரமடையச் செய்யும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. இதேவேளை, ஜே.வி.பி.யின் ஒன்பது தொழிற்சங்கத் தலைவர்கள் பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

முக்கிய தொழிற்சங்கத் தலைவர்கள் பணி நீக்கம் செய்யப்பட்டமை கட்சி முரண்பாடுகளை மேலும் விரிவாக்கும் என கிளர்ச்சியாளர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

தொழிற்சங்கத் தலைமைத்துவம் தன்னிச்சையான தீர்மானங்களை எடுத்துள்ளதாக சுகாதார சேவை ஒன்றியத்தின் செயலாளர் டாக்டர் ரணசிங்க குற்றம் சுமத்தியுள்ளார்.

தமக்கு எதிராக இழைக்கப்பட்ட அநீதிகள் குறித்து தெளிவுபடுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

தலைமைத்துவ குறைபாடுகளினால் உழைக்கும் வர்க்கத்திற்காக நடத்தப்பட்ட போராட்டங்களில் உரிய பலன் கிடைக்கவில்லை என அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

தற்போதைய நிலைமை நீடித்தால் உழைக்கும் வர்க்கத்தினர் நெருக்கடிகளை எதிர்நோக்க நேரிடும் என அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-2)

# நீரிழிவு நோயால் வரும் சில முக்கிய பிரச்சினைகள்

**05**

**நீரிழிவு நோயால் கண்கள் பாதிக்கப்படுதல்**

கண்களைப் பற்றி சொல்லித் தெரிய வேண்டியதில்லை. இது நாம் பார்ப்பதற்குப் பயன்படும் கருவி. இந்தக் கருவியினுள் பல பாகங்கள் உள்ளன. இப் பாகங்களை ஒரு புகைப்படக் கருவியின் பாகங்களுடன் ஒப்பிடலாம். கமராவில் அதனுடைய லென்ஸ் வெளியிலிருக்கும். ஒளி மற்றும் உருவங்களை அதனுள்ளே இருக்கும் புகைப்படச் சுருளில் பதிவு செய்கிறது. அந்த பிலிமை டெவலப் செய்து உருவங்களை நாம் பார்க்கிறோம். அதுபோல் நம் கண்கள் உருவங்களையும் பொருட்களையும் பதிப்பிக்கின்றன.

பலவிதமான மாற்றங்கள் ஏற்பட்டு நரம்புகள் மூலமாக மூளைக்குச் செய்திகள் சென்று அதன்பின் நாம் பொருட்கள் மற்றும் உருவங்களை உணர்கிறோம்.

பிலிம் சரியாக இல்லாவிட்டால் படம் சரியாக வராது. அதுபோல் விழித்திரையில் பாதிப்பு என்றால் பார்வை சரியாக இருக்காது. அல்லது முற்றிலும் போய் விடும்.

நீரிழிவு நோயால் பாதிக்கப்படுபவர்களில் சுமார் ஐந்து விழுக்காட்டினர் கண்களை இழந்து விடுகிறார்கள்.

நீரிழிவு நோயால் கண்களின் விழித்திரைகள் பாதிக்கப்படுகின்றன. இதை டயபெடிக் ரெடினோபதி என்கிறார்கள்.

இந்த நிலையின்போது கருவிழிக்குப் போதிய ஒட்சிசன் கிடைக்காமல் ஊட்டச்சத்துக் குறைந்துவிடுவதால் கண்ணிலிருந்து இரத்தக்கசிவு மற்றும் கண்கள் வீங்கிக் கொள்ளுதல் ஆகியவை ஏற்படும்.

இதனால் கண்களால் மூளைக்குக் கொடுக்க வேண்டிய சிக்னல்களைக் கொடுக்க முடியாமல் குருட்டுத்தன்மை, பார்வை பாதிப்பு ஆகியவை ஏற்படும்.

இந்த நோயின் ஆரம்ப நிலை அறிகுறிகள் எதுவும் இல்லை. இந்த நோயால் கண்களில் வலியோ, பார்வைக் குறையோ ஆரம்பத்தில் ஏற்படுவதில்லை.

இந்த நோய் முற்றும் வரையில் எவ்வித பாதிப்பும் கண்களுக்கு தெரிவது கிடையாது. ஆயினும் முற்றிய நிலை அடைந்த பின் செய்யக்கூடிய மருத்துவம் மிகக் குறைவே.

**யார் யாருக்கு பாதிப்பு வரும்?**

நீரிழிவு நோய் இருக்கும் அனைவருக்கும் இந்த நோய் வருவதற்கான வாய்ப்புகள் அதிகம். இந்த நோயின் தீவிரம் உடம்பில் சீனியின் அளவைப் பொறுத்தே அமையும்.

பதினைந்து வருடங்களுக்கும் மேலாக நீரிழிவு நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு இந்த நோய் வருவதற்கான வாய்ப்புகள் அதிகம் உள்ளன என்று ஆய்வுகள் கூறுகின்றன.

**பரிசோதனை முறைகள்**

குளுக்கோஸ் அளவைக் கட்டுப்படுத்துதல் (லேசர் சிகிச்சை செய்ய வேண்டிய வாய்ப்புகளை இதனால் குறைக்கலாம்).

இரத்த அழுத்தத்தை சரியான விகிதத்தில் கட்டுப்பாட்டில் வைத்துக் கொள்ளுதல்.

தற்போதைய நிலையில் இந்த நோயைத் தீர்ப்பதற்கான நேரடி மருத்துவம் இல்லை என்பது கசப்பான உண்மையாகும். ஏனைய நோய்களுக்கு பயன்பட்டு வரும் அஸ்பிரின் இந்த நோய்க்கு உதவுவதில்லை.

இந்த நோயை வராமல் தடுக்க வேண்டிய முறைகளை மேற்கொள்ள முடியும்.

இந்த நோய்க்கு ஆரம்ப அறிகுறிகள் இல்லாததால் நீரிழிவு நோயுள்ள அனைவரும் தங்கள் கண்களை ஆறு மாதத்திற்கு ஒருமுறை பரிசோதனை செய்து கொள்வது நல்லதாகும். இந்த நோய் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டால் மூன்று மாதங்களுக்கு ஒருமுறை பரிசோதனை செய்து கொள்ள வேண்டிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

நீரிழிவு நோயிருப்பவர்களில் நான்கில் ஒரு பங்கினருக்கு கண்களில் இரத்தக் கசிவு, இரைப்பையில் வீக்கம் ஆகியவை இருக்கும். இதனால் பார்வை இழப்பு ஏற்படும். பிரச்சினையை சீரமைக்க உடனடி மருத்துவம் வேண்டும்.

**கண்களின் விழித்திரை மாற்றங்கள்**

நீரிழிவு நோயின் போது கண்ணின் விழித்திரையில் இருக்கும் இரத்த நாளங்கள் விரிவடைந்து விடுகின்றன. இதனால் இரத்த நாளங்கள் புடைத்து இரத்தம் கசியும்.

இது தவிர கண்களில் புது இரத்த நாளங்கள் தோன்றி அவற்றிலிருந்தும் இரத்தக் கசிவு ஏற்படும். இதுதான் விழித்திரை பாதிப்புகள். விழித்திரை என்பது கண்களின் உள்ளே பின்பகுதியை முழுவதுமாக வியாபித்துள்ள பகுதி. இதில் நாம் பார்க்க உதவும் ராட்ஸ், கோன்ஸ் என்றழைக்கப்படும் மிக முக்கியமான பார்வைச் செல்களும் நரம்புகளும் இரத்தக் குழாய்களும் உள்ளன. இந்த விழித்திரை பல அடுக்குகளைக் கொண்டது. இது சாதாரணமாக இரத்த நாளங்களுடனும் நரம்புகளுடனும் ஒட்டிக் கொண்டிருக்கும்.



பேராசிரியர்
டாக்டர் டி.காமராஜ்,
M.D.,P.G.D.C.G.,D.M.R.,
சென்னை.

நீரிழிவு நோயின் காரணமாக மட்டுமன்றி சில சமயம் பலவித காரணங்களால் விழித்திரையானது சேர்ந்திருக்கும் நிலையிலிருந்து பிய்ந்துவிடும். இதற்கு ரெடினல் டிடாச்மென்ட் என்று பெயர்.

**காரணங்கள்**

நீரிழிவு நோய் தவிர ரெடினாவில் தானாகவே ஓட்டை ஏற்படுதல், கண்களில் காயம் மற்றும் நோய்கள் ஏற்படுதல், அதிகமான இரத்த அழுத்தம், கருவுற்ற நிலை, சிறுநீரக நோய்கள், விழித்திரையில் இரத்த ஓட்டம் பாதிக்கப்படுதல், கண்களில் புற்றுநோய் போன்றவையெல்லாமும் கூட காரணங்களே.

**அறிகுறிகள்**

பாதிக்கப்பட்டவர்களுக்கு மின்னல் வெட்டுவது போல் பளிச் பளிச் என்று வெளிச்சம் தெரிதல், புள்ளி புள்ளியாக நிறைய பூச்சி பறப்பது போல் கண் முன்னே தெரிதல், திரைபோட்டு பார்வையை மறைப்பது போன்றிருத்தல், முழுவதுமாக பார்வை இழப்பு ஆகியவை. நீள்பார்வை உள்ளவர்களுக்கு பாதிப்பு அதிகம். (தொடரும்)




# புரோஸ்டேட் சுரப்பி பிரச்சினை

**02**

யூரோ புளோ ஸ்டடி (Uro Flow Study) என்கிற ஒரு சோதனை முறை உள்ளது. இதன்படி சிறுநீர்ப்பையில் முழுமையாக நீர் சேர்ந்தவுடன் அதை ஒரு மெஷினில் போகச் செய்து சிறுநீர் எவ்வளவு போனது என்பதையும் சிறுநீர் கழிக்க எவ்வளவு நேரம் எடுத்தது என்பதையும் எந்த அளவுக்கு வேகமாக சிறுநீர் (Peak Flow rate) கழித்தார் என்பதையும் தெரிந்து கொள்ளலாம், இதனை எல்லாம் வைத்து புரோஸ்டேட் வீக்கத்தால் எந்த அளவுக்கு சிறுநீர் வெளியேறுவது பாதிக்கப்பட்டுள்ளது என்பதைத் தெரிந்து கொண்டுவிடலாம்.

சிஸ்டாஸ் கோப் என்ற எண்டாஸ்கோப் கருவியை சிறுநீர் கழிக்கும் துவாரத்தின் வழியாக செலுத்தி புரோஸ்டேட் சுரப்பியின் அளவைக் கண்டறியலாம்.

**புரோஸ்டேட் சுரப்பி வீக்கத்திற்கு என்ன சிகிச்சை?**

புரோஸ்டேட் சுரப்பி வீக்கத்திற்கு இரண்டு வகையான சிகிச்சை முறைகள் உள்ளன. மருந்து (மருத்துவ சிகிச்சை), அறுவை சிகிச்சை (ஒப்பரேஷன்), புரோஸ்டேட் சுரப்பி சிறிதாக வீங்கி இருந்தாலும் நோயின் தொந்தரவுகள் அதிகமாக இல்லாமல் சிறுசிறு பிரச்சினைகளாக இருக்கும்பொழுதும் மருத்துவ சிகிச்சை கொடுக்கலாம். Prajocin(பிரஸோசின்), Terajocin(டெரஸோஸின்), Tamsulocin (டாம்ஸ் சுலோசின்), Finasteside (பினாஸ்ட்ஸைடு) ஆகிய மருந்துகளைக் கொடுத்து குணப்ளபடுத்தப்படும்.

புரோஸ்டேட் சுரப்பி வீங்கிப் பெரிதாகும் போது சில நோயாளிகளுக்குச் சிறுநீர் வெளியேறாமல் சிறுநீர் தடைப்படும். அப்பொழுது அவர்கள் சிறுநீர் கழிக்க முடியாமல் அடிவயிறு வீங்கி வலியால் மிகவும் துடிதுடித்துப் போவார்கள். அதற்கு அவசர சிகிச்சை மேற்கொள்ள வேண்டும். நோயாளிக்கு சிறுநீர்த் தாரை வழியாகப் பிளாஸ்டிக் டியூப்பை போட்டு சிறுநீரை வெளியேற்ற வேண்டும். சில நேரங்களில் புரோஸ்டேட் சுரப்பி மிகவும் வீங்கும்போது சிறுநீர்த் தாரை வழியாகப் பிளாஸ்டிக் டியூப்பை செலுத்த முடியாது. அப்பொழுது அடிவயிற்றில் சிறுநீர்ப்பை இருக்கும் இடத்தில் துளைபோட்டு Foley's Cathetor என்ற அந்த டியூப்பை செலுத்தி சிறுநீரை வெளியில் கொண்டு வரலாம். இது தற்காலிகமான சிகிச்சைதான். அதன்பின்னர் 2 அல்லது 3 வாரங்கள் கழித்து வீங்கிய புரோஸ்டேட் சுரப்பிக்கு சத்திரசிகி ச்சை செய்த பின்னர் இந்த டியூப்பை எடுத்து விடலாம்.

**கண்டிப்பாக அறுவைச் சிகிச்சைதான் செய்யவேண்டும் என்கிற நிலையை எப்போது எடுப்பீர்கள்?**

நோயாளிக்கு மருந்து மாத்திரை (மருத்துவ சிகிச்சை) கொடுத்தும் தொந்தரவுகள் நீங்கவில்லையெனில் அறுவை சிகிச்சை செய்ய வேண்டியிருக்கும்.

அடிக்கடி சிறுநீர் வெளியேறாமல் தடைப்பட்டு விடுபவர்களுக்கும் அடிக்கடி சிறுநீரில் இரத்தம் வெளியேறுபவர்களுக்கும் சிறுநீர்ப்பையில் கற்கள் உருவாகியிருப்பது கண்டுபிடிக்கப்பட்டாலும் சிறுநீர் செயல் இழக்க நேரிடும் பொழுதும் சத்திர சிகிச்சைதான் தீர்வு என்று முடிவு செய்வோம்.

**புரோஸ்டேட் சுரப்பி வீக்கத்திற்கு என்ன என்ன அறுவை சிகிச்சை முறைகள் உள்ளன?**

1.**Trans Urethral Resection of prostate** என்று சொல்லப்படுகின்ற **TURP** சத்திரசிகிச்சை.

2.**Open Prostatetectomy**

**TURP**:சிறுநீர்த் தாரை வழியாக **Resectoscope** என்ற கருவியை செலுத்தி அதிகமாக வீங்கியுள்ள புரோஸ்டேட் சுரப்பியை சிறிது சிறிதாக கட் பண்ணி வெளியில் கொண்டு வந்து விடலாம்.

இந்தச் சிகிச்சையின் நன்மை என்னவென்றால் சத்திரசிகிச்சை வடு இருக்காது. 4,5 நாட்களில் வீட்டிற்குச் சென்றுவிடலாம். 2, 3 வாரங்களில் வேலைக்குச் செல்லலாம்.

**Open Prostatetectomy**: அடி வயிற்றில் சத்திரசிகிச்சை செய்து வீங்கியுள்ள சுரப்பியை எடுத்து விடலாம். அதாவது புரோஸ் டேட் சுரப்பி 50-75 கிராம் (சராசரி எடை 20 கிராம்) எடை இருக்கும் பொழுதும் சிறுநீர்ப்பை யில் பெரிய கற்கள் உருவாகும் பொழு தும் இந்த முறை கையாளப்படும். இதன் தீமைகள் என்னவெனில் சத்திர சிகிச்சை வலி மிகுந்ததாக இருக்கும். இரண்டு வாரம் மருத்துவமனையில் தங்கியிருக்க வேண்டியிருக்கும். வேலைக்குச் செல்ல நான்கைந்து மாதங்களாவது ஆகும்.



சமீபகாலமாக **Cystoscope** என்ற கருவி வழியாக லேசரை செலுத்தியும் புரோஸ்டேட் சுரப்பி வீக்கம் சரி செய்யப்படுகின்றது.

டாக்டர் ஆர்.இளம்பரிதி,MS,
சென்னை-10.

இந்த வீங்கிய புரோஸ்டேட் சுரப்பியை **TURP** மூலம் சத்திரசிகிச்சை செய்த பின்பு மறுபடியும் வீங்குமா என்று கேட்டால் 10 அல்லது 15 ஆண்டுகள் கழித்து 5-10% ஆண்களுக்கு மறுபடியும் வீங்க வாய்ப்பு உள்ளது. அப்பொழுது மறுபடியும் **TURP** சத்திரசிகிச்சை செய்து சரிப்படுத்திக் கொள்ளலாம். (முற்றும்)

# சாதாரணத்திலிருந்து மிக சாதாரணத்திற்கு



ஆன்மீகம் 17

இந்த உலகிலுள்ள எல்லா விதமான முட்டாள்தனமான நம்பிக்கை முறைகள் பெரும்பாலோருக்கு மிகவும் உண்மையானதாக இருக்கிறது. அவர்கள் அதை நம்புகிறார்கள், நம்புவதைப்போல நடக்கவும் செய்கிறது. எனவே, நம்பிக்கை காரணமாக, இதுபோன்ற விடயங்கள் உண்மையாகவே நடக்கின்றன. ஆனால், உங்கள் நம்பிக்கையும், எவற்றை உங்கள் எண்ணங்களாலும் உணர்சிகளாலும், முக்கியப்படுத்துகிறீர்களோ அவையும் பிரபஞ்ச உண்மைக்கு தொடர்பானவை அல்ல.

## கனவுச் சிறைக்குள்...



சரணாகதி பற்றி நீங்கள் பேசும்போது, கடப்பது பற்றி பேசுகிறீர்கள்... ஒரு பரிமாணத்தின் எல்லையிலிருந்து வேறு பரிமாணத்தின் எல்லைக்கு கடப்பது பற்றி பேசுகிறீர்கள். மெல்லிய காற்றுப் போல் ஆகாவிட்டால் கடக்க முடியாதென்று, போதுமான அளவிற்கு சுவற்றில் மோதிக் கொண்ட பிறகு நீங்கள் புரிந்து கொண்டீர்கள். நீங்கள் சிறைப்படுத்தப் பட்டிருக்கிறீர்கள், கதவுகள் வலுவாக உள்ளன, தப்பிக்க முடியாது. ஆனால் சிறைக்குக் கீழே ஒருகழிவு நீர் கால்வாய் உள்ளது. அதில் தவழ்ந்து போனால், நீங்கள் விடுதலை ஆக முடியும். அப்போது அந்த கால்வாய் வழியாக தவழ்ந்து போக முயற்சிப்பீர்களா, இல்லையா? விடுதலைக்கு அதுதான் வழியென்றால் மோசமான கழிவு நீர் கால்வாய் வழியாகவும் நீங்கள் தவழ்ந்து செல்வீர்கள். கழிவு நீர் உங்கள் மூக்கு வழியாகவும் வாய் வழியாகவும் கூட போகும், ஆனால் கவலைப்பட மாட்டீர்கள். இப்படி செய்தால் மட்டுமே விடுதலை நோக்கி செல்லமுடியும் என்பதால் கழிவு நீர் கால்வாய் வழியாகவும் கூட நீங்கள் தவழ்ந்து செல்வீர்கள். அதுதான் சரணாகதி என்பது.

எனவே சரணாகதி என்பது ஒரு உணர்தல். அதாவது தற்போதய வடிவத்தில் கதவைக் கடக்க முடியாது என்று உணர்கிறீர்கள். எனவே கடப்பதற்கு அதிக அறிவுள்ள வழியைக் கண்டு கொண்டீர்கள். அது சொல்லிக் கொடுத்து வருவதல்ல. ஒரு குறிப்பிட்ட உணர்தலால் மட்டுமே வருவது. உங்கள் அறிவாலோ அல்லது வாழ்க்கை உங்களை தரைமட்டத்திற்கு தகர்த்ததாலோ அல்லது கட்டுப்பாடற்ற அன்பில் விழுமளவிற்கு பித்துப் பிடித்ததாலோ அது வருகிறது. இராமகிருஸ்ணர் அல்லது மீரா ப்ாய் அல்லது அக்கமகாதேவி போன்று பித்துப் பிடித்ததால் வருகிறது. இவர்களெல்லாம் உங்களுக்கு தெரிந்த சில பெயர்கள். ஆனால் நிறையப்பேர் அப்படி இருந்தார்கள் பித்துப்பிடித்து இருந்தார்கள். அவர்கள் தெளிவற்றவர்கள், இனிமையற்றவர்கள், முழுமையாக இனிமையற்றவர்கள். ஆனால் அவர்கள் அற்புதமானவர்கள் என்பதை நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும். அற்புதமாக இருக்கும் எதுவுமே இனிமையாக இருக்கத் தேவையில்லை. பொதுவாக இனிமையாக இருக்காது. நானும் கூட இனிமையற்றவன் தான்.

(முற்றும்)

சத்குரு ஜக்கி வாசு தேவ்

# மலையக முஸ்லிம் கிராமங்களின் மண் மணக்கும் பாடல்கள்

02



*சந்திர மாமா எங்கே போறாய்?*
*மண்ணெடுக்கப் போறேன்*
*என்னத்துக்கு மண்?*
*ஊடு மெழுக!*

நிலவிடம், தானே கேள்வி கேட்டு தானே பதிலளித்துப் பாடும் இந்தத் தாயின் கற்பனைச் சந்திரன் தனது வீட்டை மெழுகுவதற்கு மண்ணெடுக்கச் செல்வதாக அமைகிறது. அக்காலத்தில் கிராமப்புற வீடுகளின் நிலம் செம்மண் இட்டுப் பெண்களால் மெழுகப்படுவது வழக்கம்.

தாலாட்டுக் கேட்டு, கைவீசம்மா பாடி, சாய்ந்தாடம்மா ஆடி வளர்ந்த குழந்தை, பிள்ளைப் பருவத்தை அடைந்ததும் சிறுவர்களுடன் சேர்ந்து விளையாடுகிறது. அங்கும் பாடல் பிறக்கின்றது. இந்த விளையாட்டின் பெயர் சட்டலங்கா, பொட்டலங்கா அதாவது சிறுவர்கள் தங்கள் கால்கள் இரண்டையும் நீட்டிய வண்ணம் அமர்ந்திருப்பர். அதில் ஒருவர் தனது வலதுகையை அனைவரது கால்களிலும் படுமாறு அசைத்த வண்ணம் இவ்வாறு பாடுவர்.

*சட்டலங்கா, பொட்டலங்கா*
*சாதிக்கூடு மாதுளங்கா*
*எட்டி எட்டி பூப்பறிக்க*
*ஏணி கொண்டு காய்பறிக்க*
*பச்ச நெல்லுக் குத்திக் குத்தி*
*பரணுமேலே ஏத்தி ஏத்தி*
*எல்லாந் திண்ட கள்ள மாமி*
*இந்தா ஈக்கிறாஃ*

இங்கு "கள்ளமாமி" எனும் போது கைபடும் கால், ஆட்டத்திலிருந்து அவுட் ஆகி மடித்து வைக்கப்படும். ஆட்டம் முடியும் வரை பாடல் தொடரும். இதேபோல் முருங்கப்பூ விளையாட்டும் பாடலுடன் கூடியது.

அக்கால கிராம மக்களின் விசேட வைபவங்கள் மற்றும் பொழுது போக்கிற்காக கோலாட்டமும் களிகம்பும் ஆடப்பட்டன. கோலாட்டம் பெண்களுக்குரியது. களிகம்பு ஆண்களுக்குரியது. அவ்வாட்டங்களின் போது கோல்களாகப் பயன்படுத்தப் பட்டவை கிராமத்துத் தோட்டங்களில்

**"கொழும்பில் நடைபெற்ற சர்வதேச தமிழ் எழுத்தாளர் மாநாட்டில் சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வுக் கட்டுரை"**

இயற்கைத் தாவரமாய் வளரும் கித்துல் மரக்கம்புகளாகும். அவை ஒன்றுடன் ஒன்று தாளலயத்திற்கேற்ப தட்டப்படும்போது பிறக்கும் சந்தத்திற்கேற்ப பாடலும் பிறக்கும். முதலில் ஆண்களால் ஆடப்படும் களிகம்பின் போது பாடப்படும் பாடல் ஒன்றைப் பார்ப்போம்.

*ஓராம் மல்லியத் தோட்டத்துல*
*பூ எடுக்கிற பூமயிலே*
*ஓராம் பொங்கலும்நாங்களும்*
*வாறோம்*
*ஒரு சோடி மால தா*
*ஈராம் மல்லியத் தோட்டத்துல*
*பூவெடுக்கிற பூமயிலே*
*ஈராம் பொங்கலும்*
*நாங்களும் வாறோம்,*
*ரெண்டு சோடி மால தா*

இப்பாடல் ஆட்டத்தின் அளவிற்கேற்ப அத்தனை மல்லிகைத் தோட்டம் வரையும் தொடரும். இது எண்ணல் பயிற்சியை வழங்கும் பாடலாகவும் அமைந்துள்ளதல்லவா! அடுத்து பெண்களின் கோலாட்டப் பாடல்கள் இரண்டைப் பார்போம்.

*ஆத்தங்கரையில சோறாக்கி-நல்ல*
*அவரியம் பூவால கறிசமைச்சி*
*நெய்விச்சம் பூவால வெளக்கேத்தி*
*வேடிக்கை பார்க்க வாங்கடி புள்ள.*

*காம்பு கறுத்தது கத்திரிக்கா*
*வேம்பு சிவத்தது வெள்ளரிக்கா*
*மேலு கறுத்த கறுவாட்டு சாயிபு*
*வாற ஒய்யாரத்தப் பாரு.*

இரண்டாவது பாடலில் இலேசான நகைச்சுவை இழையோடுகிறதல்லவா! சிங்களவர் மத்தியில் பண்டிகை நாட்களில் கொண்டாடப்படும் ரபான் என்னும் ஒருபக்கமேளம் மூன்று தசாப்பதங்களுக்கு முன்னர்கூட விசேட வைபவங்களின்போது மலையகக்கிராம முஸ்லிம் பெண்களாலும் கொட்டப்பட்டது. கொட்டப்படும் போது அந்த ரபான் மூன்று மரக்கட்டைக் தால்களின் மேல் வைக்கப்படும். சுருதியைக்கூட்டும் ரபானின் மேற்பகுதித் தோல் மறுதோன்றி எனப்படும் மருதாணி இட்ட கிராமப் பெண்களின் கைகளைப் போன்றே அலங்கரிக்கப்பட்டிருக்கும். இந்த ரபானை கொட்டும் தாளத்திற்கேற்ப பாடப்படும் சிங்களப் பாடல்கள் நிறையவே இருக்கின்றன. அதேபோல் தமிழில் அமைந்த ரபான் தாளப்பாடல் இரண்டைப் பார்ப்போம்.

*கொச்சி வெத்தில*
*கொழுந்து வெத்தில*
*கொறிச்சி திங்க*
*நல்ல வெத்தில*

*பூவே பூ புளியம் பூ*
*பொண்ணுக்கு நல்ல தாளம் பூ*
*காவே கா கறுப்பங்கா*
*கஞ்சி குடிக்க நெல்லிக்கா*

தலவின்னை சிபார்

நாட்டார் பாடல்களில் காதல் பாடல்களுக்கு தனியான இடம் உள்ளது. ஈழத்து நாட்டார் பாடல்களில் ஜனரஞ்சகமானதொரு பாடல்தான் தண்ணி குடமெடுத்து தனி வழியே போற பெண்ணே! எனும் பாடல் வரிகள். பிரதேசத்துக்குப் பிரதேசம் வேறுபடுகின்றன. அப்பாடல் எமது மண்ணில் இவ்வாறு இடம்பெற்றிருந்தது...

(தொடரும்)

# மெனிக்பாமில் ஆசிரியர்கள் பற்றாக்குறை; மாணவர்களின் கல்வி நடவடிக்கை பாதிப்பு

(வவுனியா)

வவுனியா, செட்டிக்குளம் மெனிக்பாம் இடைத்தங்கல் முகாமில் உள்ள மாணவர்கள தொடர்ச்சியாக ஆசிரியர் பற்றாக் குறைக்கு முகம் கொடுத்து வருவதனால் அவர்களது கல்வி பாதிக்கப்பட்டிருப்பதாக ஐ.நா.வின் மனிதாபிமான நடவடிக்கைக ளுக்கான அறிக்கையொன்று தெரிவித் துள்ளது.

ஆனந்தகுமாரசாமி, கதிர்காமர் ஆகிய இரண்டு முகாம்களில் உள்ள ஆயிரத்து 500 மாணவர்களுக்கு 60 ஆசிரியர்கள் மாத் திரமே கல்வி கற்பித்து வருகின்றார்கள்.

இதன் காரணமாக எதிர்வரும் 12 ஆம் திகதி தேசிய மட்டத்தில் ஆரம்பமாகவுள்ள கல்விப் பொதுத்தராதர பரீட்சைக்குத் தோற்ற வுள்ள மாணவர்கள் பெரிதும் பாதிக்கப் பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மெனிக்பாம் முகாம் விரைவில் மூடப் பட்டுவிடும் என்ற காரணத்தினால் அங்கு ஒரு நிச்சயமற்ற நிலைமை தொடர்வதாக கல்வித் துறை அதிகாரிகள் சுட்டிக்காட்டியிருந்தனர்.

இந்த நிச்சயமற்ற நிலைமையினால் மெனிக்பாம் முகாம் பாடசாலைகளுக்குப் புதிதாக ஆசிரியர்கள் நியமிப்பது அல்லது அங்கு மாணவர்களுக்குரிய வசதிகளை மேம்படுத்துவது போன்ற நடவடிக்கைகளில் தங்களால் உரிய கவனம் செலுத்த முடியா திருப்பதாகவும் கல்வித்துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளதாக அவ்வறிக்கையில் சுட் டிக்காட்டப்பட்டுள்ளது.

மெனிக்பாம் இடைத்தங்கல் முகாமைச் சேர்ந்த குடும்பங்கள் கட்டம் கட்டமாக மீள் குடியேற்றத்திற்காக அழைத்துச் செல்லப்படு கின்றார்கள். இந்தக் குடும்பங்களுடன் ஆசிரி யர்களும் அங்கிருந்து வெளியேறி வரு வதனால் அங்கு ஆசிரியர்களின் எண் ணிக்கை குறைய நேர்ந்ததாகவும் அந்த அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இங்குள்ள மாணவர்களுக்கான வசதி களைத் தொடர்ந்து பேணுவதில் சில நடை முறைச் சிக்கல்கள் எழுந்திருந்ததாக கல்வித் துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

மேலும் சரியான முறையில் பாடங்கள் நடைபெறாத காரணத்தினால் தம்மால் உரிய முறையில் பரீட்சைக்குத் தயார் செய்ய முடியா திருப்பதாக மாணவர்கள் கவலை தெரிவித் துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

## பகிடிவதையால் பல்கலைக்கழக மாணவனின் மனநிலை பாதிப்பு

(கொழும்பு)

பேராதனைப் பல்கலைக்கழகத்தில் சிரேஷ்ட மாணவர்கள் மேற்கொண்ட பகிடிவதை யினால் கலைப்பீடத்தைச் சேர்ந்த முதலாம் ஆண்டு மாணவர் ஒருவரின் மனநிலை பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட் டுள்ளது.

இச்சம்பவம் தொடர்பில் வாக்கு மூல மொன்றை பதிவு செய்து கொள்ள முடியாத அளவிற்கு பாதிக்கப்பட்ட மாணவரின் மன நிலையில் தாக்கம் ஏற்பட்டுள்ளதாகவும் பாதிக்கப்பட்ட மாணவர் பேராதனை போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள தாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பல்கலைக்கழகத்தில் இணைந்து கொண் டது முதல் சிரேஷ்ட மாணவர்கள் பல்வேறு வழிகளில் பகிடிவதை என்ற பெயரில் அவரை துன்புறுத்தியதாக தெரிவிக்கப்படுவ துடன் குறித்த மாணவர் பாலியல் ரீதியாகவும் துன்புறுத்தப்பட்டிருப்பதாகவும் பல்கலைக் கழக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (அ-2)

## ஏழைமக்களை மேலும் கஷ்டத்துக்கு உள்ளாக்கும் வரவு செலவுத்திட்டம்

### விஜித ஹேரத் எம்.பி. தெரிவிப்பு

(கொழும்பு)

இம்முறை வரவுசெலவுத்திட்டத்தின் மூலம் ஏழை மக்கள் மேலும் கஷ்டத்திற்கு உள் ளாக்கப்பட்டுள்ளதாக மக்கள் விடுதலை முன்னணி தெரிவித்துள்ளது.

சர்வதேச நாணய நிதியத்தின் தேவை களுக்கு ஏற்ப வரவு செலவுத்திட்டம் தயாரிக் கப்பட்டுள்ளதென மக்கள் விடுதலை முன் னணியின் பிரசார செயலாளர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

கிரிபத்கொடயில் வரவு செலவுத்திட்டதிற்கு எதிராக கடந்த 4 ஆம் திகதி மேற்கொள் ளப்பட்ட ஆர்ப்பாட்டத்தின் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இளைஞர் யுவதிகளின் வேலையில்லாப் பிரச்சினைக்கு வரவுசெலவுத்திட்டத்தில் எது வித தீர்வும் முன்வைக்கப்படவில்லை எனவும் அவர் குறிப்பிட்டார். (அ-2)

## சூதாட்ட நிலையங்கள் இலங்கையில் அதிகரிப்பு



### ரணில் குற்றச்சாட்டு

இலங்கையில் சூதாட்ட நிலையங்கள் அதிகரித்துக்கொண்டு செல்வதாக எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க குற்றம் சாட்டியுள்ளார். ஐக்கிய தேசியக்கட்சியின் அரசாங்கம் ஆட்சியில் இருக்கும் போது மிகவும் மட்டுப்படுத்தப்பட்ட நிலையிலேயே சூதாட்ட நிலையங்கள் காணப்பட்டதாகவும் தற்போது பௌத்த விகாரைக்குப் பதிலாக சூதாட்ட நிலையங்கள் அதிகளவில் திறக்கப்படுவதாகவும் ரணில் விக்கிரமசிங்க சுட்டிக்காட்டினார்.

ஆனால் தற்போதைய அரசாங்கம் எதுவித கட்டுப்பாடுகளும் இன்றி பாரிய அளவில் சூதாட்ட நிலையங்கள் நடத்திவருவதாகவும் இதன் காரணமாக குற்றச்செயல்கள் அதிகரித்து வருவதாகவும் ரணில் தெரிவித்துள்ளார்.

இறக்குவான விகாரை ஒன்றில் இடம்பெற்ற சமய நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இக்கருத்துக்களை குறிப்பிட்டுள்ளார். (எ-5)

## இனப்பிரச்சினைத் தீர்வுக்காக தெரிவுக்குழுவில் இடம்பெறுவோம்

### ரவூப் ஹக்கீம் தெரிவிப்பு



(கொழும்பு)

இனப்பிரச்சினைத் தீர்வுக்காக அரசாங்கம் அமைக் கவுள்ள அனைத்துக் கட்சி நாடாளுமன்ற தெரிவுக் குழுவில் பங்கேற்கப்போவதாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அறிவித்துள்ளது.

முஸ்லிம் காங்கிரசின் தலைவரும் இலங்கையின் நீதியமைச்சருமான ரவூப் ஹக்கீம் மேற்கண்டவாறு அறிவித்துள்ளார்.

தேசிய இனப்பிரச்சினையில் முஸ்லிம்கள் மூன் றாம் தரப்பாக கருதப்பட்டு அவர்களுடன் பேச்சு நடத் தப்பட வேண்டும். இதனை வலியுறுத்தும் வகையில் நாடாளுமன்ற தெரிவுக்குழுவில் பங்கேற்பதாக ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

இது ஒரு நல்ல சந்தர்ப்பம் என்று குறிப்பிட்டுள்ள அவர் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பும் நாடாளுமன்ற தெரிவுக்குழுவில் பங்கேற்பதற்கு முன்வர வேண்டும்.

இந்த நிலையில் அரசாங்கத்தின் நாடாளுமன்ற தெரிவுக்குழு அமைப்புக்கு அரசாங்கக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களும் அதன் பங்காளிக் கட்சி உறுப்பினர்கள் மாத்திரமே ஆதரவு தெரிவித்துள்ளனர்.

பிரதான எதிர்க்கட்சிகளான ஐக்கிய தேசியக் கட்சி, தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு மற்றும் ஜே.வி.பி. என்பன அதற்கு தமது எதிர்ப்பை வெளியிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

## பொருளாதார நட்புறவை வலுப்படுத்த பாக். விருப்பம்

### விமானப்படை அதிகாரி தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையுடனான பொருளாதார நட்பு றவுகளை மேலும் வலுப்படுத்திக் கொள்ள பாகிஸ்தான் அரசாங்கம் விருப்பம் தெரிவித் துள்ளது. வலய மட்டத்தில் சமாதானம், பாது காப்பு என்பவற்றை உறுதிப்படுத்த இரு நாடு களுக்கும் இடையிலான பொருளாதார ஒத் துழைப்பு உறுதுணையாக அமையும் என பாகிஸ்தான் ஜனாதிபதி ஆசிப் அலி சர்தாரி தெரிவித்துள்ளார்.

இலங்கையின் விமானப்படை அதிகாரி சீப் மார்ஷல் டபிள்யூ.டி.ஆர் எம்.கே. கூனே திலகவுடன் இடம்பெற்ற சந்திப்பின்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

மேலும் இரு நாடுகளுக்கும் இடையி லான பாதுகாப்பு ஒத்துழைப்பு குறித்தும் பாகிஸ்தான் ஜனாதிபதி திருப்தி வெளி யிட்டுள்ளார். (அ-2)






வவுனியா இறம்பைக்குளம் மகளிர் கல்லூரி ஆசிரியர் கு.கிரிதரன் எழுதிய பௌதீக புவியியல் நூல் வெளியீட்டு விழா அண்மையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் நூலின் முதற்பிரதியை வவுனியா தெற்கு வலய கல்விப் பணிப்பாளர் திருமதி அன்ரன் சோமராஜாவிடம் இருந்து வர்த்தகர் எஸ். செல்வரட்ணம் பெறுவதையும் அருகில் நூலாசிரியர் கு.கிரிதரன் நிற்பதையும் வவுனியா நகர சபையின் உப தலைவர் எம்.எம். ரதன் சிறப்புரை ஆற்றுவதையும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம்.

# பேச்சுக்களையும் தெரிவுக்குழுவையும் கூட்டமைப்பு சமமாக கையாளவேண்டும்

## பிரதி வெளிவிவகார அமைச்சர் அறிவுறுத்து



(கொழும்பு)

தமிழ்க்கூட்டமைப்பினர் அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்துவதுடன் பாராளுமன்ற தெரிவுக்குழு அக்கட்சியின் சார்பிலான பிரதிநிதிகளின் பெயர்களை சபாநாயகருக்கு அறிவித்து, பேச்சு, தெரிவுக்குழு ஆகிய இரண்டு விடயங்களையும் சமாந்தரமாக முன்னெடுக்கலாம் என்று பிரதி வெளிவிகார அமைச்சர் நியோமல் பெரேரா தெரிவித்துள்ளார். அரசாங்கத்துக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கும் இடையிலான பேச்சுவார்த்தைகள் ஸ்தம்பிதமடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றமை தொடர்பில் விபரிக்கையிலே பிரதியமைச்சர் இந்த விடயத்தை குறிப்பிட்டார்.

மக்கள் அனைவராலும் ஏற்றுக்கொள்ளக் கூடிய ஒரு அரசியல் தீர்வை அடைவதற்கு புதிய இடையூறுகளை ஏற்படுத்த வேண்டாம் என அரசை வலியுறுத்துகின்றோம் என்று கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் பிரதி வெளிவிகார அமைச்சர் இந்த விடயம் குறித்து மேலும் குறிப்பிடுகையில், தமிழ்த்தேசியக் கூட்டமைப்புடன் பேச்சு நடத்தி விரைவில் தீர்வுத்திட்டம் ஒன்றுக்கு செல்ல வேண்டும் என்பதே அரசாங்கத்தின் நோக்கமாகும்.

எனவே அரசாங்கத்துடனான பேச்சுவார்த்தைகளில் தொடர்ந்து கலந்து கொள்ளுமாறு கூட்டமைப்பிடம் கோரிக்கை விடுக்கின்றோம்.

இதேவேளை இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதற்கான அரசாங்கத்துடனான பேச்சுக்களில் தமிழ்த்தேசியக்கூட்டமைப்பினர் கலந்துகொள்கின்ற அதே வேளை பாராளுமன்ற தெரிவுக் குழுவுக்கு தம்து பிரதிநிதிகளை பெயரிடலாம்.

கூட்டமைப்பினால் இந்த இரண்டு விடயங்களையும் சமாந்தரமாக முன்னெடுக்க முடியும். இடையில் ஏதாவது சிக்கல்கள் ஏற்படின் அது தொடர்பில் விடயங்களை முன்னெடுக்கலாம்.

எனவே கூட்டமைப்பினர் பேச்சு நடத்த அரசாங்கம் தயார் என்பதனை தெளிவாக குறிப்பிடுகின்றோம் என்றார். (அ-2)

# மின்தடைபற்றிய அறிவித்தல்

(யாழ்ப்பாணம்)

உயர் அழுத்த மின்விநியோக மார்க்கங்களிலுள்ள மின்விநியோகத் தூண்கள் சிலவற்றை இடமாற்றம் செய்ய விருப்பதனால் நாளை மறுதினம் வியாழக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5 மணிவரை கரந்தன், நீர்வேலி, சிறுப்பிட்டி, கோப்பாய், இருபாலை, முடமாவடிப் பகுதி, பாற்பண்ணைப்பகுதி, திருநெல்வேலி நகரம், மருத்துவபீடப்பிரதேசம், ஆடிய பாதம் வீதி கொக்குவில் சந்தி வரையான பிரதேசம்; கல்வியங்காடு, நல்லூர், அரியாலை, தென்மராட்சிப் பிரதேசம், உரும்பிராய், ஊரெழு பிரதேசத்தின் ஒரு பகுதி ஆகிய இடங்களில் மின் விநியோகம் தடைப் படும் என யாழ். பிராந்திய மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார். (அ)

# கொழும்பில் பல நட்சத்திர விருந்தகங்களை அமைக்க முடிவு

## அமைச்சர் பசில் தெரிவிப்பு



(கொழும்பு) இலங்கைவரும் சுற்றுலா பயணிகளின் வசதிகருதி கொழும்பிலும் கொழும்புக்கு வெளியிலும் பல நட்சத்திர விருந்தகங்கள் அமைக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இதன்படி கொழும்பில் 11 நட்சத்திர விருந்தகங்களும் கொழும்புக்கு வெளியில் 24 நட்சத்திர விருந்தகங்களும் அமைக்கப்படவுள்ளன.

இந்த தகவலை பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இதன்படி நீர்கொழும்பில் ஒரு நட்சத்திர விருந்தகமும் பேருவளையில் நான்கு விருந்தகங்களும் யாழ்ப்பாணத்தில் இரண்டும் நுவரெலியா, மட்டக்களப்பு மற்றும் திருகோணமலை ஆகிய இடங்களில் தலா ஒவ்வொரு நட்சத்திர விருந்தகமும் அமைக்கப்படவுள்ளன.

இதனிடையே மேற்கு மாகாணத்தில் கட்டுநாயக்க, கம்பஹா மற்றும் நீர்கொழும்பை இணைக்கும் வகையில் சுற்றுலா மண்டலத்தை உருவாக்கவும் அரசாங்கம் திட்டமிட்டுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன. (அ-2)

# முறையற்ற அரச நியமனங்களுக்கு எதிர்ப்புத் தெரிவித்து ஊர்வலம்

## செல்வம் அடைக்கலநாதன் எம்.பி தெரிவிப்பு

(மன்னார்)



மன்னார் மாவட்டத்தில் அண்மைக்காலமாக இடம்பெற்றுவரும் முறைகேடான அரச நியமனங்களுக்கு எதிர்ப்பு தெரிவித்து எதிர்வரும் 14 ஆம் திகதி அம் மாவட்டத்தில் எதிர்ப்பு ஊர்வலமொன்று நடத்தப்படவுள்ளது.

இந்த எதிர்ப்பு ஊர்வலத்தை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நடத்தவுள்ளதாகவும் இதில் கூட்டமைப்பின் அனைத்து உறுப்பினர்களும் கலந்து கொள்ளவுள்ளதாகவும் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பிலும் இப்பேரணி நடத்துவது தொடர்பிலும் கலந்தாலோசிக்கும் கூட்டம் நேற்று முன்தினம் மன்னார் நகர சபையில் நடைபெற்றது.

மேற்படி ஊர்வலத்தை நடத்தி மன்னார் மாவட்ட அரசாங்க அதிபரிடம் மகஜர் கையளிக்கவும் இக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன், தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு கைப்பற்றியுள்ள மன்னார் நகரசபையின் தலைவர் எஸ்.ஞானப்பிரகாசம், உப தலைவர், உறுப்பினர்கள், மன்னார் பிரதேசசபை, மாந்தை மேற்கு பிரதேசசபை, முசலி பிரதேச பை ஆகியவற்றின் தலைவர்கள், உப தலைவர்கள், உறுப்பினர்களும் இக்கூட்டத்தில் கலந்து கொண்டனர். (அ-2)

# கோப் அறிக்கை பரிந்துரைகளை செயற்படுத்த வேண்டும்

பொது முயற்சியாண்மை தெரிவுக்குழுவின் அறிக்கை மேலும் ஒரு அறிக்கையாக மாத்திரம் மாறக்கூடாது என சட்ட வல்லுநர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

கோப் அறிக்கையில் முன்வைக்கப்பட்டுள்ள பரிந்துரைகளை செயற்படுத்த வேண்டியது அவசியம் என கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தின் சட்ட பீடத்தின் பீடாதிபதி கலாநிதி பிரதீபா மஹாணாம ஹேவா தெரிவித்துள்ளார்.

இந்த விடயத்தில் பாராளுமன்றத்திற்கு விசேட பொறுப்பு உள்ளதாகவும் அவர் கூறியுள்ளார். (அ-2)

# மலர் வெளியீட்டுவிழா

யாழ். இந்துக் கல்லூரியின் இந்து இளைஞன் 2009/2010 எனும் மலர் வெளியீட்டுவிழா இன்று செவ்வாய்க்கிழமை மு.ப 11.30 மணிக்கு குமாரசாமி மண்டபத்தில் கல்லூரி அதிபர் வீ.கணேசராஜா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி அதிபர் கலாநிதி ஆறு.திருமுருகன் கலந்து கொள்ளவுள்ளார். மலர் வெளியீட்டுரையினை யாழ். கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலய அதிபர் வே.ஞானகாந்தனும் ஆய்வுரையினை பலாலி ஆசிரியர் பயிற்சி கலாசாலை இளைப்பாறிய அதிபர் கவிஞர் சோ.பத்மநாதனும் ஆற்றவுள்ளார்கள். (அ)

# பாதாள உலகக் குழுவைச் சேர்ந்த ருவன்சந்திமால் டீப் கடத்தப்பட்டார்

பாதாள உலகக் குழுவைச் சேர்ந்த ருவன் சந்திமால் டீப் கடந்த 3ஆம் திகதி மாலை கடத்திச் செல்லப்பட்டுள்ளதாக அவரது மனைவி பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார்.

பொலிஸாரினாலேயே அவர் கடத்தப்பட்டதாகவும் தனது கணவரது கடத்தல் பற்றிய முறைப்பாட்டை ஏற்றுக்கொள்வதற்கு அவர்கள் இழுத்தடித்ததாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கதிர்காமத்தில் இருந்து திரும்பிக் கொண்டிருந்தபோது கொஸ்லா பாணியில் மறைந்திருந்து தம்மைத்தாக்கிய கடத்தல்காரர்களில் ஒருவர் தனது கணவரைச் சுட முனைந்ததாகவும் அவர் மீது தனது கணவர் கல் ஒன்றை வீசியதாகவும் நேவி ருவனின் மனைவி கூறியுள்ளார்.

நினைவிழக்கும் வரை கடத்தல்காரர்கள் தனது கணவரைத் தாக்கியதாகவும் அதன்பின்னர் அவரை வெள்ளை வான் ஒன்றில் கடத்திச் சென்றதாகவும் இவர்களில் சிலர் வராகாப்பொல நகரில் சுதந்திரமாக நடமாடியதைக் கண்டதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

அரசாங்கத்தின் மீதே சந்தேகம் கொள்வதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை பாதுகாப்பு அமைச்சின் ஆலோசகராக இருந்த துமிந்த சில்வாவின் நெருங்கிய உதவியாளர் என்று நேவி ருவன் ஊடகங்களால் குறிப்பிடப்பட்டு வந்தார்.

எனது கணவரைக் கொன்றுவிடாதீர்கள் என்று நான் அவர்களிடம் கோரினேன். கடத்தல்காரர்களில் ஒருவர் உரியவர்களுக்கு தொலைபேசி எடுக்குமாறு கூறியதாகவும் லக்சிகா சாமிலி குறிப்பிட்டுள்ளார்.

இதுகுறித்து வெளியிட்டுள்ள பொலிஸ் பேச்சாளர் அஜித் ரோஹன இது தமக்கும் அரசு மற்றும் படையினருக்கும் சேறுபூசும் முயற்சி என்று குறிப்பிட்டுள்ளார்.

பாரத லக்ஸ்மன் பிரேமச்சந்திர கொலையுடன் சம்பந்தப்பட்டதாக கைது செய்யப்பட்ட பாதாள உலகக்குழுத் தலைவர் தெமட்டகொட சமிந்த கடத்தப்பட்ட ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொடவின் சடலத்தை துமிந்த சில்வாவின் பணிப்பின் பேரில் நீர்கொழும்பு கடலேரிக்கு அப்பாலுள்ள கடலில் புதைத்ததாகவும் துமிந்த சில்வாவின் பணிப்பின் பேரில் பல சடலங்களை தான் இவ்வாறு கடலில் புதைத்ததாகவும் கூறியிருந்தார்.

ஒவ்வொரு முறை சடலங்களை புதைக்கும் போதும் பெரிய முதலாளியின் உத்தரவின் பேரிலேயே இதைச் செய்வதாக தனது முதலாளி (துமிந்த்) கூறுவார் என்றும் அவர் கூறியுள்ளதாக தகவல்கள் வெளியாகியிருந்தன. (அ-2)

# உலகளாவிய பயங்கரவாதத்திற்கு எதிரான போர்...



**அண்மையில் திருகோணமலை ஸாஹிரா கல்லூரியில் அ.வ. முஹ்சீனின் "ஜனநாயகம்-வெள்ளை-கிறிஸ்தவ சமூகங்களின் அரசியல் முறைமை" எனும் நூல் வெளியீட்டின் போது அரசியல் ஆய்வாளரும் எழுத்தாளருமான யதீந்திரா ஆற்றிய உரையின் கட்டுரை வடிவம்**

அமீன் இதற்கு உதாரணமாக ஈரானியப் புரட்சியை எடுத்துக் காட்டுகின்றார். ஈரானியப் புரட்சியின் ஆரம்பத்தில் இடதுசாரிகள் முதன்மையான பங்களிப்பினை வழங்கியிருந்தனர். ஆனால், புரட்சி வெற்றி பெற்ற பின்னர் இடதுசாரிகள் அனைவரையும் ஒழித்துவிட்டனர்.

இஸ்லாமிய அரசுகள் பற்றி முக்கியமான ஆய்வுகளை மேற்கொண்ட மார்க்சிய ஆய்வாளர் ஹெலிடே, ஹமாசைக்கூட 80 களில் இஸ்ரேலே உருவாக்கியதாகக் குறிப்பிடுகிறார். இடதுசாரிகளை அழித்தொழிப்பதற்காகவே இஸ்ரேல் ஹமாசை ஊக்கிவித்தது என்கிறார்.


ஆழ்ந்து நோக்கினால் இவ்வகை வாதங்களை இலகுவில் நிராகரித்துவிட முடியாது.

இரண்டாம் உலக மகாயுத்தத்தைக் தொடர்ந்து உலக அரசியல் இருதுருவ நிலைப்பட்ட போட்டி அரசியலாக மாறியது. 1946ல் இருந்து 1991 வரையான காலப் 'பகுதியின் அரசியல் என்பதே அமெரிக்காவிற்கும் சோவியத் யூனியனுக்கும் இடையிலான பலப்பரீட்சை அரசியலாகவே இருந்தது.

இதில் அமெரிக்காவிற்கு ஆதரவாக பல நாடுகளும் சோவியத்து ஆதரவாக பல நாடுகளும் இருந்தன. இரண்டு முகாம்களாக அரசியல் நகர்த்தப்பட்டது. இந்தக் காலத்தை அரசியல் நோக்கர்கள் பனிப்போர் அரசியல் என்று வரையறுப்பர்.

இந்தப் பனிப்போர் காலத்தில் இன்று அமெரிக்காவால் பயங்கரவாதிகளாக பட்டியலிடப்பட்டிருக்கும் இஸ்லாமிய அமைப்புக்கள் அனைத்தும் சோவியத் யூனியனுக்கு எதிரான அமெரிக்க நிகழ்ச்சி நிரலுக்கு ஒத்தாசை புரிந்தவைதான்.

இன்று அமெரிக்காவால் மிக ஆபத்தான அமைப்புக்கள் என்று கருதப்படும் அல்கய்டாவிலிருந்து



ஹமாஸ், ஹிஸ்புல்லா போன்ற அமைப்புக்கள் அனைத்திற்குமே அமெரிக்காவில் நிதி சேகரிப்பு மையங்கள் இருந்தன. இதனை எவரும் மறுக்க முடியாது.

இதனை நாம் எவ்வாறு கிறிஸ்தவ-இஸ்லாமிய முரண்பாட்டில் விளக்க முடியும்? எவ்வாறு அன்று இதே இஸ்லாமிய அமைப்புக்கள் அமெரிக்காவுடன் கை கோர்த்துக் கொண்டன? அப்போது எங்கு போனது வரலாற்றுப் பகையுணர்வு?

உண்மையில் இந்த விடயங்களை ஆழ்ந்து பார்த்தால் எதிரிக்கு எதிரி நண்பன் என்பது போல் இஸ்லாமிய நாடுகளில் கம்யூனிசத்தின் செல்வாக்கு உறுதிப்படுவதை தடுப்பதற்கு, இத்தகைய இஸ்லாமிய அமைப்புக்களுக்கு அமெரிக்காவின் உதவிகள் தேவைப்பட்டன.

அதே போன்று சோவியத்தை வீழ்த்துவதற்கு இஸ்லாமிய வாதம் அமெரிக்காவிற்கு தேவைப்பட்டது. சோவியத் செல்வாக்கு வீழ்ச்சியடைந்ததை தொடர்ந்து அமெரிக்க நலன்களுக்கு குறுக்காக மேற்படி முன்னைநாள் இஸ்லாமிய நட்பு சக்திகள் திரும்பிய போது, அமெரிக்கா அவர்களையும் தனது எதிரி பட்டியலில் போட்டுக் கொண்டது. இன்றைய முரண்பாட்டை இந்தப் பின்னணியில் பார்ப்பதற்கான சாத்தியங்கள்தான் ஏராளம் உண்டு.

அமெரிக்காவின் தலைமையிலான யுத்தங்களின் அரசியலை ஆழ்ந்து புரிந்து கொள்ள முற்படுவோமானால்- ஓர் உண்மையை நாம் விளங்கிக் கொள்ள முடியும்.

இதற்கு நாம் முன்னைய யுத்தங்களின் அரசியலை விளங்கிக் கொள்ள வேண்டியிருக்கிறது. கொலனித்துவ காலத்தில் ஏன் போர்த்துக்கீசர்-ஒல்லாந்தர்-பிரான்சியர்-ஆங்கிலேயர் என்ற பிரிவினர்களுக்கு இடையில் யுத்தங்கள் நிகழ்ந்தன.

இவர்கள் தமக்குள் யுத்தம் செய்வதற்கும் மதவுணர்வுக்கும் என்ன தொடர்பிருந்தது. ஆனால், இவர்கள் தாம் ஆட்சி செய்த பகுதிகளில் கிறிஸ்தவ மதத்தை பரப்பினர் என்பது உண்மைதான்.

ஆக்கிரமிக்கப்பட்ட பகுதிகளை ஆக்கிரமிப்பாளர்கள் நிர்வகிக்க வேண்டுமென்றால், தங்களுக்கு விசுவாசமான மக்கள்பிரிவுகளை வைத்திருக்க வேண்டும். இந்த நோக்கத்திற்காகவே ஐரோப்பியர்கள் தங்களால் கைப்பற்றப்பட்ட இடங்களில் தங்களது மதங்களை பரப்புவதையும் ஒரு பிரதான செயற்பாடாகக் கொண்டிருந்தனர். அதில் அவர்கள் வெற்றியும் பெற்றிருக்கின்றனர்.

ஆனால், இதனை ஆழ்ந்து நோக்கினால்- இது மதங்களைப் பரப்புவதை பிரதான இலக்காக கொண்ட ஒரு செயலல்ல, மாறாக தங்களது அதிகாரத்தைத் தொடர்ந்தும் தக்க வைப்பதற்கான தந்திரோபாயமாக கையாளப்பட்டது.

அதுவே பின்னர் பனிப்போர் காலத்தில் சோவியத்தை வீழ்த்துவதற்கான கருவியாக அமெரிக்கா அடையாளம் கண்டது. சோவியத் யூனியனின் வீழ்ச்சியைத் தொடர்ந்து உலக அரசியல் ஒழுங்கு ஒற்றை மைய சக்தியின் வழிகாட்டலின் கீழ்வந்தது. இன்றுவரை அது தொடர்கிறது. இன்று அமெரிக்காவின் அதிகார மையத்துக்குள் இல்லாத நாடுகளென ஒருசிலவற்றைத்தான் சொல்ல முடியும். இதில் முக்கியமானது சீனா, ஏனையவற்றுள் வடகொரியா மற்றும் ஈரான் போன்றவற்றைக் குறிப்பிட முடியும். இதனால்தான் சில அமெரிக்க ஆய்வாளர்கள் சீன- இஸ்லாமிய நாடுகளின் உறவுகளை கன்வூசியன்-இஸ்லாமிக் கூட்டு என்று வரையறுக்கின்றனர்.

இந்தக்கூட்டின் அடிப்படையாக இருப்பது-அமெரிக்க அதிகார மையத்தின் மீதான எதிர்ப்பு மட்டுமே. எந்தவகையில் நாம் துருவித்துருவி ஆராய்ந்தாலும் நமக்கு அகப்படுவது- இந்த உலகின் அதிகார மையத்தைத் தொடர்ந்தும் கட்டுப்பாட்டில் வைத்துக்கொள்ளும் அமெரிக்க நகர்வுகளுக்கு எதிரான நிலைப்பாடுகளும், தொடர்ந்தும் அதிகாரத்தை தனது கட்டுப்பாட்டுக்குள் வைத்துக் கொள்வதற்கான அமெரிக்காவின் நகர்களும்தான், இந்த உலக அரசியலாக இருக்கிறது.

இன்றைய உலக அரசியலை நாம் அமெரிக்கா தலைமையிலான ஒற்றை அதிகார அரசியலுக்கும் அந்த அதிகாரத்திற்கு சவால்விட முயலும் சக்திகளுக்கும் இடையிலான முரண்பாட்டின் அரசியலாகவே பார்க்க வேண்டும்.

இந்த சவாலில் அதிகம் பங்கு கொள்ளும் நாடுகளும் அமைப்புகளும் இஸ்லாமிய பின்புலம் கொண்டவையாக இருப்பதால் இதனை இஸ்லாமிய-கிறிஸ்தவ முரண்பாடாக காட்டக்கூடிய ஏது நிலை தெரிகிறது. அவ்வளவு தான் விடயம்.

அமெரிக்காவின் புதிய மூலோபாய நகர்வு-ஆசியாவை மையப்படுத்தியதாகவே மாறியிருக்கிறது. இதனை ஹிலாரி கிளின்ரனின் வார்த்தையில் சொல்வதானால் உலக அரசியலை நகர்த்திச் செல்லும் பிரதான சக்தியாக ஆசிய-பசுபிக் பிராந்தியமே இடம்பெறவிருக்கிறது.

உலக அரசியலை நகர்த்த, அமெரிக்க இராஜாங்க திணைக்களத் தகவல்களின் படி இஸ்லாமிய தீவிரவாதிகளின் செல்வாக்கு மிக்க இடங்களாக தெற்காசியா மற்றும் மத்திய கிழக்கு நாடுகளே முதன்மையானவையாக இருக்கின்றன. எனவே அமெரிக்காவின் ஆசியா நோக்கிய காய் நகர்த்தலில் யாரெல்லாம் அகப்படப் போகின்றார்கள், எவரெல்லாம் பலிக்கடாக்களாக போகின்றனர் என்பதை பொறுத்திருந்தே பார்க்க வேண்டும்.

இதுவரை நான் சில நிலைமைகளை சுட்டிக்காட்டியிருந்தேன். என்னுடைய சொந்தக் கருத்துக்கள் சிலவற்றையும் இங்கு பகிர்ந்து கொள்ள வேண்டியிருக்கிறது.

ஒவ்வொரு சமூகமும் தனது தேவைகளிலிருந்து தனக்கான அரசியல் உறவுகளை தீர்மானிக்கின்றது. தனக்கான அரசியல் நிலைப்பாடுகளை எடுக்கின்றது. அந்த வகையில் நான் ஈழத்தமிழ் சமூகத்தின் ஒரு அங்கம் என்ற வகையில், மேற்கின் அரசியல் நகர்வுகள் குறித்த விமர்சனங்களில் கவனம் செலுத்தும் நிலையில் இல்லை.

இன்றைய சூழலில் ஈழத்தமிழ் மக்களிடம் இருக்கும் ஒரேயொரு அரசியலே, அனைத்துலக சமூகம் ஏதாவது எங்களுக்குச் செய்யும் என்னும் நம்பிக்கை மட்டும்தான். எனவே அந்த அனைத்துலக சமூகத்துடன் கைகோர்க்க வேண்டிய விடயங்களிலேயே நாம் அதிக கவனம் செலுத்த வேண்டியவர்களாக இருக்கிறோம். இதனை எவரும் கேட்க முடியாது. இது எமது சமுதாய நிலையிலிருந்து எடுக்கப்படும் முடிவாகும்.

(முற்றும்)

# ரூபாவின் மதிப்பு குறைவால் பொதுமக்கள் மீது கடன்சுமை

(கொழும்பு)

இலங்கையில் ரூபாவின் மதிப்பு 3 ரூபாய்களினால் குறைக்கப்பட்டமையை அடுத்து பொதுமக்கள் மீதான கடன் அதிகரித்துள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சி குற்றம் சுமத்தியுள்ளது.

இதன்படி பொதுமக்கள் மீது மேலும் 81 பில்லியன் ரூபாய்கள் சுமை ஏற்றப்பட்டுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார்.

ஏற்கனவே இலங்கை பொதுமக்கள் மீதான கடன்தொகை ரூபாயின் மதிப்பு கடந்த வரவு செலவுத் திட்டத்தில் குறைக்கப்பட்ட பின்னர் 5 ஆயிரத்து 200 பில்லியன் ரூபாய்களாக அதிகரித்துள்ளது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை அரசாங்கம் மக்கள் நலன் கருதாது சர்வதேச நாணய நிதியத்தின் விருப்பத்திற்கு ஏற்பவே இந்த நாணய மதிப்பிறக்கத்தை மேற்கொண்டுள்ளதாகவும் ரவி கருணாநாயக்க குற்றம் சுமத்தியுள்ளார்.

அரசாங்கத்தின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ரூபாயின் மதிப்பிறக்கத்துக்கு ஆதரவு தெரிவித்துள்ளபோதிலும் அமைச்சர் வாசுதேவ நாணயக்கார மற்றும் அமைச்சர் திஸ்ஸ விதாரண ஆகியோரே இத் தீர்மானத்துக்கு தமது எதிர்ப்பை வெளியிட்டமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

# கட்சிக்குள் நிலவிவரும் முரண்பாடுகள் விரைவில் களையப்படுவது அவசியம்

## தயாசிறி எம்.பி. ரணிலுக்கு கடிதம்



(கொழும்பு)

நாட்டில் ஆட்சி அதிகாரித்தை கைப்பற்ற வேண்டுமாயின் கட்சிக்குள் ஜனநாயகம் நிலைநாட்டப்பட வேண்டுமென்று ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்கவிற்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

கட்சியின் செயற்குழு முழுமையாக இயங்கவில்லை என்றும் செயற்குழுவிற்கான பிரதிநிதிகள் உரிய முறையில் நியமிக்கப்படவில்லை. எனவே, கட்சிக்குள் நிலவிவரும் முரண்பாடுகள் துரிதகதியில் களையப்பட வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில் பல்வேறு அரசியல் எதிரிகளுடன் போராட்டம் நடத்துவதனை விடுத்து ஒரு பொது எதிரியுடன் போராட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

கட்சியில் நிலவிவரும் முரண்பாடுகள் களையப்பட்டால் மட்டுமே அரசாங்கத்திற்கு எதிராக வெற்றிகரமான போராட்டங்களை முன்னெடுக்க முடியும் என அவர் தெரிவித்துள்ளார்.

கட்சியின் செயற்குழு பதவி வெற்றிடப் பிரச்சினைக்கு தலைவர் ரணில் விக்ரமசிங்க உடனடியாக தீர்வு வழங்க வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார். (அ-2)

# ரணிலுக்கு எதிரான குற்றச்சாட்டில் இருந்து பெயரை நீக்க புத்திக மறுப்பு

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்க மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டில் இருந்து தமது பெயரை நீக்கிக் கொள்ள மாத்தறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் புத்திக பத்திரண மறுப்பு தெரிவித்துள்ளார்.

கட்சியின் ஒழுங்கை மீறியதாக குற்றம் சுமத்தி ரணில் விக்ரமசிங்கவிற்கு எதிராக தென்மாகாண சபை ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர் மைத்திரிகுணரட்ன இருபது குற்றச்சாட்டுக்கள் அடங்கிய குற்றப் பத்திரிகையை அண்மையில் கட்சியின் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்கவிடம் கையளித்திருந்தார்.

இதில் தற்போது கட்சியின் ஒழுக்காற்று நடவடிக்கைக்கு உள்ளாகியுள்ள புத்திக பத்திரண மீது ரணில் விக்ரமசிங்க பாலியல் ரீதியான பிரச்சினைகளை ஏற்படுத்தினார் என்றும் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இந்த நிலையில் குறித்த குற்றச்சாட்டு தொடர்பில் அவர் தமது பெயரை நீக்க இணைங்கியுள்ளதாக அண்மையில் ஐக்கிய தேசியக் கட்சியின் பேச்சாளர் கயந்த கருணாதிலக்க தெரிவித்திருந்தார்.

எனினும் இதனை மறுத்துள்ள பத்திரண தாம் குறித்த குற்றச்சாட்டில் இருந்து தமது பெயரை நீக்கிக் கொள்ள உடன்பட வில்லை என்று தெரிவித்துள்ளார். (அ-2)

## பரிசளிப்புவிழா

கிளி/சோரன்பற்று கணேசா வித்தியாலயத்தின் பரிசளிப்பு விழா இன்று செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு வித்தியாலய முதல்வர் இ.செபரத்தினராசா தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வின் பிரதம விருந்தினராக பளை கோட்டக் கல்வி அலுவலர் த.ஆனந்தசிவம் கலந்து சிறப்பிக்கவுள்ளார். இதன்போது இவ்வாண்டு பாடசாலையின் வளர்ச்சிக்கும் பெருமைக்கும் சாதனை படைத்த மாணவர்களுக்கு பரிசில்கள் வழங்கி கௌரவிக்கப்படவுள்ளனர். (அ)

# 2011.12 06 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

★ 1060-முதலாம் பேலா ஹங்கேரியின் மன்னனாக முடிசூடினான்.

★ 1240-உக்ரேய்னின் கீவ் நகரம் மங்கோலியரிடம் வீழ்ந்தது.

★ 1768-பிரிட்டானிக்கா கலைக்களஞ்சியத்தின் முதற் பதிப்பு வெளியிடப்பட்டது.

★ 1790-ஐக்கிய அமெரிக்க சட்டமன்றம் நியூயோர்க் நகரில் இருந்து பிலடெல்பியாவுக்கு இடம்பெயர்ந்தது.

★ 1865-ஐக்கிய அமெரிக்காவில் அடிமை முறை தடை செய்யப்பட்டது.

★ 1877-வோஷிங்டன் போஸ்ட் செய்திப் பத்திரிகை முதற் தடவையாக வெளியிடப்பட்டது.

★ 1884-வோஷிங்டன் டிசியில் வோஷிங்டன் நினவுச்சின்ன அமைப்பு வேலைகள் முடிவடைந்தன.

★ 1897-வாடகை வாகனம் உலகில் முதற் தடவையாக லண்டனில் சேவைக்கு விடப்பட்டது.

★ 1907-மேற்கு வேர்ஜீனியாவில் மொனொங்கா என்ற இடத்தில் நிலக்கரிச் சுரங்கம் ஒன்றில் இடம்பெற்ற வெடிவிபத்தில் 362 தொழிலாளர்கள் கொல்லப்பட்டனர்.

★ 1917-பின்லாந்து ரஷ்யாவிடம் இருந்து விடுதலையை அறிவித்தது.

★ 1957-வங்கார்ட் விண்கலம் ஏவப்படுகையில் வெடித்துச் சிதறியது.

★ 1917-கனடாவின் நோவா ஸ்கோசியாவில் ஹலிஃபாக்ஸ் துறைமுகத்தில் ஆயுதக் களஞ்சியக் கப்பல் ஒன்று வேறொரு கப்பலுடன் மோதி வெடித்ததில் ஆயிரத்து 900 பேர் கொல்லப்பட்டு நகரத்தின் பெரும்பகுதி அழிந்தது.

★ 1921-இங்கிலாந்துக்கும் அயர்லாந்துக்கும் இடையில் நட்புறவு ஒப்பந்தம் கையெழுத்தாகியது.

★ 1922-ஐரிய சுதந்திர நாடு உருவானது.

★ 1941-இரண்டாம் உலகப் போர்: ஐக்கிய இராச்சியம் பின்லாந்து மீது போரை அறிவித்தது.

★ 1957-வங்கார்ட் விண்கலம் ஏவப்படுகையில் வெடித்ததை அடுத்து பூமியின் சுற்றுவட்டத்துக்கு ஐக்கிய அமெரிக்கா தனது முதலாவது செய்மதி அனுப்பும் திட்டம் நிறைவேறவில்லை.

★ 1971-இந்தியா வங்காளதேசத்தை அங்கீகரித்ததைத் தொடர்ந்து பாகிஸ்தான், இந்தியாவுடனான அனைத்து இராஜதந்திர உறவுகளையும் துண்டித்தது.

★ 1977-தென்னாபிரிக்கா பொப்புதட்ஸ்வானாவுக்கு விடுதலை அளித்தாலும் எந்த நாடும் அதனை அங்கீகரிக்கவில்லை.

★ 1992-அயோத்தியாவில் 16 ஆம் நூற்றாண்டு பழைமைவாய்ந்த பாபர் மசூதி இந்துத் தீவிரவாதிகளால் இடித்து அழிக்கப்பட்டது.

★ 1997-சைபீரியாவில் ரஷ்ய சரக்கு விமானம் ஒன்று குடிமனைத் தொடர் ஒன்றில் மோதியதில் 67 பேர் கொல்லப்பட்டனர்.

★ 2005-சீனாவின் டொங்சூ என்ற இடத்தில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தின் போது பல கிராம மக்கள் சுட்டுக்கொல்லப்பட்டனர்.

★ 2006-செவ்வாய்க்கோளில் இருந்து மார்ஸ் குளோபல் சேர்வயர் அனுப்பிய படங்களில் இருந்து அங்கு நீர் திரவ நிலையில் இருப்பதை உறுதிப்படுத்தியதாக நாசா அறிவித்தது.

### பிறப்பு

★ 1823-மாக்ஸ் முல்லர், ஜேர்மனிய மொழியியலாளர் (இ.1900)

### இறப்புக்கள்

★ 1956-பி.ஆர். அம்பேத்கார், தலித் தலைவர் (பி.1891)

★ 2005-தேவன் நாயர், சிங்கப்பூரின் மூன்றாவது ஜனாதிபதி (பி.1923)

### சிறப்பு நாட்கள்

★ புனித நிக்கலஸ் தினம்

★ பெல்ஜியம், நெதர்லாந்து- சின்டர்க்ளாஸ் கொண்டாட்டம்

★ பின்லாந்து- சுதந்திர தினம் (1917)

★ ஸ்பெயின்- அரசியல் சாசன தினம்



★ 1982-தமிழ் இலக்கிய விமர்சகரும் திறனாய்வாளருமான க.கைலாசபதியின் நினைவு தினம்

# முல்லை பெரியாறு அணை விவகாரம் தமிழக அரசுக்கு கவலை தருகின்றது



## மன்மோகனுக்கு ஜெயலலிதா கடிதம்

(சென்னை)

பெரியாறு அணை அருகே நேற்று முன்தினம் பாரதிய ஜனதா கட்சியின் கேரள இளைஞர் பிரிவினர் அத்துமீறி நுழைந்து ஆர்ப்பாட்டம் செய்ததைத் தொடர்ந்து தமிழக-கேரள எல்லையில் பொலிஸார் குவிக்கப்பட்டுள்ளனர். இதனால் அப்பகுதியில் பதற்றம் ஏற்பட்டது.

இதுபோன்ற போராட்டங்களினால் முல்லைப் பெரியாறு அணையின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ள நிலையில் பிரதமர் மன்மோகன்சிங்கிற்கு தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா நேற்று முன்தினம் கடிதம் எழுதியுள்ளார். அதன்விபரம் வருமாறு,

முல்லைப்பெரியாறு அணைப் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டிருப்பது எங்கள் அரசுக்கு மிகவும் கவலையளிப்பதாக இருக்கிறது என்பதை தங்களது கவனத்திற்கு கொண்டுவர விரும்புகிறேன். அணைப்பகுதியில் கேரளாவைச் சேர்ந்த சில அரசியல்கட்சிகள் வன்முறையில் ஈடுபட்டு வருவதாக தகவல்கள் வந்துள்ளன.

கடந்த 3ஆம் திகதி 200 பேர் கொண்ட கும்பல் அணையில் தமிழ்நாடு மின்சார வாரிய கேட்டை சேதப்படுத்தியுள்ளது.

### பீதி ஏற்படுத்தும் பிரசாரம்

நான் ஏற்கனவே குறிப்பிட்டது போல அணையின் பாதுகாப்பு தொடர்பாக மக்களிடம் பீதி ஏற்படுத்தும் நோக்கில் கேரள அரசு செய்யத் திட்டமிட்ட பிரசாரம்தான் தற்போது அணையின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படும் சூழ்நிலையை உருவாக்கியுள்ளது.

முல்லைப்பெரியாறு அணையைவிட மிகவும் பழைமையான அணைகள் இன்னமும் நல்லநிலையில் செயற்பட்டு வருகின்றன என்பதைச் சுட்டிக்காட்டுவது இப்போது பொருத்தமாக இருக்கும் என்று கருதுகிறேன்.

### 1900 ஆண்டுகளுக்கு முன்பு கட்டிய கல்லணை

தமிழ்நாட்டில் 2ஆம் நூற்றாண்டில் கரிகால சோழனால் கட்டப்பட்ட கல்லணை 1900 ஆண்டுகளைக் கடந்து இன்னமும் உறுதியாக இருந்து எந்தவிதப் பிரச்சினையும் இல்லாமல் செயற்பட்டுக் கொண்டிருக்கிறது. தொடர்ந்து நன்கு பராமரித்து வருவதே இந்த அணையின் நீண்ட ஆயுளுக்கான இரகசியம் ஆகும். தமிழ்நாட்டில் டெல்டா பகுதியில் வசிக்கும் மக்கள் கல்லணை இடிந்துவிடும் என்பது போன்ற அச்சத்தில் வாழ்ந்து கொண்டிருக்கவில்லை.

### . கேரள அரசின் அங்கீகாரம்

கேரள உச்சநீதிமன்ற பிரிவு அமர்வு முன்பு முல்லைப்பெரியாறு அணை தொடர்பான வழக்கு விசாரணைக்கு வந்த போது அந்த மாநில அட்வகேட் ஜெனரல் ஆஜராகி முல்லைப் பெரியாறு அணையில் ஏதாவது பாதிப்பு ஏற்பட்டாலும் அதன் கீழே உள்ள இடுக்கி, குலமாவு, சேருதோணி அணைகளால் முல்லைப் பெரியாறு அணையின் நீரைத் தாங்கிக் கொள்ள முடியும் என்று தெரிவித்துள்ளார்.

இது முல்லைப் பெரியாறு அணை பாதுகாப்புடன் இருப்பதாக கேரள அரசே அங்கீகரிப்பதாகவுள்ளது. கேரள அரசு அறியாமல் செய்த பிரசாரத்தால் அச்சமும் பதற்றமும் கொண்ட சூழ்நிலை உருவாகி இருக்கும் நிலையில் பிரதமர் மட்டத்தில் அனுபவமிக்க அறிவு சார்ந்தவர்கள் இந்தப் பிரச்சினையை கையாளுவதுதான் சரியாக இருக்கும்.

### மத்திய பாதுகாப்பு படை

முல்லைப் பெரியாறு அணைப் பகுதியில் நடந்துள்ள வன்முறை செயல்களைக் கருத்தில் கொண்டும் அவசர அவசியத்தைக் கருதியும் அங்கு மத்திய படையை பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்த வேண்டும்.

முல்லைப் பெரியாறு அணைப் பகுதியில் மனிதர்களால் ஏற்படுத்தப்படும் மோசமான பேரழிவை தடுக்க அங்கு உடனடியாக மத்திய தொழில் பாதுகாப்புப் படையை பாதுகாப்புப் பணியில் ஈடுபட உத்தரவிட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன் என கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ-2)

# கேரளாவுக்கு சாதகமாகவும் தமிழ் நாட்டிற்கு கேடாகவும் மத்தியரசு சதிசெய்து வருகிறது

## முல்லை பெரியாறு அணை குறித்து வைகோ



(சென்னை)

ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ நேற்று முன்தினம் வெளியிட்ட அறிக்கை, முல்லைப் பெரியாறு அணையை உடைத்தே தீருவது என்று கேரள அரசும் அங்குள்ள அரசியல் கட்சிகளும் கங்கணம் கட்டிக் கொண்டுள்ளனர். அந்த அக்கிரமத்தை செயற்படுத்த தீவிர முயற்சியிலும் அவர்கள் ஈடுபட்டுள்ளனர். இந்தியாவில் உள்ள அணைகளிலேயே மிகவும் வலுவான பெரியாறு அணையாகும்.

கேரளாவுக்கு சாதகமாகவும் தமிழ்நாட்டிற்கு கேடாகவும் நடந்து கொள்ளும் காங்கிரசின் மத்திய அரசு இரு மாநில அதிகாரிகள் பேச்சுவார்த்தை என்று சதி செய்கின்றது.

முல்லைப் பெரியாறு அணையை உடைப்பதற்கு ஸீ 40 கோடியும் புதிய அணை கட்ட ஸீ 600 கோடியையும் உம்மன்சாண்டி அரசு ஒதுக்கீடு செய்துள்ளது. அணையை உடைப்பதற்கு அமெரிக்காவின் தொழில் நுணுக்கத்தையும் நாடியுள்ளது.

முல்லைப் பெரியாறு அணையை உடைக்கும் நாசகாரியத்தில் ஈடுபட்டு விடாமல் தடுக்க நாம் அறப்போர் களம் காண வேண்டியது மிகவும் அவசியம். அணையை உடைத்தால் நிரந்தர பொருளாதார முற்றுகைக்கு கேரளம் ஆளாகும்.

இதை எச்சரிப்பதற்காகத்தான் தமிழ்நாட்டில் இருந்து கேரளத்திற்கு செல்லும் அனைத்து வீதிகளிலும் போக்குவரத்து வாகனங்களை தடுத்து நிறுத்தும் மறியல் போராட்டம் கடந்த ஆண்டு மே 28 ஆம் திகதி நடத்தப்பட்டது.

இதேபோல் எதிர்வரும் 21 ஆம் திகதி நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. தென் தமிழ்நாட்டின் வாழ்வாதார உரிமையை காக்க இந்தப் போராட்டத்திற்கு விவசாய பெருமக்களும் அனைத்து தரப்பினரும் ஆதரவு தர வேண்டும் என அவர் வெளியிட்ட அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. (அ-2)



ஜனலோக்பால் மசோதாவுக்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில் சமூக ஆர்வலர் அன்னா ஹசாரே ஆதரவாளர்கள் டில்லியில் சைக்கிள், கார் ஆகியவற்றில் சென்று பேரணி நடத்தியதைப் படத்தில் காணலாம்.

# பாரதச் செய்திகள்

## முல்லை பெரியாறு அணை பேச்சில் தமிழக அரசு பங்கேற்காது

### திருமாவளவன் எம்.பி.தெரிவிப்பு



கடலூர் மாவட்டம் சிதம்பரம் தொகுதி காட்டு மன்னார் கோவில் பகுதியில் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட கிராமங்களை திருமாவளவன் எம்.பி பார்வையிட்டார்.

அப்போது அவர் செய்தியாளர்களிடம் தெரிவிக்கையில்,

முல்லை பெரியாறு அணை பிரச்சினை மத்திய நீர்வளத்துறை அமைச்சகம் சார்பில் இரு மாநிலங்களுக்கு இடையே பேச்சுவார்த்தை நடத்த உள்ளதாக பிரதமர் அறிவித்துள்ளார்.ஆனால் உச்ச நீதிமன்றத்தில் வழக்கு இருப்பதால் இந்த பேச்சுவார்த்தையில் தமிழக அரசு பங்கேற்காது என்று கூறி உள்ளது.

இந்த முடிவு தமிழக மக்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தும். எனவே இந்த முடிவை கைவிட்டு பேச்சுவார்த்தையில் தமிழக அரசு கலந்துகொள்ள வேண்டும். சில்லறை வணிகத்தில் அந்நிய நேரடி முதலீட்டை விடுதலை சிறுத்தைகள் வன்மையாக கண்டிக்கிறது.

இதனால் உள்ளூர் விவசாயிகள் பாதிக்கப்படுவார்கள். ஆகவே மத்திய அரசு சில்லறை வணிகத்தில் அந்நிய நேரடி முதலீட்டு கொள்கையை கைவிட வேண்டும்.

சபரிமலைக்கு செல்லும் தமிழக மக்களை கேரள இளைஞர் காங்கிரஸ் கட்சியினர் தாக்கி வன்முறையை தூண்டி வருகின்றனர்.

அவர்களின் செயல் இரு மாநிலங்களுக்கிடையே வன்முறையை உருவாக்கும். எனவே இதில் மத்திய அரசு தலையிட்டு தீர்வு காண வேண்டும் என்று கூறினார். (அ-2)

## கனிமொழி தீவிரமாக அரசியலில் ஈடுபடப் போவதாக அறிவிப்பு

திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் கருணாநிதியின் வழிகாட்டுதலின் படி இனிமேல் அரசியலில் தீவிரமாக ஈடுபடுவேன் என்று கனிமொழி கூறியுள்ளார்.

நேற்று முன்தினம் தனது வீட்டில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கனிமொழி கூறியதாவது, 2ஜி வழக்கை கழகமும் நானும் சரியான முறையில் நீதிமன்றத்தில் சந்தித்து வருகிறோம். கட்சிக்கும் எனக்கும் ஏற்பட்டுள்ள அவப்பெயரை நீதிமன்றத்தில் சட்டப்படி சந்தித்து இந்த வழக்கிலிருந்து மீண்டும் வருவேன் என்றார்.

இனித் தொடர்ந்து தீவிர அரசியலில் ஈடுபடுவீர்களா என்ற கேள்விக்கு தலைவர் என்னை அரசியலுக்கு அழைத்து வந்திருக்கிறார். அவர் என்ன எதிர்பார்க்கிறாரோ அந்த அளவுக்கு நிச்சயமாக தொடர்ந்து தீவிர அரசியல் பணியில் ஈடுபடுவேன் என்று பதிலளித்தார். (அ-2)

## ஈராக்கில் குண்டு வெடிப்பு; ஐந்து பேர் உயிரிழப்பு

(பக்தாத்)

ஈராக்கில் பல்வேறு இடங்களில் தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலில் 5 பேர் பலியாயினர்.


துப்பாக்கியால் சுட்டும் குண்டுகளை வெடிக்கச் செய்தும் நேற்று முன்தினம் தாக்குதலை அவர்கள் நடத்தியுள்ளனர்.


இதில் இராணுவ பிரிகேடியர் உட்பட 5 பேர் உயிரிழந்தனர்.

தெற்கு பக்தாத்தில் உள்ள உர் பகுதியில் துப்பாக்கியால் சுட்டதில் இராணுவ பிரிகேடியர் ஃபெடல் அல்- அசுல் மற்றும் அவரது மனைவியும் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர்.

தெற்கு ஈராக்கிலுள்ள மொசுல் பகுதியில் துப்பாக்கியால் சுட்டத்தில் 3 பேர் உயிரிழந்தனர். மற்றொரு இடத்தில் நிகழ்ந்த குண்டு வெடிப்பில் இருவர் காயமடைந்தனர். ஈராக்கில் கடந்த மாதம் மட்டும் நடந்த இது போன்ற தாக்குதல்களில் 187 பேர் உயிரிழந்தது குறிப்பிடத்தக்கது. (அ-2)

# நேட்டோபடைகள் விவகாரத்தால் அமெ.-பாக். உறவு சீர்குலைவை ஏற்கமுடியாது - ஹிலாரி





நேட்டோ தாக்குதல் விவகாரத்தால் அமெரிக்கா-பாகிஸ்தான் உறவு சீர்குலைவதை அனுமதிக்க முடியாத என அமெரிக்க வெளிவிவகாரத்துறை அமைச்சர் ஹலாரி கிளின்டன் திட்டவட்டமாக தெரிவித்துள்ளார்.

இந்த முடிவை மறுபரிசீலனை செய்யும் படி கேட்டுக் கொண்ட ஹிலாரி கிளின்டனின் கோரிக்கையை பாகிஸ்தான் பிரதமர் யூசுப் ரசா கிலானி நிராகரித்து விட்டார்.

பாகிஸ்தான் எல்லை சாவடி மீது நேட்டோ தாக்குதல் நடத்திய விவகாரத்தால் அமெரிக்கா-பாகிஸ்தான் உறவு தற்போது மிகவும் மோசமான நிலையில் உள்ளது. இருதரப்பிலும் இந்தச் சீர்குலைவை சரிகட்ட முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன.அமெரிக்க் வெளிவிவகாரத்துறை அமைச்சர் ஹிலாரி பாகிஸ்தான் பிரதமர் கிலானியை தொலைபேசிமூலம் தொடர்பு கொண்டு நேட்டோ தாக்குதலில் பாகிஸ்தான் வீரர்கள் 24 பேர் கொல்லப்பட்டதற்கு வருத்தம் தெரிவித்தார்.

அத்தாக்குதல் உள்நோக்கத்துடன் நிகழ்ந்ததல்ல எனக் குறிப்பிட்ட அவர் விசாரணை முடியும் வரை பாகிஸ்தான் பொறுத்திருக்க வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார்.

மேலும் அவர் கூறுகையில், பாகிஸ்தான் இறையாண்மையை அமெரிக்கா மிக உயர்வாக மதிக்கின்றது. இத்தாக்குதலால் இரு தரப்பு உறவு சீர்குலைய அனுமதிக்கமாட்டோம். இரு தரப்பும் ஒருமித்த நோக்கங்களை உடையவை என்றும் கூறினார்.

அத்துடன் ஜேர்மனியின் பான் நகரில் நேற்று ஆரம்பித்த ஆப்கான் எதிர்காலம் பற்றிய சர்வதேச மாநாட்டில் கலந்து கொள்ளும் படி அவர் கோரிக்கை வைத்தார்.

அதற்கு பதிலளித்த கிலானி மாநாட்டை புறக்கணிப்பதாக அமைச்சரவை எடுத்த முடிவை நாடாளுமன்ற நிலைக்குழு ஏற்றுக் கொண்டதாகவும் அதனால் மாநாட்டில் கலந்து கொள்ள முடியாது எனவும் தெரிவித்தார்.

இந்த முடிவை மீண்டும் பரிசீலனை செய்யுமாறு அமெரிக்க செயலாளர் ஹிலாரி மற்றும் ஐக்கிய நாடுகள் சபைத் தலைவர் பான்-கீ-மூன் வலியுறுத்தியுள்ளனர். ஆப்கான் எதிர்காலத்தைத் தீர்மானிப்பதில் முக்கியபடியாக இக்கூட்டம் கருதப்படும். (அ)


## புகுஷிமா டாய்ச்சி கதிரியக்க நீர் கசிந்து பசுபிக் கடலில் கலந்தது

(டோக்கியோ)

ஜப்பானிலுள்ள புகுசிமா டாய்ச்சி என்று அழைக்கப்படும் அணு சக்தி நிலையத்தில் சுமார் 45 தொன் கதிரியக்க நீர் கசிந்து பசுபிக் கடலில் கலந்தது. கடந்த 9 மாதங்களுக்கு முன்பு கடுமையான நிலநடுக்கமும் சுனாமியும் ஜப்பானை சூறையாடிச் சென்றது. இதில் ஜப்பானின் அணுசக்தி நிலையமும் ஒன்று. இந்த பேராபத்திற்கு பின்பு சில நாட்களுக்கு முன்பு தான் மீண்டும் அணு சக்தி நிலையம் இயங்க ஆரம்பித்தது.

இதனையடுத்து அந்த அணு சக்தி நிலையத்தின் சுத்திகரிப்பு பகுதியில் தூய்மைப் படுத்துவதற்காக வைத்திருந்த சுமார் 45 தொன் எடையுள்ள கதிரியக்க நீர் கசிந்து பசுபிக் கடலில் கலந்துள்ளது. இதனை கண்டுபிடித்து அனைத்து எந்திரங்களின் இயக்கமும் நிறுத்தப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது. (அ-2)

## குளோனிங் முறையில் மீண்டும் மமத் யானை உருவாக்க முயற்சி



குளோனிங் முறையில் மீண்டும் மமத் யானையை உருவாக்க விஞ்ஞானிகள் முயற்சி செய்கின்றனர்.உலகில் கடந்த 10 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு மமத் என்ற மிகப் பெரிய உருவம் உள்ள யானைகள் அதிகளவில் இருந்தன. அவை உடலில் உரோமங்களுடன் நீண்ட பெரிய சுருண்ட தந்தங்களைக் கொண்டவை. அந்த யானை இனம் படிப்படியாக அழிந்தது.

தற்போது ரஷ்யாவின் சைபீரியா வனப் பகுதியில் மட்டும் மிகச் சிறியளவில் உள்ளன. அழியும் விளிம்பிலுள்ள அந்த யானை இனத்தை மீண்டும் பெருக செய்ய ஏற்பட்ட முயற்சிகள் வெற்றி அடையவில்லை.எனவே அவற்றை குளோனிங் முறையில் உருவாக்க விஞ்ஞானிகள் முயற்சி செய்து வருகின்றனர். அதற்கான ஆராய்சியில் ரஷ்யாவின் சக்கா குடியரசு மமத் அருட்காட்சியகமும் ஜப்பான் கின்கி பல்கலைக்கழகமும் ஈடுபட்டுள்ளன.

ஏற்கனவே பாதுகாக்கப்பட்டு பத்திரப்படுத்தி வைக்கப்பட்டுள்ள மமத் யானையின் தொடை எலும்பு (போன்மேரேர்) பகுதியில் இருந்து எடுக்கப்படும் செல்களின் மூலம் குளோனிங் முறையில் உருவாக்க முயற்சி மேற்கொள்ளப்பட்டது.

இந்த முயற்சி வெற்றி பெறும் நிலையில் உள்ளது.எனவே இன்னும் 5 ஆண்டுகளில் குளோனிங் மமத் யானைகள் உருவாகும் என விஞ்ஞானிகள் நம்பிக்கை தெரிவித்துள்ளனர். (அ-2)

## ஹிட்லரால் திறந்து வைக்கப்பட்ட விளையாட்டு அரங்கம் இடிப்பு

சர்வாதிகாரி அடொல்ப் ஹிட்லரால் 1935 ஆம் ஆண்டு திறந்து வைக்கப்பட்ட Deutschlandhalle என்ற விளையாட்டு அரங்கம் பழுதுபட்டதால் நேற்று முன்தினம் இரவு இடிக்கப்பட்டது.

அவருடைய பெருமையை பறைசாற்றும் இந்த அரங்கம் எதிர்வரும் 2013 ஆம் ஆண்டு ஒரு புதிய கருத்தரங்கு மற்றும் கண்காட்சி அரங்காக உருமாறப் போகின்றது.

ஜேர்மனியின் இந்த அரங்கத்தை இடித்த போது 200 மீற்றர் சுற்றளவில் போக்கு வரத்து தடை செய்யப்பட்டது.

அடொல்ப் ஹிட்லர் 1935 ஆம் ஆண்டு நவம்பர் 29 ஆம் திகதி இந்த அரங்கத்தை திறந்து வைத்தார். 1936 ஆம் ஆண்டு இங்கு ஒலிம்பிக் போட்டிகள் நடைபெற்றன. ஒலிம்பிக் போட்டிகள் முடிந்த பின்னர் பொதுக் கூட்டம், மாநாடு போன்றவை நடத்த இந்த அரங்கம் பயன்பட்டது.

இந்த விளையாட்டு அரங்கத்தை பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த ஓர்ட்மனும் பிரிட்ஸ் வீமரும் இணைந்து வடிவமைத்தனர். 117 மீற்றர் நீளமும் 83 மீற்றர் அகலமும் கொண்ட இந்த அரங்கம் 16 ஆயிரம் பார்வையாளர்கள் அமரும்படி வசதி கொண்டது.

1943 இல் நடந்த உலகப் போரில் இந்த அரங்கம் பெரும் சேதத்தை சந்தித்தது குறிப்பிடத்தக்கது. (அ-2)





## ரஷ்ய நாடாளுமன்ற தேர்தலில் 11 கோடி மக்கள் வாக்களிப்பு


ரஷ்யாவில் நாடாளுமன்ற தேர்தல் நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில் பிரதமர் விளாடிமிர் புடின் கட்சி வெற்றி பெறும் என்றாலும் கடந்த முறை போல் அதிக இடங்களை கைப்பற்றாது என கருத்துக் கணிப்புக்கள் கூறுகின்றன.

சோவியூத் யூனியன் உடைந்த பின்னர் ரஷ்ய நாடாளுமன்றத்தின் கீழ் அவைக்கு 6 ஆவது தேர்தல் நடைபெற்றது. நாடு முழுவதும் சுமார் ஒரு இலட்சம் வாக்குச் சாவடிகளில் 11 கோடி பேர் வாக்களித்தனர். 450 உறுப்பினர்களை தேர்ந்தெடுப்பதற்கான இந்த தேர்தலில் 7 கட்சிகளின் பிரதிநிதிகள் போட்டியிட்டனர்.

தேர்தல் கண்காணிப்பு அமைப்பான கோலோஸ், பிரதமர் விளாடிமிர் புடினின் ஆளும் கட்சியான ஐக்கிய ரஷ்யா கட்சி தேர்தல் முறைகேடுகளில் ஈடுபட்டதாக கூறி தங்களுக்கு 5, 300 புகார்கள் வந்துள்ளதாகத் தெரிவித்துள்ளது.

இந்தியாவில் உள்ள ரஷ்யர்கள் வாக்களிப்பதற்கு ஏதுவாக டில்லியில் உள்ள ரஷ்ய தூதரகம்,மும்பை, கல்கொத்தா, சென்னையில் உள்ள துணை தூதரகங்களிலும் வாக்குச் சாவடிகள் அமைக்கப்பட்டன. இது தவிர முக்கிய சுற்றுலா தளமான கோவாவிலும் வாக்குச் சாவடி அமைக்கப்பட்டிருந்தது. இங்கு 10 ஆயிரம் ரஷ்யர்கள் சுற்றுலா வந்துள்ளனர்.

இப்போது பிரதமராக உள்ள புடின் ஏற்கனவே 2 முறை ஜனாதிபதியாகஇருந்தவர். அந்நாட்டு சட்டப்படி தொடர்ந்து 2 முறைக்கு மேல் ஜனாதிபதியாக நீடிக்க முடியாது என்ற காரணத்தினால் மெத்வதேவ்வை ஜனாதிபதியாக்கி விட்டு புடின் பிரதமரானார். இந்நிலையில் வரும் மார்ச்சில் நடைபெறவுள்ள ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடப் போவதாக புடின் அறிவித்துள்ளார். இதனால் ஜனாதிபதி மெத்வதேவ் பிரதமர் வேட்பாளராக போட்டியிடுகின்றார். (அ-2)



ரஷ்யாவில் நேற்றுமுன்தினம் பாராளுமன்ற தேர்தல் நடைபெற்றது. இதில் மொஸ்கோவில் வாக்களிக்க வந்த ஜனாதிபதி டிமிட்ரி மெத்வதேவையும் அவரது பாரியாரையும் படத்தில் காணலாம்.

# புதிய பரீட்சை முறையொன்றை ஏற்படுத்துவதற்கு நடவடிக்கை

## பிரதிக்கல்வி அமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)

புதிய பரீட்சை முறையொன்றை ஏற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பதாக பிரதி கல்விப் அமைச்சர் விஜித் விஜயமுனி சொய்சா பாராளுமன்றத்தில் நேற்று தெரிவித் துள்ளார்.

அடுத்த வருடத்திற்கான வரவு செலவுத் திட்டத்தி கல்வி மற்றும் உயர் கல்வி அமைச்சுக்களுக்கான நிதி ஒதுக்கீடுகள் மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய போது பிரதி அமைச்சர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

இன்றைய விவாதத்தின் போது தற்போதைய கல்வி முறைமையை விமர்சிக்கும் வகையில் எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் கருத்துக்களை வெளியிட்டனர்.

விவாதத்தை ஆரம்பித்து உரையாற்றிய ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் அக்கில விராஜ் காரியவசம் அதிபர்களின் பிரச்சினை, ஆசிரியர் பற்றாக் குறை, கடமை நிறைவேற்று கல்விப்பணிப் பாளர் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பாக சபையில் எடுத்துக் கூறினார்.

சில பாடசாலைகளில் உடற்பயிற்சி ஆசிரியர்கள் அதிபர்களாக கடமையாற்றுவதாகவும் பாராளுமன்ற உறுப்பினர் அக்கில விராஜ் காரியவசம் தெரிவித்துள்ளார்.

மாலம்பை தனியார் மருத்துவக் கல்லூரி தொடர்பிலும் அவர் விமர்சனம் முன்வைத்துள்ளார்.

இந்தக் கருத்துக்களுக்கு பதிலளித்த பிரதிக்கல்வி அமைச்சர் புதிய பரீட்சை முறைமையொன்றை அறிமுகப்படுத்த எண்ணியுள்ளதாக சபையில் அறிவித்துள்ளார்.

மனனம் செய்து பரீட்சையில் சித்தியடையும் முறைமைக்கு பதிலாக திறமைசாலிகளைத் தெரிவு செய்வதற்கான பரீட்சை முறைமை அறிமுகப்படுத்தப்படும் எனவும் பிரதி அமைச்சர் கூறியுள்ளார்.

ஆசிய பசுபிக் பிராந்திய ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையை இலங்கையில் ஸ்தாபிக்க உத்தேசித்துள்ளதாகவும் பிரதிக் கல்வி அமைச்சர் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய் தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் கபீர் ஹசீம் விவாதத்தில் கலந்து கொண்டு கருத்து வெளியிடுகையில், இலவசக் கல்வி பாதுகாக்கப்பட வேண்டும் என வலியுறுத்தியுள்ளார்.

மாலம்பை தனியார் மருத்துவக் கல்லூரி உரிய தரத்திற்கு அமைய ஸ்தாபிக்கப்படவில்லை எனவும் பாராளுமன்ற உறுப்பினர் குற்றம் சுமத்தியுள்ளார்.

மருத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவனத்தின் பயிற்சிகாக தெரிவாகும் அனைவரும் அதற்காக இணைத்துக்கொள்ளப்படுவதில்லை என ஜனநாயகத் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் அனுரகுமார திசாநாயக்க பாராளுமன்றத்தில் நேற்று தெரிவித்துள்ளார்.

அந்த நடவடிக்கைக்கு தாமும் எதிர்ப்பை வெளிப்படுத்துவதாக உயர்கல்வி அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்க குறிப்பிட்டுள்ளார். (அ-2)

## திறப்புவிழா

(யாழ்ப்பாணம்)

மக்கள் வங்கியின் அளவெட்டி நிலைய திறப்புவிழா நாளை புதன்கிழமை காலை 9 மணிக்கு வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ. சந்திரசிறி அவர்களால் திறந்து வைக்கப்படவுள்ளது.

இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினர்களாக வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளரும் வடமாகாண ஆளுநரின் செயலாளருமான எல்.இளங்கோவன், வலி. வடக்கு பிரதேச செயலாளர் எஸ். முரளிதரனும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (அ)

## குவைத்தில் நிர்க்கதியான நூறு இலங்கையர்கள் நாடு திரும்பினர்

குவைத்தில் நிர்க்கதியான மேலும் நூறு இலங்கையர்கள் நேற்று அதிகாலை நாடு திரும்பியுள்ளனர். இவர்கள் நேற்று அதிகாலை நான்கு மணியளவில் நாட்டை வந்தடைந்ததாக விமான நிலைய முகாமையாளர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, குவைத் அரசாங்கத்தின் ஒத்துழைப்புடன் அவர்கள் நாட்டிற்கு அனுப்பிவைக்கப்பட்டதாக அந்த நாட்டிலுள்ள இலங்கைத் தூதரகம் அறிவித்துள்ளது. குவைத்தில் நிர்க்கதியாகியுள்ள மேலும் 100 இலங்கையர்கள் அடுத்த வாரம் நாட்டிற்கு அனுப்பி வைக்கப்படவுள்ளதாகவும் குவைத்துக்கான இலங்கைத் தூதரகம் தெரிவித்துள்ளது.

(அ-2)

## 2020 ஊசிகளை தலையில் ஏற்றி புதிய உலக சாதனை

கனடாவில் உள்ள மோகனதாஸ் சிவநாயகம் என்ற தமிழ் இளைஞர் புதிய உலக சாதனை ஒன்றை நிகழ்த்தியிருக்கிறார். தலையில் 2020 ஊசிகளை ஏற்றி இந்த உலக சாதனையை நிகழ்த்தியுள்ளார்.

இதற்கு முதல் சீன நாட்டை சேர்ந்த ஒருவர் தலையில் 2 ஆயிரம் ஊசிகளை ஏற்றி உலக சாதனையை செய்திருந்தார்.

அவரின் இந்த சாதனையை முறியடித்து 2020 ஊசிகளை தலையில் ஏற்றி இந்த இளைஞர் உலக சாதனையைப் புரிந்துள்ளார்.

கனடாவில் நேற்று மன்தினம் 3 ஆம் திகதி சனிக்கிழமை இரவு இந்த உலக சாதனை நிகழ்த்தப்பட்டுள்ளது. (அ-2)

## 96 ஆண்டுகளுக்கு முன் தயாரிக்கப்பட்ட கொக்கோகோலா போத்தல்கள் ஏலம்

(கொழும்பு)

உலகப் புகழ்பெற்ற குளிர்பானம் கோகோ கோலா. அமெரிக்காவின் கொலம்பஸ் நகரை சேர்ந்த ஜான் ஸ்டித் பெம்பர்டன் என்பவர் 1886 ஆம் ஆண்டு இந்த பானத்தை கண்டுபிடித்தார்.

ஆசா காண்ட்லர் என்பவர் 1889 ஆம் ஆண்டு இதன் தயாரிப்பு உரிமையை பெற்று 1892 ஆம் ஆண்டு கோகோகோலா நிறுவனத்தை தொடங்கினார்.

அந்த காலகட்டத்தில் தற்போதைய சென்ட் போத்தல், ஒயின் போத்தல் வடிவத்தில் கோக் வெளிவந்தது. இந்நிலையில் போத்தல் வடிவத்தை மாற்ற விரும்பிய கோக் நிறுவனம் 1915 ஆம் ஆண்டில் போட்டியொன்றை அறிவித்தது. தொட்டுப் பார்த்தே கண்டுபிடிக்கும் அளவுக்கு இருக்க வேண்டும் என்பது தான் நிபந்தனை. இயர்ல் டீன் என்பவர் வரைந்து அனுப்பிய வடிவம் சிறந்ததாக தேர்ந்தெடுக்கப்பட்டது.

அதன் அடிப்படையில் சோதனைக்காக சில போத்தல்கள் தயாரிக்கப்பட்டன. அடிப் பகுதியைவிட நடுப் பகுதி குண்டாக இருந்தால் கன்வேயர் பெல்ட்டில் செல்லும் போது போத்தல் விழுந்துவிட்டது. பின்னர் வடிவம் சற்று மாற்றப்பட்டு போத்தல்கள் தயாரிக்கப் பட்டன.

சோதனைக்காக தயாரித்ததில் 2 போத்தல்கள் மிஞ்சின. ஒன்று அட்லான்டாவில் உள்ள கோக் தலைமை அலுவலகத்தில் பாதுகாக்கப் பட்டுவருகிறது. இன்னொரு போத்தலை இயர்லின் பேரன் பிராட் வைத்திருந்தார்.

ஜுலியன் நிறுவனம் மூலமாக அதை அவர் தற்போது ஏலம் விட்டார். 96 ஆண்டு பழைமையான் கோக் போத்தல் ரூ1.22 கோடிக்கு (இந்திய ரூபாய் மதிப்புப்படி) ஏலம் எடுக்கப்பட்டது. இயர்ல் வரைந்து அனுப்பிய காகிதம் ரூ1.16 கோடிக்கு (இந்தியரூபாய் மதிப்புப்படி) ஏற்கனவே ஏலம் போனது குறிப்பிடத்தக்கது. (அ-2)

## சில்லறை வர்த்தக உடன்படிக்கையால் இந்திய பாராளுமன்றத்தில் அமளி துமளி

## முகர்ஜி – சுஷ்மா பேச்சு

(புதுடில்லி)

தொடர்ந்து முடங்கி வரும் பாராளுமன்றை அமளி இல்லாமல் நடத்தும் முயற்சியாக மத்திய நிதியமைச்சர் பிரணாப் முகர்ஜி எதிர்க்கட்சி தலைவர் சுஷ்மா சுவராஜை அழைத்து பேசினார். சில்லறை வர்த்தகத்தில் அந்நிய முதலீடு திட்டத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து எதிர்க்கட்சியினர் பாராளுமன்ற அமளியில் ஈடுபட்டு வருகின்றனர். இதனால் முக்கிய மசோதாக்களை நிறைவேற்ற முடியாமல் காங்கிரஸ் அரசு தவித்து வருகிறது.

கடந்த வாரம் ஆரம்பித்து குளிர்கால கூட்டம் ஒருநாள் கூட முழுமையாக நடக்கவில்லை. காங்கிரஸ் அரசில் அங்கம் வகிக்கும் தி.மு.க மற்றும் திரிணாமுல் காங்கிரஸ் கட்சியும் எதிர்த்து வருகிறது.

தொடர்ந்து பிரணாப் தலைமையில் அனைத்து கட்சி கூட்டம் நடந்தது. இதிலும் உடன்பாடு ஏற்படவில்லை.

இந்நிலையில் நேற்று மத்திய நிதி அமைச்சர் பிரணாப் சுஷ்மாவை அழைத்து பேசினார். பாராளுமன்றை சுமுகமாக நடத்த அனுமதிக்குமாறு அந்நிய முதலீடு திட்ட விவகாரத்தில் கருத்தொற்றுமை ஏற்படும் வரை தள்ளி போடுவது என அரசு முடிவு எடுக்கும் என்று கூறியதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. இதனால் அரசு இந்த திட்டத்தை வாபஸ் வாங்கும் என டில்லி வட்டாரம் தெரிவிக்கிறது. தொடர்ந்து மார்க் கம்யூ தலைவர்களில் ஒருவரான சீத்தாராம் யெய்சூரியையும் அழைத்து பேசினார்.

எதிர்வரும் புதன்கிழமைக்குள் மத்திய அமைச்சரவை கூடி ஒரு முக்கிய அறிவிப்பை வெளியிடலாம். இதனால் காங்கிரஸ் எம்.பி.க்கள் அனைவரும் 7 மற்றும் 8 ஆம் திகதிகளில் டில்லியில் தங்கியிருக்க வேண்டும் என்றும் கேட்டு கொள்ளப்பட்டுள்ளனர்.

இது தொடர்பாக சுஷ்மா கருத்து தெரிவிக்கையில், நாங்கள் தள்ளிவைக்க வலியுறுத்தவில்லை. முழுமையாக திரும்ப பெற வேண்டும் என வலியுறுத்துகிறோம் என்றார். (அ-2)

## முஸ்லிம்களின் கல்வியை அபிவிருத்தி செய்யுமாறு அமைச்சர் பௌசி கோரிக்கை

(கொழும்பு)



ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்புதல் மற்றும் மௌலவி ஆசிரியர் நியமனங்களை வழங்குதல் மூலம் முஸ்லிம்மக்களின் கல் வித்துறையை அபிவிருத்தி செய்யுமாறு கல்வி அமைச்சர் பந்துலகுணவர்த்தனவிடம் சிரேஷ்ட அமைச்சர் ஏ.எச்.எம் பௌசி நாடா ளுமன்றத்தில் கோரிக்கை விடுத்துள்ளார்.

முஸ்லிம்களின் கல்வி அபிவிருத்தியில் முன்னாள் கல்வி அமைச்சர் ரிச்சட் பத்திரண விடமிருந்து கிடைத்த உதவிகளை அமைச்சர் பௌசி நினைவு கூர்ந்தார்.

சுசில் பிரேமஜயந்த கல்வி அமைச்சராக பதவிவகித்த காலத்தில் முஸ்லிம் மாண வர்களின் கல்வி அபிவிருத்தியில் மேற் கொண்ட நடவடிக்கைகளையும் அவர் நினைவுபடுத்தியுள்ளார்.

முஸ்லிம் மாணவர்களின் பிரச்சினை குறி த்து ஆராய்வதற்கு முன்னாள் கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த குழுவொன்றை நிய மித்து அறிக்கையொன்றை தயாரித்ததாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கை அவரிடம் சமர்ப்பிக்கப் பட்டது. ஆனால், அவரின் அமைச்சு இலாகா மாற்றப்பட்டதால் அவரால் மேற்படி குழுவின் சிபாரிசுகளை அமுல்படுத்த முடியவில்லை என அவர் கூறினார். (அ-2)

புத்திசாலித்தனத்திற்கு எல்லை உண்டு. முட்டாள்தனத்திற்கு எல்லையே இல்லை. - ஓர் அறிஞர்

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

## அதோ பார் உன் கொப்பாட்டன் காலத்து குத்துவிளக்கு உரப்பையில்...!

சஞ்சீவி மலையைத் தூக்கிய அனுமான் மணித்தியாலத்திற்கு எத்தனை கிலோமீற்றர் வேகத்தில் அந்த மலையைக் கொண்டு வந்தான் என்று டென்மார்க் நாட்டுப் பேராசிரியர் ஒருவர் ஆய்வு செய்தார்.

சஞ்சீவி மலையை அனுமன் தூக்கிச் சென்ற தான தகவலை நாம் அறிந்து வைத்திருந்தாலும் அது ஆய்வுக்குரியது என்பதைக் கூட நம்மவர்கள் அறியாதவர்களாக இருந்தனர்.

பொதுவில் எங்களின் பெருமை எங்களுக்குத் தெரியாத அளவில்தான் நிலைமை உள்ளது.

அதிலும் தமிழ் மக்களின் நிலைமை இது விடயத்தில் படுமோசம்.

எங்கள் வரலாற்று சின்னங்கள், எங்கள் பண்பாட்டு கோலங்கள், எங்கள் மூதாதையர்களின் வாழ்வியல் அடையாளங்கள் என எதிலும் அக்கறையற்றவர்களாக நாம் இருப்பது வேதனையிலும் வேதனை.

இப்போது யாழ்ப்பாணத்தில் தகரம் முதல் இரும்பு, செம்பு, பித்தளை என எல்லாம் தென்பகுதிக்கு ஏற்றப்படுகின்றது.

இதில் தகரங்கள், இரும்புகள் தென்பகுதிக்கு ஏற்றப்படுவது எங்கள் சுற்றுச்சூழலுக்கு உதவுவதாக அமைகின்றது எனும் உண்மை மறுப்பதற்கில்லை.

உடைந்த தகரங்கள், இரும்புகள் அகற்றப்படுவதன் காரணமாக எங்கள் சுற்றுச்சூழல் தூய்மையாகியது என்ற உண்மையோடு செப்பு, பித்தளைகளும் தென்பகுதிக்கு எடுத்துச் செல்லப்படுவதன் காரணமாக இருநூறு, முந்நூறு வருடங்களாகப் பாதுகாத்த எங்கள் வரலாற்றுப் பொக்கிஷங்கள் எங்கள் இருப்பிடத்தை விட்டுப் போகின்றன என்ற வேதனை தாளமுடியவில்லை.

பேரன் காலத்துக் குடம், பூட்டன் காலத்துக் கமண்டலம், கொப்பாட்டன் காலத்து குத்துவிளக்கு, பூட்டியின் வெற்றிலைத்தட்டம், பாட்டியின் செப்பு கைவிளக்கு, ஆலடி வைரவருக்குப் பொங்கிய சருவம், கூடவே அதன் செப்பு அகப்பை, நெல் அவித்த கிடாரம், தண்ணீர் சுட வைக்கும் அண்டா இப்படி எல்லாமும் கிலோக் கணக்கில் நிறுத்து உரப்பையில் கட்டி யாழ்ப்பாணம் ஐந்து சந்தியில் கொடுக்க, ஒரு துண்டு புளிபோட்டு செப்புக்குடங்கள் மினுமினுக்க தென்பகுதியில் அதன் விலை பலமடங்காகின்றது.

அறியாமையால் எங்கள் பெருமையை புரியாமையால் விற்றுப்போகின்ற செப்புப் பாத்திரங்கள், பித்தளைப் பொருட்களைக் காப்பாற்ற செப்பும் பித்தளையும் தென்பகுதிக்கு எடுத்துச் செல்லப்படுவதை தடை செய்ய வேண்டும்.

இது விடயத்தில் யாழ். அரச அதிபர் உடனடியாக நடவடிக்கை எடுப்பார் என்ற நம்பிக்கை உண்டு.

# எண்ணெய் அகழ்வில் சீனா; இந்தியா கடும் எதிர்ப்பு

(கொழும்பு)

இலங்கையை சுற்றியுள்ள கடற்பரப்பில் எண்ணெய் அகழ்வு ஆராய்ச்சியை மேற்கொள்ள சீன நிறுவனம் ஒன்றுக்கு அனுமதி வழங்கும் யோசனை தொடர்பில் இந்திய அரசாங்கம் உத்தியோகபூர்வமாக தனது அதிருப்தியை வெளியிட்டுள்ளதாக இராஜதந்திர தரப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

சீனா, இலங்கை கடற்பரப்பில் மேற்கொள்ளும் இந்த ஆய்வு பணிகள் இந்தியாவின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக இருக்கும் என்பதால் அந்த நாடு இந்த அதிருப்தியை வெளியிட்டுள்ளது.

இலங்கை கடற்பரப்பை மூன்றாக பிரித்து எண்ணெய் வள ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளப்படுவதுடன் இதில் மன்னார் கடல் பகுதியில் ஆய்வுகளை மேற்கொள்ளும் பணிகள் இந்திய நிறுவனம் ஒன்றுக்கு வழங்கப்பட்டுள்ளன.

ஏனைய இரண்டு பிரிவுகளில் ஆய்வுகளை மேற்கொள்வதற்காக விலைமனு கோரப்பட்டுள்ளது. இதில் தென் பகுதி கடற்பரப்பில் ஆய்வு பணிகள் சீன நிறுவனம் ஒன்றுக்கு வழங்குவது என யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது.

இந்தியாவின் எதிர்ப்புக் காரணமாக இந்த பணிகளை சீன நிறுவனத்திற்கு வழங்கப்படுமா என்பது நிச்சய மற்றதாக உள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-2)

# கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் மறியல் போராட்டம்

பால் விலை மற்றும் பேருந்துக் கட்டண உயர்வை கண்டித்து மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் தமிழகம் முழுவதும் நேற்று வீதி மறியல் போராட்டம் மேற்கொள்ளப்பட்டது.

சென்னையில் நடந்த மறியல் போராட்டத்தின் போது மார்க்சிஸ்ட் மாநில செயலாளர் ராமகிருஷ்ணன், எம்.எல்.ஏக்கள் சவுந்தர்ராஜன், பீமராவ் உட்பட 700 இற்கும் மேற்பட்டோர் கைது செய்யப்பட்டனர்.

முன்னதாக ராமகிருஷ்ணன் கூறுகையில்,

பால் விலை, பஸ் கட்டணத்தை உயர்த்தியதால் தமிழக மக்கள் பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளனர். இந்த விலை உயர்வை அரசு உடனே திரும்பப் பெற வேண்டும் இல்லை என்றால் மதசார்பற்ற கட்சிகளுடன் இணைந்து மிகப் பெரிய போராட்டம் நடத்துவோம் என்றார்.

இதேபோல் கோவை, நெல்லை, திருப்பூர், கிருஷ்ணகிரி, கடலூர், திண்டுக்கல் உள்ளிட்ட தமிழகத்தின் அனைத்து இடங்களிலும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் விலை உயர்வைக் கண்டித்து சாலை மறியலில் ஈடுபட்டவர்கள் கைது செய்யப்பட்டனர். (அ-2)

# கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவில் இறப்பர் உற்பத்தி செய்ய முயற்சி

## அரசாங்கம் அறிவிப்பு



(கொழும்பு)

கிளிநொச்சி, முல்லைத்தீவு, அம்பாறை, மொனராகலை மாவட்டங்களிலும் இறப்பர் உற்பத்தியை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாக பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர் மகிந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசிய கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க நேற்று நாடாளுமன்றத்தில் எழுப்பிய கேள்வி ஒன்றுக்கு பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

இலங்கையின் வருடாந்த இறப்பர் உற்பத்தி அதிகரித்த போதிலும் உலக இறப்பர் ஏற்றுமதியில் இலங்கையின் பங்களிப்பு 1.5 சதவீதமாக குறைவடைந்துள்ளமை குறித்து ரவி கருணாநாயக்க நாடாளுமன்றத்தில் கேள்வி எழுப்பினார்.

அத்தடன், தேயிலைத் தொழிற்துறையின் பாதிப்புக் குறித்து தேயிலை ஆராய்ச்சி நிலையம் ஒன்றும் செய்யாமல் இருப்பது குறித்தும் அவர் கேள்வி எழுப்பியிருந்தார்.

இதற்குப் பதிலளித்த அமைச்சர் மஹிந்த சமரசங்க, நாம் விரைவில் அநுராதபுரத்தில் 20 ஹெக்டேயர் நிலப்பரப்பில் இறப்பர் பயிரிடுவோம்.

பொலன்னறுவையில் ஏற்கெனவே 40 ஹெக்டேயரில் இறப்பர் பயிரிட்டுள்ளோம். மண் சோதனை மற்றும் பரீட்சார்த்த நடவடிக்கைகள் மூலம் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் இறப்பர் பயிரிடுவது சாத்தியம் என்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது எனத் தெரிவித்துள்ளார்.

அத்தடன், 2005 ஆம் ஆண்டின் பின்னர் இலங்கையின் வருடாந்த இறப்பர் உற்பத்தி கணிசமாக அதிகரித்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார். (ஏ)


## ஒளி விழா

(மல்லாவி)

மாங்குளம் மகாவித்தியாலய ஒளி விழா இன்று செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணிக்கு மாணவன் கே. ஸ்ரீபன் தலைமையில் நடைபெற உள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக ஓய்வு பெற்ற துணுக்காய் வலயக் கல்விப் பணிப்பாளர் த.மேகநாதன், துணுக்காய் வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி லோ. வெனிற்றன் மாலினி ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர் (ஏ-3-15)

## ஆறாவது குருபூஜை தினத்தில் அருட்கவி சீ.விநாசித்தம்பி ஐயாவின் பாதம் பணிவோம்



எண்ணங்கள் எல்லாம் இறை வன் திருவடி
வண்ணங்களாக்கி வழிபட வேண்டும்.
ஏகாந்தத்தை இனிதெனக் கொண்டவர்
தேகாந்தத்தில் சிவ நிலை காண்பர்.

*-அருட்கவி சீ.வி*

அடியார்கள் உள்ள மதில்
அன்புருவாய் நின்று நிதம்
அருள் ஒளி பரப்பி நிற்கும்
அருட்கவி ஐயாவின் பாதம் பணிவோம்

*-அடியார்*

## சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்

### *பொறுமைக்கு பெரிய பரிசு*



◆ நம்பிக்கையும் நேர்மையும் பக்தியும் உன்னிடம் இருக்கும் வரை அனைத்துச் செயலும் முன்னேற்றமடையும். இறைவன் அருளால் அபாயம் எதுவும் ஏற்படாது.

◆ பூமிமாதாவைப் போன்று அனைத்தையும் பொறுமையாக ஏற்றுக்கொள்ள தயாராக இருந்தால், உலகமே உங்கள் காலடியில் அமரும்.

◆ நன்மைகளை பெற வேண்டுமானால் வாழும் தெய்வமாகிய ஒவ்வொரு மனிதனையும் வழிபடுங்கள்.

◆ ஏழைக்கு உதவிசெய்வது என்பது, கோவிலில் சிவனைக் கண்டு வணங்குபவனிடம் சிவன் அடையும் மகிழ்ச்சியை விட மேலானதாகும்.

◆ கடவுள் வரம்பு கடந்த பெருமைகளை உடையவர். அவரை வணங்கி தூய்மையான மனத்தைப் பெறலாம்.

◆ இறைவன் மீது நம்பிக்கை கொள்ளுங்கள். அவரையே எப்போதும் சார்ந்து நில்லுங்கள்.

◆ கையை இறைவன் படைத்தது கொடுப்பதற்கே. நீ பட்டினியாய்க் கிடக்க நேர்ந்தாலும், உன்னிடத்தில் ஒருவன் கேட்டால் கடைசிப் பருக்கையையும் கொடுத்துவிடு. அப்போது நீ பூரணமடைவதுடன் தெய்வமாகவும் ஆவாய்.

# த.தே.கூவின் தெரிவுக்குழு தொடர்பான நிலைப்பாட்டை நாம் ஆதரிக்கின்றோம்

## - ஜனநாயக மக்கள் முன்னணி

(கொழும்பு)

பாராளுமன்ற தெரிவுக்குழு தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நிலைப்பாட்டை ஜனநாயக மக்கள் முன்னணி ஆதரித்துள்ளதுடன் அதனை வரவேற்றுள்ளது.

ஜனநாயக மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளர் நல்லையா குமரகுருபரன் நேற்று அறிக்கை ஒன்றினை வெளியிட்டதன் மூலம் இந்த ஆதரவினைத் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத் தெரிவுக்குழு தொடர்பில் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நிலைப்பாட்டினை ஆதரித்து ஜனநாயக மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளர் நல்லையா குமரகுருபரன் வெளியிட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நிலையை ஜனநாய மக்கள் முன்னணி ஆதரிக்கின்றது, வரவேற்கின்றது. இதன் சிறப்பு என்ன வென்றால் அனைத்து தமிழ் கட்சிகளும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நிலைப்பாட்டை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மீது தமிழ் மக்கள் வைத்த நம்பிக்கையை நியாயப்படுவது தான் இந்தநிலை நீடிக்க வேண்டும். ஏமாற்று தந்திரங்கள் வேண்டாம். அரசாங்கம் இதயசுத்தியோடு இனப்பிரச்சினைக்கான தீர்வினை அணுகுவதனால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் தான் நேரடியாக பேச வேண்டும்.

அனைத்து முரண்பாட்டு தவிர்ப்பு நுட்பங்களையும் மார்க்கங்களையும் கடைப்பிடித்து முன்னேற முடியும் என்ற நம்பிக்கையை அரசாங்கம்தான் கொடுக்க வேண்டும்.

சமாந்திரமாக பேச்சுவார்த்தையும் அதே வேளையிலேயே தெரிவுக்குழுவும் ஒரே வேலையை செய்வதென்பது ஒருவேலையை இரண்டு தரம் ஒரேநேரத்தில் செய்து குழப்பத்தை கூட்டுவதாகும்.

பேச்சுவார்த்தையின் முடிவினை ஒருமித்து எடுத்து பின்னர் அரசாங்கம் தெரிவுக் குழுவிற்கோ அல்லது காலவிரயமின்றி சட்டவாக்கத்துக்காக பாராளுமன்றத்துக்கோ சமர்ப்பிக்கலாம்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மீது தமிழ் மக்கள் வைத்த நம்பிக்கையை முரண்பாட்டு எழுத்தாளர்களும் கூட ஆதரித்து பொறுத்து இருந்து பார்க்க வேண்டும். இது குழப்பும் நேரமல்ல. தமிழ் மக்களோடு நல்லிணக்கம் ஏற்படும் வகையில் அரசும் பொலிஸ் அதிகாரிகளும் செயற்பட வேண்டும்.

அதற்கான கடும் உத்தரவு அரசு தலைமையிடமிருந்து அறிவிக்கப்பட வேண்டும். இதனை பேராசிரியர் திஸ்ஸ விதாரண நன்கு அறிவார். அப்படித்தான் அனைத்துக் கட்சிகளின் பிரதிநிதிகள் குழுவிலும் முடிவு எட்டப்பட்டது என்றும் குறிப்பிடப்பட்டிருந்தது. (அ-2)

# இந்தோ காம-லாமா எரிமலை வெடித்தது



இந்தோனேசியாவின் காம- லாமா எரிமலை வெடித்து சிதறியதால் அந்தப் பகுதியை சுற்றியுள்ள ஆயிரக்கணக்கானோர் பாதுகாப்பான இடங்களுக்கு இடம் பெயர்ந்துள்ளனர்.

ஐயாயிரத்து 650 அடி உயரமுள்ள சீற்றம் மிகுந்த காமலாமா எரிமலை நேற்றிலிருந்து சீற்றத்துடன் காணப்படுகிறது.எரிமலையில் இருந்து நெருப்புக் குழம்பும் கரும்புகையும் வெளியாகீ வருகிறது.

இதனால் எழுந்த சாம்பல் பல கிலோ மீற்றர் தூரம் வரை பரவி உள்ளது. எரிமலை தொடர்ந்து சீற்றத்துடன் காணப்படுவதால் அப்பகுதியை சுற்றியுள்ள மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு செல்லுமாறு அறிவுறுத்தப்பட்டனர்.

முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக வட மலூக்க மாநிலத்திலுள்ள டேர்நெட் நகரிலுள்ள விமான நிலையம் இன்று மூடப்பட்டது. மேற்கொண்டு எரிமலை வெடிக்காமல் இருந்தால் விமான நிலையம் நாளை திறக்கப்படுமென்று விமானப் போக்குவரத்து அமைச்சகம் குறிப்பிட்டது. (அ-2)

# நீதிமன்றத்தால் அபராதம்

(யாழ்ப்பாணம்)

அனுமதிப்பத்திரம் இன்றி அரச சாராயம் விற்பனை செய்த குற்றச்சாட்டின் பேரில் நபரொருவர் யாழ் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நேற்றைய தினம் யாழ் நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டார்.

வழக்கை விசாரித்த யாழ் நீதவான் நீதிமன்ற நீதிபதி ஏ.ஏ.ஆனந்தராஜா குறித்த நபர் மன்றில் குற்றத்தை ஒப்புக்கொண்டமையால் குற்றவாளியெனக் கண்டு 2ஆயிரம் ருபா அபராதமும் செலுத்தத் தவறின் ஒரு மாத சாதாரண சிறைத்தண்டனையும் வழங்கித் தீர்ப்பளித்தார்.

ஆசனப்பட்டி அணியாது வாகனம் செலுத்திய குற்றச்சாட்டின் பேரில் 4 பேர் யாழ் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நேற்றைய தினம் யாழ் நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டார்.

வழக்கை விசாரித்த யாழ் நீதவான் நீதிமன்ற நீதிபதி ஏ.ஏ.அனந்தராஜா குறித்த நபர்கள் மன்றில் குற்றத்தை ஒப்புக்கொண்டமையால் குற்றவாளிகளெனக் கண்டு4 பேருக்கும் தலா ஆயிரத்து 500 ருபா அபராதமும் செலுத்தத் தவறின் தலா ஒரு மாத சாதாரண சிறைத்தண்டனையும் வழங்கித் தீர்ப்பளித்தார்.

நுளம்பு பெருகுவதற்கு ஏற்ற முறையில் கழிவுப் பொருட்களை வைத்திருந்த குற்றச்சாட்டின் பேரில் 8 பேர் யாழ் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நேற்றைய தினம் யாழ் நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டார்.

வழக்கை விசாரித்த யாழ் நீதவான் நீதிமன்ற நீதிபதி ஏ.ஏ.ஆனந்தராஜா குறித்த நபர்கள் மன்றில் குற்றத்தை ஒப்புக்கொண்டமையால் குற்றவாளிகளெனக் கண்டு 8 பேருக்கும் தலாஆயிரம் ரூபா அபராதமும் செலுத்தத் தவறின் தலா ஒரு மாத சாதாரண சிறைத் தண்டனையும் வழங்கித் தீர்ப்பளித்தார். (அ-3)

# எதிர்க்கட்சியினர் எல்லாவற்றுக்கும் அரசாங்கத்தை விமர்சிக்கின்றனர்

## நற்செயலையும் பாராட்டுங்கள் என்கிறார் மைத்திரிபால

(கொழும்பு)

யுத்தத்தில் மஹிந்த ராஜபக்ஷ தோல்வியடைந்து பிரபாகரன் வெற்றி பெற வேண்டும் என்று பிரதான எதிர்க்கட்சியை சேர்ந்த சிலர் கனவு கண்டு கொண்டிருந்தனர். அவர்களின் கனவு கலைந்துவிட்டது என்று அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

பிரபாகரன் வெற்றி பெற வேண்டும். பொருளாதாரம் சீர்குலைய வேண்டும். தாமே ஆட்சி பீடம் ஏற வேண்டும் என்றும் ஐ.தே.க. வினர் எதிர்பார்த்திருந்தனர் என்றும் அவர் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் கடந்த சனிக்கிழமை நடைபெற்ற குழுநிலை விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்து உரையாற்றுகையிலே,

ஐ.தே.க. ஆட்சியில் தேசிய வியாபாரிகள், விவசாயிகள் பற்றி சிந்தித்தார்களா? விவசாயிகள் ஐ.தே.க.யுகத்திலேயே நஞ்சருந்தினர். கெசினே,எச்.ஐ.வி இவையிரண்டும் ஐ.தே.க. ஆட்சியிலேயே இந்நாட்டிற்கு கொண்டுவரப்பட்டது.

வெளிநாடுகளிலிருந்து உணவுப்பொருட்களை இறக்குமதி செய்து விவசாயிகளை பலவீனப்படுத்தியது ஐ.தே.க.வே. யாரும் இன்று வீட்டுத்தோட்டம் விவசாயம் மேம்பாடடைகிறது. நஞ்சருந்தும் விவசாயிகள் இல்லை. வெளிநாடுகளுக்கு தனியார் நெல்லை ஏற்றுமதி செய்கின்றனர்.

மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சி யுகத்தில் யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வந்து விவசாயிகள் நெல்லை ஏற்றுமதி செய்யும் நிலை ஏற்பட்டுள்ளது.

எதிரணியினர் சகலதையும் எதிர்க்க வேண்டும் என்ற கொள்ளையில் செயற்படக் கூடாது. எதிரணியினர் எதிர்க்கும் கண்ணாடியை ற்றி விட்டு அரசாங்கத்தின் நற்செயலையும் பார்க்க வேண்டும். பாராட்ட வேண்டும்.

எதற்கெடுத்தாலும் விமர்சிக்கக் கூடாது. ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் அரசாங்கம் தூரநோக்குடன் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றது.

அந்த பயணத்தை தடுக்கும் வகையிலேயே ஐ.தே.க.வினர் செயற்படுகின்றனர். அதற்கு இடமளிக்கமாட்டோம் என்றார். (அ-2)

## உபவேந்தர்கள் மாநாட்டில்

# ரஜரட்டையில் கலை மாணவர்கள் செயற்பாட்டுக்கு கண்டன அறிக்கை

(கொழும்பு)

அனைத்துப் பல்கலைக்கழக உபவேந்தர்கள் மாநாடு கிழக்குப் பல்கலைக்கழகத்தின் மட்டக்களப்பு வந்தாறுமூலை வளாக மண்டபத்தில் நேற்று நடைபெற்றது.

ரஜரட்ட பல்கலைக்கழக உபவேந்தரை அசௌகரியத்திற்குள்ளாக்கும் வகையில் அந்தப் பல்கலைக்கழக மாணவர்கள் செயற்பட்டமைக்கு எதிராக இதன்போது கண்டனத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

மேற்படி பல்கலைக்கழக உபவேந்தர் கே.ஏ.நந்தசேன தலைமையில் நடைபெற்ற இம்மாநாட்டில் 13 பல்கலைக்கழக உபவேந்தர்கள் மற்றும் பணிப்பாளர்களும் கலந்து கொண்டனர்.

மாணவர்களுக்கும் பல்கலைக்கழக நிர்வாகத்தினருக்கும் இடையே முரண்பாடுகள் ஏற்படும் சந்தர்ப்பங்களில் பேச்சுவார்த்தை மூலமாக இணக்கம் பெறப்பட வேண்டுமே தவிர உபவேந்தர்களைத் தடுத்து வைக்கும் முறையற்ற செயற்பாடுகள் இனியொரு போதும் இடம்பெறக் கூடாது என கேட்டுக் கொள்ளப்பட்டதாக குறிப்பிடப்படுகின்றது.

அத்துடன் ரஜரட்ட பல்கலைக்கழகத்தில் இடம்பெற்ற சம்பவம் தொடர்பாக கண்டன அறிக்கையொன்றை வெளியிடுவதற்கும் இந்த மாநாட்டின் போது முடிவு செய்யப்பட்டது.

மானியங்கள் ஆணைக்குழுவின் சுற்றுநிருபங்கள் மற்றும் செயற்பாடுகள் குறித்தும் இதன் போது கருத்துப் பரிமாறப்பட்டுள்ளது. (அ-2)



மூன்று டெஸ்ட் போட்டிகள் மற்றும் 5 ஒரு நாள் போட்டிகள் கொண்ட தொடரில் பங்கேற்பதற்காக இலங்கை கிரிக்கெட் அணியினர் நேற்று திங்கட்கிழமை தென்னாபிரிக்கா பயணமாகினர். இந்த விஜயத்திற்கு முன்னர் சிறிலங்கா கிரிக்கெட் தலைமையகத்தில் நடைபெற்ற சமய வழிபாடுகளில் வீரர்கள் பங்கு பற்றிய காட்சியையும் புறப்பட்டுச் செல்வதையும் படங்களில் காணலாம்.

# இலங்கை வீரர்களின் சம்பளம் தாமதம்; தென்னாபிரிக்க வீரர்கள் கண்டனம்



(கொழும்பு)

இலங்கை கிரிக்கெட் அணி வீரர்களுக்கு எட்டு மாதங்களாக சம்பளம் கொடுக்கப்படாதுள்ளமை குறித்து தென்னாபிரிக்க கிரிக்கெட் வீரர்கள் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

தென்னாபிரிக்காவில் இலங்கை அணி விரைவில் மூன்று டெஸ்ட் போட்டிகளிலும் ஐந்து ஒருநாள் சர்வதேச போட்டிகளிலும் விளையாடவுள்ளது.

இந் நிலையில் தென்னாபிரிக்க டெஸ்ட் அணித்தலைவர் கிறேம் சிமித் ஒருநாள் போட்டிகளுக்கான அணித்தலைவர் டி.வில்லியர்ஸ் ஆகியோர் இலங்கை வீரர்களுக்கு ஆதரவாக குரல் கொடுத்துள்ளனர்.

திலகரட்ண டில்சான் மற்றும் இலங்கையிலுள்ள எமது ஏனைய சக தொழிற்சார் கிரிக்கெட் வீரர்களுக்கு இவ் விடயத்தில் எமது ஆதரவை தெரிவிக்க விரும்புகிறோம் என தென்னாபிரிக்க கிரிக்கெட் வீரர்கள் சங்கம் வெளியிட்ட ஊடகக் குறிப்பொன்றில் கிறேம் சிமித் தெரிவித்துள்ளார்.

கடந்த 8 மாதங்களாக அவர்களின் சம்பளங்கள் வழங்கப்படாதுள்ளநிலையில், அவர்கள் இங்கு கடினமான டெஸ்ட் மற்றும் ஒருநாள் சுற்றுப்போட்டியில் பங்குபற்றுவது சிறந்தது அல்ல என அவர் கூறியுள்ளார்.

கிரிக்கெட்டில் இந்த தொழிற்சார் யுகம் நிலவும் போது இப்படியான விடயங்கள் நடைபெறக்கூடாது. இவ்வளவுக்கும் மத்தியில் மார்ச் மாதத்திலிருந்து தொடர்ந்து நாட்டுக்காக விளையாடி வரும் இலங்கை கிரிக்கெட் வீரர்கள் பாராட்டுக்குரியவர்கள்.

இப்பிரச்சினை விரைவில் தீரும் என நாம் நம்புகிறோம் என ஒரு நாள்போட்டிகளுக்கான தென்னாபிரிக்க அணித்தலைவர் டி.வில்லியர்ஸ் தெரிவித்துள்ளார்.

உலகக்கிண்ணப் போட்டிகளை நடத்தியமைக்காக சர்வதேச கிரிக்கெட் கவுன்ஸிடம் இருந்து (ஐ.சி.சி.) 43 லட்சம் டொலர்களை சிறிலங்காகிரிக்கெட்நிறுவனம்எதிர்பார்த்துள்ளது.

ஆனால் தனது கணக்குத் தணிக்கை முடிந்த பின்னரே அப்பணம் இலங்கைக்கு வந்து சேரும் எனவும் இலங்கை கிரிக்கெட் வீரர்களுக்கு சம்பளம் வழங்குவது சிறிலங்கா கிரிக்கெட்டின் பொறுப்பு ஆகும் எனவும் ஐ.சி.சி. தெரிவித்துள்ளது.

இலங்கை அணி வீரர்களுக்கு சம்பளம் கிடைப்பதை உறுதிப்படுத்துவதில் உதவி கோரி சர்வதேச கிரிக்கெட் வீரர்கள் சங்கங்களின் சம்மேளனத்துடன் இலங்கை கிரிக்கெட் வீரர்கள் சங்கம் தொடர்பு கொண்டிருந்தது.

இந்நிலையில் இலங்கை அணியின் தென்னாபிரிக்க சுற்றுலா ஆரம்பமாகும் முன்னர் இவ் விவகாரத்தில் முன்னேற்றம் ஏற்படும் என தான் நம்புவதாக சர்வதேச கிரிக்கெட் வீரர்கள் சங்கங்களின் சம்மேளனத்தின் பிரதம நிறைவேற்றுஅதிகாரிடொனிஜரிஸ்கூறியுள்ளார்.

இலங்கை அணி வீரர்களின் சம்பள பாக்கியில் 40 சதவீதம் விரைவில் வழங்கப்படும் என விளையாட்டுத்துறை அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே கடந்த வாரம் நாடாளுமன்றத்தில் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# சம்பியன்ஸ் ஹொக்கி பெல்ஜியம் வெற்றி இந்தியா தோல்வி

(ஜோகனஸ்பேர்க்)

சம்பியன்ஸ் சாலஞ்ச் ஹாக்கி தொடரில் கோப்பை வெல்லும் வாய்ப்பை இந்திய அணி கடைசி நிமிடத்தில் கோட்டை விட்டது.

நேற்று முன்தினம் நடந்த பரபரப்பான இறுதிப்போட்டியில் பெல்ஜியத்திடம் 3:4 என்ற கோல் கணக்கில்தோல்வியடைந்தது.பெல்ஜியம் அணி சம்பியன் பட்டத்தை தட்டிச்சென்றது.

தென்னாபிரிக்காவில் உள்ள ஜோகனஸ்பேர்க் நகரில் சம்பியன்ஸ் சாலஞ்ச் ஹாக்கி தொடர் நேற்று முன்தினம் நடந்தது.

இறுதிப்போட்டியில் இந்திய-பெல்ஜிய அணிகள் மோதின. ஆட்டத்தின் ஒரு கட்டத்தில் இந்தியா 3:1 என வலுவான முன்னிலை பெற்றது.

இதையடுத்து இந்தியா வெற்றி பெறும் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் பெல்ஜியம் வீரர்கள் அடுத்தடுத்து தாக்குதல் நடத்தி அதிர்ச்சி மேல் அதிர்ச்சி கொடுத்தது.கோல் அடிக்க போட்டி 3:3 என சமநிலைக்கு வந்தது.

## திரில் வெற்றி

ஆட்டத்தின் கடைசி 70 வது நிமிடத்தில் பெல்ஜியம் வீரர் டாம் பூன் ஒரு கோல் அடித்து அணிக்கு திரில் வெற்றி தேடிதந்தார். பெல்ஜியம் அணி 4-3 என்ற கோல் கணக்கில் இந்தியாவை வீழ்த்தி கோப்பையை தட்டிச் சென்றது.

# மேற்கிந்தியத்தீவுகள் 16 ஓட்டங்களால் வெற்றி

இந்திய-மேற்கிந்தியத்தீவுகள் அணிகளுக்கிடை யிலான மூன்றாவது ஒருநாள் போட்டி அகமதாபாத்திலுள்ள சர்தார்வல்லபாய் படேல் மைதானத்தில் நேற்று நடைபெற்றது. நாணயச் சுழற்சியில் வென்ற இந்தியணித்தலைவர்சேவாக் முதலில் பந்து வீச்சை தேர்வு செய்தார்.

அதன்படி துடுப்பாட்டத்தை தொடங்கிய மேற்கிந்தியத்தீவுகள் அணியின் ஆரம்ப ஆட்டக்காரர்களாக சிம்மன்ஸ்-ஹயாட் களமிறங்கினர். சிம்மன்ஸ் ஒரு ஓட்டத்தை எடுத்திருந்தபோது வினய் குமார் பந்து வீச்சில் ஆட்டமிழந்தார்.

பின்பு ஹயாட்டுடன் ஜோடி சேர்ந்த மார்லன் சாமுவேல்ஸ் நிதானமாக ஆடினார். ஹயாட் 20 ஓட்டங்களை எடுத்திருந்த போது அபிமன்யூ மிதுன் பந்து வீச்சில் ஆட்டமிழந்தார். நிதானமாக ஆடி அரைச்சதம் கண்ட சாமுவேல்ஸ், 58 ஓட்டங்கள் எடுத்திருந்த போது அஸ்வின் பந்து வீச்சில் ஆட்டமிழந்தார்.

டரன் பிராவோ 26 ஓட்டங்கள் எடுத்திருந்த போது தசைப்பிடிப்பு ஏற்படவே ரிடையர்ட் ஹர்ட் முறையில் அரங்கு திம்பினார். தினேஸ் ராம்டீன் 38 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். அதிரடி காட்டிய பொல்லார்ட்டை தனது அட்டகாசமான பிடியால் வெளியேற்றினார் ரவீந்திர ஜடேஜா பொல்லார்ட்டின் கணக்கில் மேற்கிந்திய தீவுகள் அணிக்கு 28 ஓட்டங்கள் கிடைத்தது.

இதனையடுத்த களமிறங்கிய ஆந்த்ரே ரஸ்ஸலும், அணித்தலைவர் டரன் சமியும் இணைந்து கடைசிவரை ஆட்டமிழக்காமல் அந்தஅணியின் ஓட்ட எண்ணிக்கையை அதிரடியாக உயர்த்தினர். டரன் சமி 17 பந்துகளை சந்தித்து (2 சிக்ஸர்கள், 5பவுண்டரிகள் உட்பட) 41 ஓட்டங்களை குவித்தார். ரஸ்ஸல் தன்பங்கிற்கு 18 பந்துகளில் (2 சிக்ஸர்கள், 4 பவுண்டரிகள் உட்பட) 40 ஓட்டங்களை குவித்தார். கடைசி மூன்று ஓவர்களில் மட்டும் இந்திய அணியினர் (18 பந்துகளில்) 52 ஓட்டங்கள்ள விட்டுக்கொடுத்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

50 ஓவர் முடிவில் மேற்கிந்தியதீவுகள் அணி 5 விக்கெட் இழப்பிற்கு 260 ஓட்டங்களை குவித்துள்ளது. இந்திய அணி சார்பில் வினய் குமார் இரண்டு விக்கெட்டுக்களையும், உமேஷ் யாதவ், அபிமன்யூ மிதுன், ரவிச்சந்திரன் அஸ்வின் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

261 ஓட்டங்களை எடுத்தால் வெற்றியென்ற இலக்குடன் இந்திய அணி களமிறங்தியது. ஆரம்ப ஆட்டக்காரர்களாக பார்த்திப்படேலும், சேவாக்கும் களமிறங்கினர்.

தொடக்கமே இந்திய அணிக்கு பலத்த பேரிடியாக இருந்தது. ராம்போல் வீசிய முதல் ஓவரின் முதல்பந்தில் இந்திய அணியின் தலைவர் சேவாக், தான் சந்தித்த முதல் பந்திலேயே விக்கெட் காப்பாளரிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

அவரைத் தொடர்ந்து களமிறங்கிய காம்பீரும்ராம்போல்வீசிய அடுத்தபந்திலேயேஎல்.பி. டபிள்யூ ஆனார். இதனால் இந்திய அணி 8 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களை இழந்து பரிதாபகரமான நிலையில் இருந்தது.

தொடர்ந்து களமிறங்கிய ஹோலி-பட்டேல் ஜோடி மேற்கிந்தியத்தீவுகள் அணியின் பந்து வீச்சை நிதானமாகக் கையாண்டது. எனினும் மேற்கிந்தியத்தீவுகளின் அபாரமான பந்து வீச்சால் ஹோலி 20ஓட்டங்களை எடுத்த நிலையில் நரேன் பந்தில் எல்.பி.டபிள்யூ ஆனார். அவரைத் தொடர்ந்து பட்டேல் 39 ஓட்டங்களுக்கும் , ரெய்னா 2 ஓட்டங்களுக்கும், ஜடேஜா 11 ஓட்டங்களுக்கும் அடுத்தடுத்து ஆட்டமிழந்தனர்.

முந்தைய இரண்டு போட்டிகளிலும் சிறப்பாக விளையாடிய ரோகித் சர்மா இந்தப் போட்டியிலும் தனது அபாரமான துடுப்பாட்டத்தை வெளிப்படுத்தினார். அவருடன் ஜோடி சேர்ந்து



அஸ்வினும் இந்திய அண்யின் ஸ்கோரை வெகுவாக உயர்த்தினர். மேற்கிந்திய அணியின் பந்துவீச்சை நேர்த்தியாக கையாண்டது இந்த ஜோடி.

சிறப்பாக விளையாடிய ரோகித் சர்மா 50 ஓட்டங்களை கடந்தார். அஸ்வின் 31 ஓட்டங்கள் எடுத்திருந்த நிலையில் நரேன் பந்தில் எல்.பி. டபிள்யூ ஆனார்.

அவரைத் தொடர்ந்து களமிறங்கிய வினய் குமாரும் தன்பங்குக்கு 3 ஓட்டங்களை எடுத்து ரோச் பந்து வீச்சில் விக்கெட்டைப் பறிகொடுத்தார். 51பந்துகளுக்கு 61ஓட்டங்கள் எடுக்க வேண்டும் என்ற இக்கட்டான நிலையில் இந்திய அணி தொடர்ந்து விளையாடியது. மறுமுனையில் சிறப்பாக விளையாடி வந்த ரோகித் சர்மா 95 ஓட்டங்கள் எடுத்திருந்த நிலையில் சமியால் ரன் அவுட் செய்யப்பட்டார். இதனால் இந்திய அணி தோல்வியை நோக்கி பயணமானது.

தொடர்ந்து கடைசி விக்கெட்டுக்காக களமிறங்கிய மிதுன்-உமேஷ் யாதவ் ஜோடியும் சிறப்பான ஆட்டத்தைவெளிப்படுத்தியது. மிதுன் சாமுவேல்ஸ் பந்தில் ஒரு சிக்ஸரும், நரேன் பந்தில் ஒரு சிக்ஸரும் விளாசினார். இறுதியில் 22 பந்துகளுக்கு 17 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற எளிமையான இலக்குடன் விளையாடிய இந்த ஜோடியில் மிதுன் 23 ஓட்டங்களை எடுத்த நிலையில் ராம்போல் வீசிய பந்தில் துரதிர்ஷ்டமாக எல்.பி.டபிள்யூ ஆனார்.

கடைசியில் இந்திய அணி 46.5 ஓவர் முடிபில் 244 ஓட்டங்கள் மட்டுமே எடுத்து அனைத்தது விக்கெட்டுகளையும் இழந்தது. இதனால்மேற்கிந்தியத்தீவுகள் அணி 16 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. யாதவ் 11ஓட்டங்களுடன் கடைசி வரை ஆட்டமிழக்கவில்லை.

மேற்கிந்தியத்தீவுகள் அணி தரப்பில் ராம்போல் 4 விக்கெட்டுகளும், நரேன் 2 விக்கெட்டுகளும், ரோச், சாமுவேல்ஸ் தலா ஒரு விக்கெட்டும் வீழ்த்தினர். சிறப்பாக பந்து வீசிய ராம்போல் ஆட்டநாயகனாக தேர்ந்தெடுக்கப்பட்டார். மேற்கிந்தியத்தீவுகள் அணி இந்த வெற்றியின் மூலம் 1:2 என்ற நிலையில் உள்ளது.

# மீனவர்கள் 8 பேருக்கு 19 வரை விளக்கமறியல்

(யாழ்ப்பாணம்)

இந்தியாவிலிருந்து இலங்கையின் நெடுந்தீவு கடற்பரப்பிற்கு போதைப்பொருள் கடத்தியதாகத் தெரிவிக்கப்படும் 8 மீனவர்களை எதிர்வரும் டிசம்பர் 19ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு மல்லாகம் நீதவான் எஸ்.கஜநிதிபால நேற்று திங்கட்கிழமை உத்தரவிட்டுள்ளார்.

இவர்களில் இலங்கை மீனவர்கள் மூவரும் இந்திய மீனவர்கள் ஐவரும் அடங்குகின்றனர்.

இவர்களிடம் இருந்து கைப்பற்றப்பட்டதாகக் கூறப்படும் ஹெரோயின் போதைப்பொருள் தொடர்பில் கொழும்பு இரசாயனப் பகுப்பாய்வு திணைக்களத்தின் அறிக்கையை நீதிமன்றில் சமர்ப்பிக்குமாறு பொலிஸாருக்கு நீதவான் உத்தரவிட்டார்.

இதேவேளை இந்திய மீனவர்களின் நலன்களை யாழ்.சிறையில் கவனித்துக் கொள்வது தொடர்பாக யாழ்ப்பாணத்திலுள்ள இந்திய உயர் ஸ்தானிகராலயம் சட்டத்தரணி மூலம் விண்ணப்ப மனு ஒன்றையும் நீதிமன்றில் சமர்ப்பித்துள்ளது.

இலங்கை மற்றும் இந்திய மீனவர்கள் சார்பாக சட்டத்தரணிகளான முடியப்பு றெமிடியஸ் மற்றும் என்.கிருஷ்ணவேணி ஆகியோர் நீதிமன்றில் ஆஜராகினர். (எ-5)

## மாதகலில்...

திட்டமிட்டு வருவதோடு எம்மை சொந்த இடங்களில் குடியேறவும் அனுமதி மறுத்து வருகின்றனர். இதனால் ஊர் மக்களாகிய நாம் பெரும் விசனமும் பேரதிர்ச்சியும் அடைந்துள்ளோம்.

எனவே ஒரு சிலரைத் தம் சொந்த இடங்களில் மீள்குடியேற்ற வழிவகுப்பதற்காக எம்மை ஒட்டுமொத்தமாக மீண்டும் இடம் பெயரவைப்பதையும் எமது வாழ்வாதாரம் பறிக்கப்படுவதையும் இட்டு வேதனைப்படுகின்றோம்.

1992ஆம் ஆண்டு அரச படையினர் மாதகலுக்கு வந்து சேரும் வரையும் நாமே குடியிருந்தோம்.

எமது தொழில்களை செய்து வாழ்ந்தோம். சமூக, சமயச் செயற்பாடுகளை நடத்தினோம்.

வடக்கு முழுவதிலும் விடுதலைப்புலிகள் நடமாடியதைப் போலவே எமது பிரதேசத்திலும் அவர்கள் நடமாடினர். ஆனால் முகாமிட்டிருக்கவில்லை.

நாம் இருந்த காலத்தில் அங்கு எப் பகுதியிலும் மிதிவெடிகள் புதைக்கப்பட்டிருக்கவில்லை. எங்களில் பலருக்கு அங்குள்ள காணிகளை விட வேறு எங்கும் காணிகள் இல்லை. நாம் எல்லோரும் மீன்பிடியையும் விவசாயத்தையுமே எமது வாழ்வாதாரமாக கொண்டவர்கள். எனவே நாம் வாழ அக் காணிகள் அத்தியாவசியமானவை என அந்த மகஜரில் குறிப்பிடப்பட்டிருந்தது.

இந்த விடயம் தொடர்பாக பிரதேச சபையின் தலைவர் கூறுகையில், மக்களின் காணிகளில் கடற்படையினர் முகாம் இடுவதை நாம் முற்றாக எதிர்ப்பதோடு அதை கண்டிக்கின்றோம்.

மக்களின் காணிகளை அவர்களிடம் மீட்டுக்கொடுக்க உரிய நடவடிக்கை எடுக்கவும் தயாராகவுள்ளோம் என அவர் தெரிவித்தார்.

இதேவேளை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மக்கள் தமது கைகளில், உலக மக்களே! பறிக்கப்படும் எமது குடிநிலங்களுக்காக குரல் கொடுங்கள், மக்களின் குடி நிலத்தை இராணுவ முகாம் ஆக்காதே, மகிந்த அரசால் மீட்கப்பட்ட எமது நிலம் மீள்குடியேற்றமின்றி மீண்டும் இராணுவ முகாமா? என எழுதப்பட்ட பதாகைகளையும் தாங்கி நின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (எ-6)

## ஐ.தே.க.தலை...

கட்சியின் தலைமைப் பதவிக்கு போட்டியிடுமாறு தன்னிடம் முன் வைக்கப்பட்ட பல கோரிக்கைகளைத் தொடர்ந்து நிராகரிக்க முடியாத நிலையில் தான் இருப்பதாக இவ்வறிக்கையில் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் தனது இந்த முடிபு தொடர்பில் பலவகைப் பிரச்சினைகளுக்கு முகங் கொடுக்க வேண்டிவருமென தானும் தனது ஆதரவாளர்களும் அறிந்துள்ளதாகவும் அவர் கூறினார். (எ-11)

## முறிந்த...

முறிந்து போனதாக கூறப்பட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடனான பேச்சுவார்த்தையை மீண்டும் ஆரம்பிக்க உள்ளதாக இலங்கை அரசாங்கம் அறிவித்துள்ளது.

இதன்படி இன்று பேச்சுவார்த்தை நடத்த வருமாறு இலங்கை அரசாங்கத் தரப்பு தமக்கு அழைப்பு விடுத்துள்ளதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் இந்த தகவலை நேற்று மாலை வெளியிட்டுள்ளார்.

இதன்போது இன்ப்பிரச்சினைத் தீர்வுக்கான வரைபுகள் குறித்து தமது தரப்பு அனைத்து விடயங்கள் தொடர்பிலும் அரசாங்கத் தரப்பினருடன் பேச்சு நடத்தவுள்ளது.

அதற்கு அரசாங்கம் தரும் பதிலைப் பொறுத்தே தமது தரப்பு அடுத்த கட்ட நடவடிக்கையை அறிவிக்கும் என்று சுரேஷ் பிரேமச்சந்திரன் குறிப்பிட்டார்.

கடந்த வாரம் இடம்பெற்ற இரண்டு தரப்பிற்கும் இடையிலான 15ஆவது சுற்றுப் பேச்சின்போது அரசாங்கம் இனப்பிரச்சினைத் தீர்வுக்காக தாம் அமைக்கவுள்ள நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் இடம்பெறுமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு அழைப்பு விடுத்தது.

எனினும் அதனை கூட்டமைப்பு நிராகரிக்கவே அதற்கு மேல் பேசிப்பயனில்லை என்று அரசாங்கத் தரப்பின் பேச்சுவார்த்தை பங்கேற்பாளரான அமைச்சர் ஜி.எல். பீரிஸ் தெரிவித்திருந்தார்.

இதனையடுத்து இரண்டு தரப்புக்கும் இடையிலான பேச்சு முறிந்து விட்டதாக கருதப்பட்டது. (எ)

# ரூ.50 இலட்சம் கோடி தங்கம் இந்தியர்களின் கையிருப்பில்!

அதிகமான தங்க ஆபரணங்களை வாங்குபவர்களாக இந்தியர்கள் இருக்கின்றனர்.

இந்தியர்களால் சேமித்து வைக்கப்பட்டிருக்கும் தங்கத்தின் மதிப்பு 95 ஆயிரம் கோடி டொலர்கள் அதாவது சுமார் 50 இலட்சம் கோடி ரூபாய்கள் என ஒரு ஆய்வு தெரிவிக்கின்றது.

இந்தியாவில் மக்கள் நகைகளாகவும் தங்கக் காசுகளாகவும் சொத்து வைத்திருக்கும், சேர்த்து வைத்திருக்கும் இந்த தங்கம் நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் சுமார் 50 சதவீதமாக இருக்கலாம் என்று சர்வதேச ஆய்வு நிறுவனமான மக்குவேரி தெரிவிக்கிறது.

இந்தியர்களின் தனிப்பட்ட சேமிப்பாக இருக்கும் தங்கம் உலகின் மொத்த தங்கக் கையிருப்பில் சுமார் 11 சதவீதமாக இருக்கும் என்றும் இந்த அறிக்கை கூறுகிறது.

ஒரு அலங்காரப் பொருள் என்ற அளவில் மட்டுமல்லாது, இப்போது பாதுகாப்பான சேமிப்புக் கருவி என்ற அளவிலும் தங்கத்தின் பயன்பாடு வளர்ந்துள்ளது.

ஆனால் இந்தியர்கள் சொந்த நிதி நெருக்கடி வரும்போது கூட தங்கத்தை விற்கத் தயங்குவதால், அவர்களிடம் முடங்கிக் கிடக்கும் இந்த தங்கத்தை இருப்பது போல கருதப்படும் செல்வம் என்றே அந்த அறிக்கை வர்ணிக்கிறது.

மேலும் இந்தியர்களின் தங்க மோகம், தங்கத்தின் விலை உயரும்போதுகூட குறையாது இருப்பதால், இந்திய ரூபாயின் மதிப்பு குறையவும் அது வழிவகுக்கிறது என்று அறிக்கை கூறுகிறது.

இந்தியாவின் நடப்புக் கணக்குப் பற்றாக்குறையில் 2008 முதல் 2011 வரையிலான 130 அடிப்படைப்புள்ளி அதிகரிப்பில், தங்க இறக்குமதியால் மட்டுமே 40 அடிப்படைப்புள்ளிகள் கிடைத்தன என்று மக்குவேரியின் அறிக்கை சொல்கிறது. (எ)

## இணையத்...

பட்ட இணையத்தளங்கள் தனிப்பட்டவர்களுக்கு அவதூறு ஏற்படும் வகையிலோ அல்லது தேசிய பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல் ஏற்படும் வகையிலோ செய்திகளை வெளியிடவில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இணையதளங்களை தடைசெய்வதன் மூலம் அடிப்படை உரிமை மீறப்பட்டுள்ளதாகும் உடனடியாக இந்தத் தடையை நீக்க வேண் டும் எனவும் மனுவில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை தடைசெய்யப்பட்ட இணையத்தளம் ஒன்றும் அடிப்படை உரிமை மீறல் மனுவொன்றை இலங்கையின் உயர் நீதிமன்றில் தாக்கல் செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ)

# பல்கலை மாணவன் இன்று நீதிமன்றில் ஆஜர்

கொழும்பு பல்கலைக்கழக விரிவுரையாளரை தாக்கியதாக குற்றம் சாட்டப்பட்டு டிசம்பர் 12 வரை தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ள அதே பல்கலைக்கழகத்தின் 3 ஆம் வருட மாணவன் இன்று கொழும்பு நீதவான் முன் ஆஜராக்கப்படவுள்ளார். சந்தேக நபர் புதிய மாணவனொருவரை பகிடிவதைக்கு உள்ளாக்குவதாக எண்ணி அவரை கண்டித்தபோதே இந்த பிரச்சினை எழுந்தது என சந்தேக நபரின் வழக்குரைஞர் கூறி, அவரை பிணையில் விடும்படி நீதிபதியை வேண்டினார்.

இந்த வேண்டுகோளை பரிசீலிக்க இன்று அந்த மாணவனை நீதிமன்றில் ஆஜர் செய்யும்படி நீதவான் சிறைச்சாலை அத்தியட்சகருக்கு பணித்துள்ளார். (எ-1)


மின் உபகரணங்கள் திருத்துதல்

T.V, Washing Machine, Fridge, Fan, Blender மற்றும் அனைத்து வீட்டு மின் உபகரணங்களும் உங்கள் வீட்டிற்கே வந்து திருத்திக் கொடுக்கப்படும். அத்துடன் வீட்டு வயறிங் திருத்த வேலைகளும் செய்து கொடுக்கப்படும்.

தொடர்பு :- 077 8000748

(6904)

கிறிஸ்ரல் சென்ரர்

திக்கம்

2012ஆம் ஆண்டுக் கல்வி

தரம் - 3 முதல் O/L வரை

ஆரம்பம்: 10.12.2011

மு.ப. 7.00 மணி

(6906)

விக்னேஸ்வரா கல்வி நிலையம்

பொற்பதி வீதி, கொக்குவில்

தரம் 9, 10, G.C.E(O/L) விஞ்ஞானம்

ஆசிரியர்: திரு. இரா. செல்வவடிவேல்

(6901)







மகளிருக்கான விடுமுறைகால வகுப்புகள்

- A/L முடித்துவிட்டு இருக்கும் மகளிரே!
- வீட்டிலிருந்தவாறே தொழில் புரிய விரும்பும் நங்கையரே!
- வெளிநாடு செல்லவிருக்கும் மங்கையரே!
- இல்லத்தரசிகளே! மற்றும் ஆர்வமுள்ள பெண்களே!

இதோ உங்களுக்காக

- முக அழகுக் கலை (Facial):-(B)பஞ்சாறாஸ் Saffron, Papaya, Neem மற்றும் Gold, சொக்கலேற், தமக்குத் தாமே Facial செய்தல் உட்பட 10 வகையானவை.
- Pedicure, Manicure (கைகள், கால்கள், விரல்கள், நகங்கள் அழகு படுத்துதல்)
- இந்து, கிறிஸ்தவ, இஸ்லாம் முறைகளில் மணப்பெண் அலங்காரம், வித்தியாசமான 6 முறைகளில் சேலை அணிதல்,

அழகு சாதனப் பொருட்களின் அறிமுகப்படுத்தல், செய்முறை தொடர்பான குறிப்புகள் (Notes) மற்றும் போதிய விளக்கங்களுடனான செயன்முறைப் பயிற்சிகள்.

முடி சீராக்குதலும் கூந்தல் வடிவமைப்புகளும் (HAIR DRESSING & STYLING)

- 50 வகையான கொண்டைகள் போடுதல், முடி அயன் செய்தல், (Straightening) முடி சுருட்டுதல், முடி நிறமூட்டுதல், 3 வித முடி வெட்டுதல்கள். தமக்குத்தாமே முடி வெட்டுவதற்கான பயிற்சி, Perming, தலைக்கு எண்ணை மசாஜ் செய்தல்.

மேற்படி பயிற்சிகளின் முடிவில் சான்றிதழ்கள் வழங்கப்படும்.

- தையல் தெரிந்தவர்களுக்கான சாறிபிளவுஸ், சுரிதார், Skirts, சட்டைகள் தைக்கும் சான்றிதழ் அற்ற பயிற்சிகள்

மேற்படி பயிற்சிகளுக்கு வயதெல்லை கிடையாது

ஆரம்பம் - 12-12-2011 திங்கள் காலை 9.00 மணி

கலாலயா பயிற்சியகம் 1985-2011

பெருமாள் கோயிலுக்கு அண்மையில் - யாழ்ப்பாணம்

மேலும் விபரங்களை பி.ப 4.00 மணி வரை நேரில் அறிந்து கொள்ளலாம்.

அடகு நகைகளை மீட்பதற்கு மீண்டுமோர் அரிய சந்தர்ப்பம்...!

பவுணுக்கு அதிக பணம் தரும் வங்கி / நிறுவனத்திற்கு மாற்றி உங்கள் நகைகளில் பெறுமதிக்கு கூடுதல் பணம் பெறப்போகிறீர்களா?

குறைந்த வட்டிவீதம் தரும் வங்கி/நிறுவனத்திற்கு உங்கள் நகைகளை மாற்றி வைக்கப்போகிறீர்களா?

அடகு வைத்துள்ள உங்கள்நகைகளுக்கு ஏல விற்பனை கடிதம் வந்து விட்டதா ? அவற்றை மீட்டு கூடுதல் பவுண் பெறுமதிக்கு விற்கப்போகிறீர்களா?

உங்களுக்கு உதவ நாம் தயாராக இருக்கிறோம். இன்றே அழையுங்கள் 0774050936

சேவைக்கட்டணம் அறவிடப்படும்.

(6873)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3.2 ஆம் ஒழுங்கை, பிறவுண் ரோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 06.12.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.